பொழிவு - 19
குவிப்பு - 06
பக்கங்கள் - 16
விலை ரூபா 40.00
யூன் - 2016
(ISSN 1800-2641)
Registered as a News Paper


# மன்னா

MANNA மன்னார் மறைமாவட்டத்தின் தமிழ் கத்தோலிக்க மாதாந்தப் பத்திரிகை மன்னா

THE TAMIL CATHOLIC MONTHLY PUBLISHED BY THE DIOCESE OF MANNAR - Social Communication Center, Manna Paper Office, St.Joseph's Road, Mannar, Sri Lanka.
Telephone No : 023-2250789 / 023-3233276 / 0777420811 Fax No - 0232250789, E. Mail : nesanmnr@gmail.com.
"Registered in the Department of Posts of Sri Lanka under No. QD / 167 / News / 2016"

## பணமும் பதவியும் திருச்சபையை அழுக்கடையச் செய்கின்றன!

### உலகாயுதச் சோதனைகளைக் கிறிஸ்தவர்கள் வெற்றிகொள்ள வேண்டும் – திருத்தந்தை பிரான்சிஸ் –



இயேசு சுட்டிக்காட்டும் பாதை, பிறருக்குத் தொண்டுபுரியும் பாதையாக இருக்க, திருச்சபை அடிக்கடி பணம், அதிகாரம் மற்றும் பெருமையைத் தேடுகின்றது எனத் திருத்தந்தை பிரான்சிஸ் தெரிவித்துள்ளார்.

வத்திக்கானில், தான் தங்கியிருக்கும் சாந்தா மார்த்தா இல்லச் சிற்றாலயத்தில் கடந்த மே 17ஆம் திகதி காலை நிறைவேற்றிய திருப்பலியின் மறையுரையில், திருச்சபையைப் பிளவுபடுத்தும் உலகாயுதச் சோதனைகளைக் கிறிஸ்தவர்கள் வெற்றிகொள்ள வேண்டுமென்று திருத்தந்தை கேட்டுக்கொண்டார்.

இயேசுவின் சீடர்கள், தங்களில் யார் பெரியவர் என்பதுபற்றி வாதாடியது குறித்துப் பேசும் அன்றைய நற்செய்தி வாசகம் (மாற் 9:30-37) மற்றும் முதல் வாசகத்தை (யாக் 4:1-10) தனது மறையுரைக்குக் கருவாக வைத்து உரையாற்றிய திருத்தந்தை இவ்வாறு கூறினார்.

நாம் உயரே செல்ல வேண்டுமென்பதற்காகப் பிறரை அழிக்கும் சோதனைக்கு நாம் உட்படுகிறோம். இந்த உலகாயுத உணர்வு, கடவுளின் எதிரி என்றும், இது இயேசுவின் உணர்வு அல்ல என்றும், இது திருச்சபையைப் பிரிக்கின்றது என்றும் திருத்தந்தை வலியுறுத்தினார்.

(தொடர்ச்சி 14ஆம் பக்கம்)

## தேவன்பிட்டி பங்கு உதயத்தின் 25வது ஆண்டு வெள்ளி விழா



தேவன்பிட்டி பங்கு உதயத்தின் 25வது ஆண்டு நிறைவு வெள்ளி விழாவும், புனித சவேரியார் ஆலயத் திருவிழாவும் கடந்த மே மாதம் 23ஆம் திகதி திங்கட்கிழமை இடம்பெற்றது.

அன்றைய தினம் காலை 6.30 மணிக்கு இடம்பெற்ற யூபிலிப் பெருவிழாத் திருப்பலியை மன்னார் மறைமாவட்ட அப்போஸ்தலிக்கப் பரிபாலகர் மேதகு கிங்ஸ்லி சுவாம்பிள்ளை ஆண்டகை அவர்கள் தலைமைதாங்கி கூட்டுத் திருப்பலியாக ஒப்புக்கொடுத்தார்.

திருப்பலியின் பின்னர் நடைபெற்ற சிறப்பு நிகழ்வில் அதிதிகள் பலரும் உரையாற்றினர். இந்நிகழ்வின்போது தேவன்பிட்டி பங்கில் பணியாற்றி இறைபதம் அடைந்த அருட்தந்தையர்கள் சகாயநாதன் மற்றும் பாக்கியறஞ்சித் ஆகியோருக்கு அஞ்சலி செலுத்தப்பட்டது. யூபிலி விழாவில் பல குருக்கள், அருட்சகோதரிகள் அயல் பங்குமக்கள் என ஏராளமானோர் பங்கெடுத்தனர். (இச்செய்தியின் தொடர்ச்சி மற்றும் மேலதிக படங்களை 14ஆம் பக்கத்தில் காணலாம்)

## மடு அன்னையின் ஆடித் திருவிழா



மடு அன்னையின் ஆடித் திருவிழா இவ்வாண்டும் வழமைபோல் நடைபெறவுள்ளது. யூன் மாதம் 23ஆம் திகதி கொடியேற்றத்துடன் நவநாள்கள் ஆரம்பிக்கப்படும். யூலை மாதம் 1ஆம் திகதி மாலை 6.15 மணிக்கு வேஸ்பர் நற்கருணை ஆராதனையும், 2ஆம் திகதி காலை 6.15 மணிக்கு திருவிழாத் திருப்பலியும் இடம்பெறும். இவ்விழாவிற்கான பூர்வாங்க ஏற்பாடுகள் மடுப்பரிபாலகர் அருட்பணி. எஸ். ஏமிலியானுஸ்பிள்ளை அடிகளார் தலைமையில் மன்னார் மறைமாவட்டக் குருக்களின் ஒத்துழைப்போடு இடம்பெற்று வருகின்றன.

## பாப்பரசர் தினம் யூன் 19



மையப் பொருள் :
"திருத்தந்தையே! இறைவனுடைய இரக்கத்தின் பிரகாசமாய் இருப்பீராக!"

"Holy Father, be the radiance of God's compassion"

நமது அன்புக்குரிய திருத்தந்தையின் உடல், உள, ஆன்மீக நலன்களுக்காகவும், அவருடைய கருத்துகளுக்காகவும் செபிப்போம்!

## ஆலயத்துக்குச் செல்வது ஆயுளை நீடிக்கிறது!

### ஆய்வு முடிவு தரும் தகவல்

வாரத்துக்கு ஒரு தடவை ஆலயத்துக்குச் சென்று பிரார்த்தனையில் ஈடுபடுவது இருதய நோய் மற்றும் புற்றுநோய் பாதிப்பு அபாயத்தைக் குறைத்து ஆயுளை நீடிப்பதாக அமெரிக்க ஹவார்ட் பொது சுகாதார பாடசாலையைச் சேர்ந்த மருத்துவ ஆய்வாளர்கள் தெரிவிக்கின்றனர்.

இந்த ஆய்வானது 20 வருட காலப்பகுதியில் தேவாலயங்களுக்குச் சென்று வழிபாட்டில் ஈடுபடுவதை வழக்கமாகக்கொண்ட சுமார் 75,000 பேரை உள்ளடக்கி மருத்துவ கலாநிதி ரைலர் வண்டர்வீலி தலைமையிலான மருத்துவ நிபுணர்களால் மேற்கொள்ளப்பட்டது. இதன்போது தேவாலயம் சென்று பிரார்த்தனையில் ஈடுபடாதவர்களுடன் ஒப்பிடுகையில் பிரார்த்தனையில் ஈடுபடுபவர்கள் மத்தியில் முன்கூட்டியே மரணம் அடையும் நிலை மூன்றில் ஒருபங்கு குறைவாக இருப்பது கண்டறியப்பட்டுள்ளது. அதே சமயம் பிரார்த்தனையால் ஆண்களைவிடவும் பெண்களே ஆரோக்கிய ரீதியில் அதிக நன்மையைப் பெற்றுள்ளமை தமது ஆய்வில் கண்டறியப்பட்டுள்ளதாக ஆய்வாளர்கள் தெரிவிக்கின்றனர்.

பிரார்த்தனையில் ஈடுபடாதவர்களுடன் ஒப்பிடுகையில் வாரம் ஒரு தடவை பிரார்த்தனையில் ஈடுபட்டவர்கள் மத்தியில் இருதய நோயால் ஏற்படும் மரணங்கள் 27 சதவீதம் குறைவாகவும் புற்றுநோயால் ஏற்படும் மரணங்கள் 21 சதவீதம் குறைவாகவும் உள்ளதாக ஆய்வாளர்கள் கூறுகின்றனர்.

## "இயற்கை வளத்தை வளமாகப் பயன்படுத்தி, வளமாக வாழ்வோம்"

### வாழ்வுதயம் மற்றும் அடம்பன் மத்திய ம.வி. இணைந்து நடாத்திய விவசாய, கற்றல் உபகரணக் கண்காட்சி





மன்னார் கறிற்றாஸ் - வாழ்வுதயம் மற்றும் அடம்பன் மத்திய மகா வித்தியாலயம் இணைந்து நடாத்திய விவசாய, கற்றல் உபகரணக் கண்காட்சி கடந்த மே மாதம் 25, 26ஆம் திகதிகளில் மன்/ அடம்பன் மத்திய மகா வித்தியாலயத்தில் இடம்பெற்றது. இந்நிகழ்விற்குப் பிரதம விருந்தினராக மன்னார் மறைமாவட்ட அப்போஸ்தலிக்க பரிபாலகர் மேதகு கிங்ஸ்லி சுவாம்பிள்ளை ஆண்டகை அவர்கள் கலந்துகொண்டார்.

சிறப்பு விருந்தினர்களாக கறிற்றாஸ் - இலங்கை (செடேக்) தேசிய இயக்குனர் அருட்பணி. ஜோர்ச் சிகாமணி, மன்னார் உதவி மாவட்டச் செயலாளர் திருமதி ஸ்ரான்லி டிமெல், மன்னார் வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி. செபஸ்ரியான் சுகந்தி, மடு வலயக் கல்விப் பணிப்பாளர் திரு. ரி. ஜோண் குயின்ரஸ் ஆகியோர் கலந்துகொண்டனர்.

நிகழ்வின் முதல் நாள் அன்று இடம்பெற்ற ஆரம்ப வைபவத்தின்போது காலை 9.00 மணியளவில் விருந்தினர்கள் மாலை அணிவித்து வரவேற்கப்பட்டு, சின்னம் சூட்டப்பட்டனர். பின்னர் கண்காட்சி நிகழ்வு நாடா வெட்டி திறந்துவைக்கப்பட்டது. (தொடர்ச்சி 14ஆம் பக்கம்)

## திருத்தந்தை - இஸ்லாமியத் தலைவர் பேச்சுவார்த்தை




கெய்ரோவின் அல் - அசார் மசூதியின் பெரிய தலைவரான அகமட் முகமது அல் - தாயிப் அவர்கள், திருத்தந்தை பிரான்சிஸ் அவர்களை கடந்த மே 23ஆம் திகதி திருப்பீடத்தில் சந்தித்துப் பேசினார். திருப்பீடத்திற்கும் புகழ்பெற்ற சுன்னிப் பிரிவு முஸ்லிம்களின் கல்வி மையத்திற்கும் இடையே உறவுகள் மேம்படுவதன் அடையாளமாக இச்சந்திப்பு இடம்பெற்றது.

(தொடர்ச்சி 14ஆம் பக்கம்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மாந்தையில் முதல் சனிக்கிழமைகளில்
# சிறப்பு வழிபாடுகள்



மாந்தை லூர்து அன்னை திருத்தலத்தில் கடந்த யூன் மாதம் 4ஆம் திகதி சனிக்கிழமை இடம்பெற்ற மரியாயின் மாசில்லாத திருஇருதய விழாவிலிருந்து தொடர்ந்துவரும் ஒவ்வொரு மாதத்தின் முதல் சனிக்கிழமைகளிலும் திருச்செபமாலையும், சிறப்புத் திருப்பலியும், நற்கருணைப் பிரசன்னத்தில் அருங்கொடை வழிபாடும் மாலை 5.00 மணிக்கு இடம்பெறும் என மாந்தைப் பங்குத்தந்தை அருட்பணியாளர் சீமான் மரியதாசன் அடிகளார் தெரிவித்துள்ளார்.

மடு அன்னையின் ஆதி இருப்பிடமான மாந்தை லூர்து அன்னை திருத்தலம் கத்தோலிக்க மக்களுக்கு முக்கியமான, வரலாற்றுச் சிறப்புமிக்க ஓர் இடமாகும். இத்திருத்தலத்தை வளர்ப்பதற்கும், அபிவிருத்தி செய்வதற்கும் எதிராகப் பல்வேறு தடைகள், சவால்கள் இன்று காணப்படுகின்றது. இந்நிலையில் இத்திருத்தலத்தில் இடம்பெறும் வழிபாடுகளில் இறைமக்கள் பெருமளவில் கலந்துகொள்வதோடு, இத்திருத்தலத்தின் வளர்ச்சிக்கு பல்வேறு வழிகளில் பங்களிப்புச் செய்யுமாறும் வேண்டப்படுகின்றனர்.

# திருத்தந்தையின் போதனைகள்
## கிறிஸ்தவரின் அடையாள அட்டை
## நற்செய்தியின் மகிழ்வு

ஒரு கிறிஸ்தவர் மகிழ்ச்சியாக இல்லாமல் இருக்க முடியாது. ஏனென்றால் வாழ்வில் துன்பங்களில்கூட இயேசுவை எப்படிச் சார்ந்திருப்பது மற்றும் நம்பிக்கையோடு எப்படி வாழ்வது என்பதை கிறிஸ்தவர் அறிந்திருக்கிறார் என திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் கடந்த மே 23ஆம் திகதி அன்று கூறினார்.

சாந்தா மார்த்தா இல்லச் சிற்றாலயத்தில் அன்று காலை நிறைவேற்றிய திருப்பலியில் புனித பேதுருவின் முதல் மடலிலிருந்து எடுக்கப்பட்ட முதல் வாசகத்தை (1 பேதுரு 1:3-9) மையப்படுத்தி மறையுரையாற்றிய திருத்தந்தை இவ்வாறு கூறினார்.

நாம் பல்வகைச் சோதனைகளால் துயருறவேண்டியிருப்பினும் கடவுள் நம்மில் வைத்துள்ள மகிழ்வை ஒருபோதும் எடுத்துவிட இயலாது. ஏனென்றால் நாம் கிறிஸ்துவில் புதுப்பிறப்படைந்துள்ளோம் மற்றும் நம்பிக்கை நமக்கு அளிக்கப்பட்டுள்ளது என்றும் திருத்தந்தை கூறினார்.

இயேசுவால் மீண்டும் புதுப்பிறப்படைந்து அவரால் மீட்கப்பட்டு, அவரால் தேர்ந்தொடுக்கப்பட்டுள்ளோம் என்ற நற்செய்தியின் மகிழ்வு கிறிஸ்தவரின் அடையாள அட்டை என்று கூறிய திருத்தந்தை, வாழ்வில் துன்பங்களிலும்கூட இயேசு எனக்காகக் காத்திருக்கிறார் என்ற நம்பிக்கையின் மகிழ்வு கிறிஸ்தவர்க்கு உள்ளது என்றும் கூறினார். இயேசு என்னோடு, எனக்காக இருக்கிறார் என்ற உறுதி அமைதியை அளிக்கின்றது என்றும் செல்வத்திற்குச் சேவை செய்வது இறுதியில் வருத்தத்தையே தரும் என்றும் தனது மறையுரையில் திருத்தந்தை கூறினார்.

இறுதியில் துன்பத்தைத் தரும் பொருள்களில் மகிழ்வைத் தோடாதீர்கள் என்று எச்சரித்த திருத்தந்தை கிறிஸ்தவர் என்பவர் ஆண்டவரில் மகிழ்பவர், வியப்பின் மனிதர் என்றும் தன் மறையுரையின் இறுதியில் குறிப்பிட்டார்.

# விளையாட்டின் உண்மையான விழுமியங்களைப் பிரதிபலியுங்கள்

விளையாட்டு வீரர்கள் விளையாட்டில் மட்டும் வீரர்களாக இல்லாமல் உடன்பிறப்பு உணர்வு, ஒருவரையொருவர் மதித்தல், புரிந்துகொள்தல், மன்னிப்பு போன்ற முக்கிய அறநெறி விழுமியங்களைத் தங்களின் வாழ்வில் வெளிப்படுத்தி வாழ்விலும் வீரர்களாக விளங்குமாறு கேட்டுக்கொண்டார் திருத்தந்தை பிரான்சிஸ்.

இத்தாலிய கால்பந்து விளையாட்டு அமைப்பின் இரு அணிகளின் முக்கிய பிரதிகள் மற்றும் விளையாட்டு வீரர்களை கடந்த மே மாதம் 20ஆம் திகதி திருப்பீடத்தில் சந்தித்து உரையாற்றிய திருத்தந்தை, இந்த வீரர்கள் தங்களின் இரசிகர்களுக்கு, சிறப்பாக இளையோர்க்கு எடுத்துக்காட்டாகத் திகழுமாறு வலியுறுத்தினார்.

விளையாட்டு வீரர்கள் விளையாட்டின் உண்மையான விழுமியங்களை எப்போதும் தங்களின் வாழ்வில் பிரதிபலிக்குமாறும் கேட்டுக்கொண்ட திருத்தந்தை நல்லிணக்கம், நேர்மை, நட்புறவு, உரையாடல், ஒருமைப்பாட்டுணர்வு போன்ற மனித மற்றும் அறநெறி மதிப்பீடுகளைப் பரவச்செய்வதிலே ஓர் அணியின் வெற்றி உள்ளது என்றும் கூறினார். வெறும் கால்பந்து விளையாட்டு வீரர்களாக மட்டும் இல்லாமல் முதலில் மனிதர்களாக தங்களின் மனச்சான்றின்படி வாழுமாறும் வலியுறுத்தினார்.

# நினைவுகூர்ந்து செபிப்போம்



நோபேட் அடிகளாரின் 7ஆம் ஆண்டு நினைவு
**யூன் 20**



விக்ரர் அடிகளாரின் 3ஆம் ஆண்டு நினைவு
**யூலை 04**

மன்னார் மறைமாவட்டத்தைச் சேர்ந்த அமரர் அருட்பணி. சீமான்பிள்ளை நோபேட் அடிகளார் இறைபதம் எய்திய 7ஆம் ஆண்டு நிறைவு (2009) யூன் மாதம் 20ஆம் திகதி ஆகும். அமதிகள் சபையைச் சேர்ந்த அருட்பணி. விக்ரர் குரூஸ் (அமதி) அடிகளார் இறைபதம் அடைந்த மூன்றாம் ஆண்டு நிறைவு (2013) யூலை மாதம் 4ஆம் திகதி ஆகும். இறையடி சேர்ந்த இக்குருக்களுக்காக இத்தினங்களில் சிறப்பாக வேண்டிக்கொள்வோம்.

# மன்னார் மறைமாவட்டம்
## திருவழிபாட்டு நாட்காட்டி - 2016

### ஆனி

01. புனித அந்தோனியார் திருவிழா - படகுதுறை, சிற்பியாறு.
03. இயேசுவின் திருஇருதயப் பெருவிழா - குருக்கள் மறைக்கோட்ட ரீதியில் ஒன்றுகூடி நற்கருணை வழிபாட்டில் ஈடுபடுவர்.
03. திருஇருதய ஆண்டவர் திருவிழா - முருங்கன் வைத்தியசாலைச் சிற்றாலயம்.
04. புனித நீக்கிலாஸ் திருவிழா - வாழ்க்கைப் பெற்றான்கண்டல்
05. தூய சதாசகாய மாதா திருவிழா - கல்நாட்டின குளம்
திருஇருதய ஆண்டவர் திருவிழா - புதிய வேலர் சின்னக்குளம் (ஓமந்தை).
13. புனித அந்தோனியார் திருவிழா - தள்ளாடி, வவுனியா, செட்டிகுளம், தட்சணாமருதமடு. பள்ளங்கோட்டை, கறுக்காக்குளம், கொக்குப்படையான், சிறுத்தோப்பு, துவரங்கேணி, பிடாரிகுளம், உவரி, கனகராயன்குளம், ஒலிமடு, சிறுக்கண்டல், நெடுங்கண்டல், ஆச்சிபுரம், தரவன்கோட்டை, மன்னார் டிப்போ, பெரியதம்பனை, கல்மடு, சுவாமிதோட்டம், கயுவத்தை, இலுப்பைக்கடவை, மணற்குளம், மருக்காரம்பளை.
16. திருஇருதய ஆண்டவர் விழா - வேப்பங்குளம் (இலுப்பைகுளம்)
17. தூய அந்தோனியார் திருவிழா - பொன்தீவுகண்டல், பாலைப்பெருமாள் கட்டு.
18. திருஇருதய ஆண்டவர் திருவிழா - இருதயபுரம்
19. பாப்பரசர் தினம்
புனித சவேரியார் திருவிழா - சிலாவத்துறை.
தூய அந்தோனியார் திருவிழா - பனிக்கர் புளியங்குளம் (ஓமந்தை), கூமாங்குளம்.
தூய அந்தோனியார் திருவிழா - கோவிற்குளம்.
20. அந்தோனியார் திருவிழா - சிறுக்கட்டு (செல்பெட்டி)
22. தூய அந்தோனியார் திருவிழா - முதலியார்குளம்
23. மடுத்திருப்பதியின் ஆடித்திருவிழாவிற்கான கொடியேற்றம் - நவநாள் ஆரம்பம்.
தூய அந்தோனியார் திருவிழா - மூன்றாம்பிட்டி
25. தூய அந்தோனியார் திருவிழா - சாவற்கட்டு
26. புனித இராயப்பர் திருவிழா - முறியாகுளம்
தூய அந்தோனியார் திருவிழா - அலைக்கல்லு போட்ட குளம் (ஓமந்தை), குருக்கள் புதுக்குளம்.
சதாசகாயமாதா - கோதாண்டர் நொச்சிகுளம்
திருஇருதய ஆண்டவர் திருவிழா - கபயன் குடியிருப்பு
27. திருஇருதய ஆண்டவர் திருவிழா - பரிகாரிகண்டல்
28. தூய அந்தோனியார் திருவிழா - பெரியகட்டு (பம்பைமடு)
29. புனித இராயப்பர் திருவிழா - உயிலங்குளம்

■ மாதத்தின் 2வது, 4வது சனி உபவாசத் தியானம் - தோட்டவெளி ஆன்மீக இல்லம்.

# அருட்தந்தை விக்ரன் அவிதப்பர்
## முதலாவது வருட நினைவு



அருட்தந்தை விக்ரன் அவிதப்பர் அடிகளார் நமது மண்ணைவிட்டு மறைந்தாலும் எமது மக்களின் இதயங்களில் என்றும் வாழ்ந்துகொண்டிருக்கிறார்.

இனித்த முகமும், இளமைப் பருவமும், இளகிய நெஞ்சமும், பணிந்த குணமும், பவள மேனியும், பாசங் கொண்ட கனிந்த பார்வையும், களங்கமில்லாப் பண்பும் கொண்ட குருவே! மனித பிறவியும் காணுமோ, உம்மைப்போல் ஒருவரை இனியும் இம்மாநிலத்தில்?

அருட்தந்தை அவர்களின் ஒருவருட நினைவுதினத்தில் மன்னார் மறைமாவட்டத்தில் வாழும் இறை மக்களும் வெளிநாட்டில் வாழுகின்ற இறைமக்களும் ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்து நிற்கின்றோம். அருட்தந்தை அவிதப்பர் அடிகளார் தனது 25 வருட குருத்துவப் பணி வாழ்க்கையில் ஆயர், குருக்கள், துறவியரின் நன்மதிப்பைப் பெற்றவர். தான் பணிபுரிந்த பங்குகளில் மக்களின் மனதை மாற்றி இறைவன்பால் திருப்பியவர். ஏழைகள்மேல் இரக்கம் கொண்டவர். மக்களின் குறைகளை அறிந்து உடனடியாகச் செயற்படுபவர்.

இவர் வங்காலையில் 2001 தொடக்கம் 2006 வரை பணிபுரிந்த காலத்தில் வங்காலை மக்களின் நல்அபிமானத்தையும், அன்பையும் நிறையப் பெற்றவர். குறிப்பாக பிரிவினைச் சபைகளுக்கு எதிராக முன்னின்று செயற்பட்டவர். 2006ல் வங்காலைக் கிராமத்தில் நடைபெற்ற மத விசுவாசப் போராட்டத்தில் 18 தடவைகள் குற்றவாளிக் கூண்டில் இயேசுவின் சாட்சியாக நிறுத்தப்பட்டவர். இப்படியான ஒரு நல்ல குருவை எமது மறைமாவட்டம் இழந்ததையிட்டு வெளிநாட்டிலும் உள்நாட்டிலும் வசிக்கும் கத்தோலிக்க கிறிஸ்தவ மக்கள் ஆழ்ந்த துயரடைந்துள்ளனர்.

மேலும் இவர் பிரிவால் துயருறும் இவருடைய அன்புத் தாயார், உற்றார் உறவினர்களுக்கும் இத்தினத்தில் ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்ளுகின்றோம். இவர் ஆன்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

உள்ளூர், வெளியூர் மக்கள் சார்பாக
S. எஸ். ஞானக்கோண்.
மார்க், வல்தம் MA,
பொஸ்ரன், அமெரிக்கா.

# மன்னாவை
## உடனடியாக விநியோகியுங்கள்


அன்பான மன்னா விநியோகஸ்தர்களே, உங்கள் கைக்கு மன்னா பத்திரிகை கிடைத்ததும் உடனடியாகவே அவற்றை உரியவர்களுக்கு வழங்குங்கள். சில விநியோகஸ்தர்கள் மன்னாவைக் காலதாமதமாகக் கொடுப்பதாக அறிகின்றோம்.

பங்கு மட்டத்தில் அல்லது வலய மட்டத்தில் பொறுப்பாக இருக்கும் பங்குத்தந்தையர்கள், அருட்சகோதரிகள், அல்லது பொதுநிலைப் பணியாளர்கள் இது விடயத்தில் அதிக அக்கறை செலுத்துமாறு கேட்டுக்கொள்கிறோம்.

உங்கள் கைக்கு பத்திரிகை கிடைத்ததும் உடனடியாக அவற்றை உரிய விநியோகஸ்தரிடம் ஒப்படைக்குமாறு அன்போடு கேட்டுக்கொள்கிறோம்.

**- மன்னா நிர்வாகம்.**

## உண்மை உறைக்கும் கமிலஸ்




## ஆக்கங்களை எதிர்பார்க்கின்றோம்

காலத்திற்குப் பொருத்தமான ஆக்கங்களை சுருக்கமாகவும், இறுக்கமாகவும் மன்னாவுக்கு எழுதி அனுப்புங்கள். தரம் கண்டு பிரசுரிப்போம்

*- மன்னா நிர்வாகம் -*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருத்தந்தையின் "அன்பின் மகிழ்வு" மடல் ஆசியத் திருஅவைக்கு மாபெரும் கொடை

## ஆசிய ஆயர் பேரவைகள் கூட்டமைப்பின் தலைவர் கர்தினால் ஒஸ்வோல்ட் கிரேசியஸ்



திருத்தந்தை பிரான்சிஸ் அவர்களின் 'அன்பின் மகிழ்வு' (Amoris Lactitia)" என்ற திருத்தூது அறிவுரை மடல், ஆசியச் சமுதாயத்திற்கும் குடும்பங்களுக்கும், ஆசியத் திருஅவைக்கும் மாபெரும் கொடை என்று கர்தினால் ஒஸ்வோல்ட் கிரேசியஸ் அவர்கள் கூறியுள்ளார். ஆசிய ஆயர் பேரவைகள் கூட்டமைப்பின் தலைவரும், இந்திய இலத்தீன் வழிபாட்டுமுறை ஆயர்கள் பேரவைத் தலைவரும், மும்பைப் பேராயருமான கர்தினால் கிரேசியஸ் அவர்கள் இரக்கத்தின் யூபிலி ஆண்டில் இம்மடல் வெளிவந்திருப்பதால், இது இன்னும் சிறந்த கொடையாக உள்ளது என்று கூறினார்.

இம்மடல் குறித்து, ஆசியச் செய்தி நிறுவனத்திடம் பேசிய கர்தினால் கிரேசியஸ் அவர்கள், இந்தியத் தலத்திருஅவைக்கு இது விலைமதிப்பில்லாத கொடை என்றார். ஒதுக்கப்பட்ட நிலையில் வாழும் மக்களைத் தேடிச்சென்று, அவர்களுக்கு மேய்ப்புப் பணியாற்றுவதை ஊக்குவிப்பதன் வழியாக, இரக்கம் மற்றும் கனிவென்ற மருந்தை நடைமுறைப்படுத்துவதற்கு இம்மடல் ஓர் அழைப்பாக உள்ளது என்றும் அவர் கூறினார். ஆசியாவில், பாரம்பரியமாகவே குடும்பங்கள் மிகவும் ஒன்றித்திருக்கின்றன என்றும், திருத்தந்தை குடும்பங்களை சமூக அக்கறையோடு இணைத்துப் பேசியுள்ளார் என்றும், சமூகங்கள் குடும்பங்களுக்கு ஆதரவு வழங்கினால் மட்டுமே குடும்பங்கள் செழிக்க முடியும் என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

## கச்சதீவில் புதிய ஆலயத்துக்கு அடிக்கல்



கச்சதீவில் ஒரு கோடி ரூபா செலவில் புதிய ஆலயம் அமைப்பதற்கான அடிக்கல் நடும் நிகழ்வு கடந்த மே மாதம் 09ஆம் திகதி இடம்பெற்றது. இந்த நிகழ்வில் யாழ். மறைமாவட்டக் குருமுதல்வர் அருட்பணி. ஜோ. ஜெபரட்ணம் அவர்கள் கலந்துகொண்டு அடிக்கல் நட்டுவைத்துள்ளார்.

இந்த ஆண்டு கச்சதீவு புனித அந்தோனியார் திருவிழா இடம்பெற்றபோது, அதில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவித்திருந்த யாழ். ஆயர் யஸ்ரின் ஞானப்பிரகாசம் ஆண்டகை விரைவில் கச்சதீவில் புதிய ஆலயம் அமையும் என்று குறிப்பிட்டிருந்தார். இதற்கமையவே புதிய ஆலயம் அமைப்பதற்கான அடிக்கல் நாட்டு விழா இடம்பெற்றுள்ளது.

யாழ். மறைமாவட்டக் குருமுதல்வருடன் இணைந்து நெடுந்தீவுப் பங்குத்தந்தை அருட்திரு. ஜெயரஞ்சன், உதவிப் பங்குத்தந்தை நிக்ஸன் கொலின், வடக்கு மாகாணக் கடற்படை கட்டளைத் தளபதி பி.எஸ்.டி. சில்வா, பிரதிக் கட்டளைத் தளபதி ஆகியோரும் ஆலயத்துக்கான அடிக்கல்லை நட்டனர்.

கச்சதீவு புனித அந்தோனியார் ஆலயத்துக்கான கட்டட வேலைகள் அனைத்தையும் கடற்படையினரே பொறுப்பேற்று மேற்கொள்ள உள்ளனர். ஆலயமானது நெடுந்தீவுப் பங்குத்தந்தை அருட்திரு. ஜெயரஞ்சன் அடிகளாரின் நேரடிக் கண்காணிப்பில் நிர்மாணிக்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. இந்த நிலையில் அடுத்த வருடம் இடம்பெறும் கச்சதீவுத் திருவிழா புதிய ஆலயத்தில் இடம்பெறும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

## சீனாவின் மிக உயரமான ஆலயம் திறக்கப்பட்டுள்ளது

அன்னை மரியாவுக்கென அர்ப்பணிக்கப்பட்ட கடந்த மே மாதத்தில், சீனாவின் மிக உயரமான கத்தோலிக்க ஆலயம் ஒன்று புதிதாக அர்ச்சிக்கப்பட்டுத் திறக்கப்பட்டுள்ளது. இரண்டு ஆயர்களும் 50 அருள்பணியாளர்களும் கலந்துகொண்ட இந்த ஆலயத் திருநிலைப்பாட்டு விழாவில், ஏறத்தாழ 6000 கத்தோலிக்கர்கள் கலந்துகொண்டனர்.

(தொடர்ச்சி 14ஆம் பக்கம்)

## மன்னார் மறைமாவட்ட கத்தோலிக்க ஒன்றியம் அங்குரார்ப்பணம்

மேதகு மன்னார் ஆயர் அவர்களைப் போசகராகக் கொண்டு 'மன்னார் மறைமாவட்ட கத்தோலிக்க ஒன்றியம்' என்ற பெயரில் புதிய அமைப்பு ஒன்று கடந்த ஏப்ரல் மாதம் 13ஆம் திகதி மன்னார் ஆயர் இல்லத்தில் அங்குரார்ப்பணம் செய்யப்பட்டுள்ளது.

கத்தோலிக்க விசுவாசம், கலைகள், பாரம்பரியங்கள் போன்றவற்றைப் பாதுகாத்து வளர்த்தல், பல்வேறு துறைகளில் பணியாற்றும் கத்தோலிக்க விசுவாசிகளை ஒன்றுகூட்டி ஊக்கப்படுத்தல், அவசரகால நிலைமைகளிலே மக்களுக்கு உதவுவதற்கு நடவடிக்கை எடுத்தல், மன்னார் மாவட்டத்தில் கத்தோலிக்கர்களுக்கும், கத்தோலிக்க விசுவாசத்திற்கும் எதிராக வரும் சவால்களுக்கு முகம்கொடுத்தல், குருக்களுக்கு பக்கபலமாக இருந்து உதவுதல் போன்ற பரந்துபட்ட நோக்கங்களை முன்வைத்து இந்த அமைப்பு ஏற்படுத்தப்பட்டுள்ளது.

இந்த அமைப்பின் தலைவராக சட்டத்தரணி திரு. பி. அன்ரன் புனிதநாயகம் அவர்களும், துணைத்தலைவர்களாக இளைப்பாறிய காணி அபிவிருத்தி அலுவலர் திரு. ஏ. பிரான்சிஸ், சட்டத்தரணி திரு. எஸ். பிறிமுஸ் சிராய்வா, சட்டத்தரணி எஸ். ஜெபனேசன் லோகு ஆகியோரும், செயலாளராக இளைப்பாறிய நிர்வாக அலுவலர் திரு. ரி. பி. சிந்தாத்துரை அவர்களும் துணைச் செயலாளராக இளைப்பாறிய உதவிக் கல்விப் பணிப்பாளர் திரு. பி. அமலதாஸ் அவர்களும் தெரிவுசெய்யப்பட்டுள்ளனர்.

## காணாமல்போன அருள்பணியாளர்கள் குறித்த விபரங்கள் தேவை

### யாழ் மறைமாவட்டம் கோரிக்கை

இலங்கையில் நீண்ட காலமாக இடம்பெற்ற உள்நாட்டுச் சண்டையின்போது சந்தேகத்துக்குரிய சூழல்களில் காணாமல்போன கத்தோலிக்க அருள்பணியாளர்களுக்கு நடந்தது என்ன என்பது குறித்து அறிவிக்குமாறு அரசு அதிகாரிகளைக் கேட்டுள்ளது யாழ்ப்பாண மறைமாவட்டம்.

காணாமல்போயுள்ள அருள்பணியாளர்கள் குறித்த விபரங்களை அறிவிக்குமாறு நீதிமன்றம் மற்றும் இராணுவத்திடமிருந்து பதிலை எதிர்பார்ப்பதாகவும் இதுவரை எந்தத்தகவலும் அளிக்கப்படவில்லை எனவும் யாழ்ப்பான மறைமாவட்ட நீதி மற்றும் அமைதிப் பணிக்குழுத் தலைவர் அருள்பணியாளர் எஸ். வி. பி. மங்களராஜா அடிகளார் கூறினார்.

2006ம் ஆண்டில் பாதுகாப்புப் படைகளின் கடும் கட்டுப்பாட்டிலிருந்த அல்லைப்பிட்டிச் சோதனைச்சாவடியில் காணாமல்போன அருள்பணியாளர் ஜிம்பிறவுன், இன்னும் இராணுவத்திடம் சரணடைந்த அருள்பணியாளர் ஜோசப் பிரான்சிஸ் அடிகளார் ஆகிய இருவருக்கும் என்ன நடந்தது என்ற கேள்வியை எழுப்பியுள்ளார் அருள்பணி. மங்களராஜா அடிகளார்.

இலங்கையின் வடக்கு மற்றும் கிழக்குப் பகுதியில் 1983ம் ஆண்டு ஆரம்பித்து 2009ம் ஆண்டு மே 18ம் திகதி அதிகாரபூர்வமாக முடிந்த உள்நாட்டுச் சண்டையில் நான்கு கத்தோலிக்க அருட்பணியாளர்கள் காணாமற்போயுள்ளனர் மற்றும் பத்து அருள்பணியாளர்கள் கொல்லப்பட்டுள்ளனர்.

இலங்கையில் சண்டை முடிந்த கடைசி நாள்களில் மட்டும் குறைந்தது நாற்பதாயிரம் அப்பாவி மக்கள் கொல்லப்பட்டனர் என்று ஐ.நா கூறியது.

## மன்னார் முன்னாள் நகரபிதா ஞானப்பிரகாசம் காலமானார்



மன்னார் நகர சபையின் முன்னாள் தலைவரும், தமிழ்த்தேசியப் பற்றாளருமான திரு. எஸ். ஞானப்பிரகாசம் (அருமை) அவர்கள் கடந்த 15.05.2016 ஞாயிற்றுக்கிழமை அதிகாலை காலமானார். 1949ம் ஆண்டு பிறந்த அமரர் எஸ். ஞானப்பிரகாசம் மன்னார் பனங்கட்டுக்கொட்டு கிராமத்தைப் பிறப்பிடமாகக் கொண்டவர்.

இவர் மன்னாரில் நடைபெற்ற உள்ளுராட்சி மன்றத் தேர்தலில் ரெலோ சார்பாகத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் போட்டியிட்டு அதிகப்படியான வாக்குகளால் வெற்றியீட்டி 2011ம் ஆண்டு தொடக்கம் 2015ம் ஆண்டுவரை மன்னார் நகர பிதாவாகத் தெரிவுசெய்யப்பட்டிருந்தார்.

இவர் கடந்த 14.05.2016 அன்று சனிக்கிழமை பிற்பகல் திடீரென சுகவீனமுற்றதைத் தொடர்ந்து மன்னார் பொது வைத்தியசாலை அவசர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டிருந்தார். சிகிச்சை பலனளிக்காத நிலையில் 15.05.2016 அன்று ஞாயிற்றுக்கிழமை அதிகாலை வைத்தியசாலையில் காலமானார். மன்னார் ஆயர் அவர்களுடனும், குருக்களுடனும் சிறப்பான உறவைப் பேணிவந்த இவர் மக்கள் நலன் சார்ந்த பணிகளில் தன்னை ஈடுபடுத்திவந்த சிறந்த சமூக சேவையாளர் ஆவார்.

இவருடைய பிரிவால் துயருறும் குடும்பத்திற்கும் உறவுகளுக்கும் மன்னார் மறைமாவட்டத் திருச்சபையின் ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அன்னாரின் ஆன்மா இறைவனில் இளைப்பாற செபிக்கின்றோம்.

## புனித பிரான்சிஸ்கு சமாதான மறைபரப்பாளர் சபையைச் சேர்ந்த நான்கு சகோதரிகளுக்கு முதல் துறவற வார்த்தைப்பாடு





மன்னார் மறைமாவட்ட ஆயரின்கீழ் பணியாற்றும் புனித பிரான்சிஸ்கு சமாதான மறைபரப்பாளர் சபையைச் சேர்ந்த நான்கு சகோதரிகள் தமது முதல் துறவற வார்த்தைப்பாட்டை வழங்கும் நிகழ்வு கடந்த மே மாதம் 28ஆம் திகதி மன்னார் புனித செபஸ்தியார் பேராலயத்தில் இடம்பெற்றது.

மன்னார் மறைமாவட்ட அப்போஸ்தலிக்க பரிபாலகர் மேதகு கிங்ஸ்லி சுவாம்பிள்ளை ஆண்டகை அவர்கள் தலைமையில் இடம்பெற்ற திருப்பலிவேளையில் சகோதரிகள் மு. லோகறூபி, தீ. டென்சி, ஜோ. சுகன்யா கிருஷானி, சி. நிர்மலி ஆகியோர் தமது முதல் வார்த்தைப்பாட்டை இறைவனுக்கு வழங்கினர். இச்சபையின் ஸ்தாபகத் தலைவி அருட்சகோதரி றூபராணி ஜோசப் மற்றும் அருட்சகோதரி குமுதினி ஆகியோரின் உருவாக்கத்தில் வளர்க்கப்பட்ட இவர்கள் நவசந்நியாசப் பயிற்சியை பல்வேறு நிலைகளில் பெற்று தற்போது அருட்சகோதரிகளாக தமது அர்ப்பண வாழ்வை ஆரம்பித்துள்ளனர். இவர்களின் பணிவாழ்வு சிறக்க மன்னாவின் வாழ்த்துக்களையும் செபங்களையும் தெரிவிக்கின்றோம்.

## மன்னா சந்தாதாரர் கவனத்திற்கு!

மன்னா பத்திரிகைக்கான சந்தாப் பணத்தை செலுத்தாதவர்கள் காலம் தாமதிக்காமல் உடனடியாக உங்கள் சந்தாவை செலுத்தி எம்மோடு ஒத்துழையுங்கள்.

உங்கள் மன்னா சந்தாக் காலம் முடிவடையும் திகதி உங்களுக்கு தபால் மூலம் அனுப்பப்படும் மன்னா பத்திரிகையில் உங்கள் விலாசத்திற்குக் கீழே உள்ளது. எனவே அதைப் பார்த்து உங்கள் சந்தாவைப் புதுப்பித்துக்கொள்ளுங்கள். - மன்னா நிர்வாகம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### சர்வதேச மருத்துவர் சங்கத்தினால்

# வைத்திய கலாநிதி எஸ். லோகநாதன் கௌரவிக்கப்பட்டார்





அகில உலக சுகாதார தினத்தை முன்னிட்டு ஆங்கில, ஆயுர்வேத, சித்த, பரம்பரை வைத்திய, ஹோமியோபதி, அக்குபங்சர், மனோதத்துவ மருத்துவர்கள் ஒன்றுசேர்ந்து **சர்வதேச மருத்துவர்களின் சங்கத்தின்** மூலம் கொழும்பு பல்கலைக்கழகத்திற்கு அருகில் அமைந்துள்ள மேல்மாகாண கலாசார மண்டபத்தில் 25ஆவது வருடப் பட்டமளிப்பு விழா இடம்பெற்றது. இதில் வடமாகாணத்தின் மன்னாரிலிருந்து கலந்துகொண்ட சித்த மருத்துவ நிபுணர் வைத்திய கலாநிதி செல்வக்கண்டு லோகநாதன் அவர்களுக்குத் தங்கப்பதக்கம் அணிவிக்கப்பட்டு, தேசிய விருதுகளான **கீர்த்திஸ்ரீ, தேசபந்து, வைத்தியபிமானி** ஆகிய கௌரவப் பட்டங்களும் சர்வதேச விருதான **வைத்தியஜோதி பண்டித்** எனும் அதியுயர் விருதும் வழங்கிக் கௌரவிக்கப்பட்டது. இந்நிகழ்வுகளின் பதிவுகளை மேலே உள்ள படங்களில் காணலாம். இவ்விருதுகளைப் பெற்றுக்கொண்டமையைக் கௌரவிக்கும்முகமாக கடந்த 19.05.2016 அன்று மன், புனித சவேரியார் ஆண்கள் தேசிய பாடசாலையில் இடம்பெற்ற புனித டிலாசால் விழாவின்போதும் வைத்தியர் லோகநாதன் அவர்கள் பொன்னாடை போர்த்தி, மாலை அணிவித்துக் கௌரவிக்கப்பட்டார்.

# வன்னி பிரஜைகள் குழுக்களின் ஒன்றியம் அங்குரார்ப்பணம்

## தலைவராக அருட்பணி. இ. செபமாலை தெரிவுசெய்யப்பட்டார்

வவுனியா, மன்னார், முல்லைத்தீவு மாவட்டங்களை உள்ளடக்கிய வன்னிப் பிரஜைகள் குழுக்களின் ஒன்றியத்தின் அங்குரார்ப்பண நிகழ்வு முல்லைத்தீவு ஒட்டிசுட்டானில் நடைபெற்றது.

வவுனியா, மன்னார் பிரஜைகள் குழுவினரும் முல்லைத்தீவு மாவட்ட பிரஜைகள் உரிமைக்கான அமையமும் இணைந்து தமது செயற்பாடுகளை விஸ்தரிக்கும் நோக்கில், தமக்கான மாவட்ட இணைப்பை ஏற்படுத்தும்பொருட்டு "வன்னி பிரஜைகள் குழுக்களின் ஒன்றியம்" ஒன்றினை ஆரம்பித்துள்ளனர்.

வன்னிப் பிரதேசத்தில் உள்ள பிரச்சினைகள், அபிவிருத்தித் தேவைகள், காணாமல்போனோர் பிரச்சினைகள், அரசியல் கைதிகள் விவகாரம் உள்ளிட்ட பல பிரச்சினைகளுக்குக் கூட்டாக இணைந்து தீர்வைப்பெற, தமது செயற்திட்டங்களை முன்னெடுக்கும் வகையில் இவ் ஒன்றியம் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இந்த அமைப்பின் தலைவராக மன்னார் பிரஜைகள் குழுத்தலைவர் வணபிதா இ. செபமாலை அடிகளாரும், செயலாளராக வவுனியா பிரஜைகள் குழுச் செயலாளர் ஐ. யசோதரனும், உபசெயலாளராக வவுனியா பிரஜைகள் குழு உறுப்பினர் அ. சபேசனும், பொருளாளராக முல்லைத்தீவு



மாவட்ட பிரஜைகள் உரிமைக்கான அமையத்தின் தலைவர் பா. நவரட்ணமும் தெரிவுசெய்யப்பட்டுள்ளனர்.

அத்துடன் உறுப்பினர்களாக மன்னாரைப் பிரதிநிதித்துவப்படுத்தி அ. சகாயம், எஸ். புண்ணியலிங்கம் ஆகியோரும், வவுனியாவைப் பிரதிநிதித்துவப்படுத்தி தா. சலசலோசன், அ. ஜெயச்சந்திரன் ஆகியோரும் தெரிவுசெய்யப்பட்டுள்ளனர்.

# கிறிஸ்தவ வரலாற்றுச் சான்றுகளை சேகரித்துப் பாதுகாப்போம்!

வேதசாட்சிகளின் புண்ணிய பூமியில் பிறந்த மன்னார் கிறிஸ்தவர்களாகிய நாம், எமது முன்னோர் தமது இரத்தம் சிந்துதலினால் கட்டிக்காத்த கிறிஸ்தவ விசுவாசத்தை, அவ்விசுவாசத்தின் வரலாற்றுச் சான்றுகளை, தொடர்ந்து பாதுகாத்து, எமது வருங்கால இளம் சந்ததியினருக்கு கையளிக்க நாம் என்ன செய்துள்ளோம்?

இதற்காக மன்னார் மறைமாவட்டத்தில் உள்ள பங்குக் கோயில்களின் தோற்றம், வளர்ந்த வரலாறு போன்றவற்றை ஆதாரபூர்வமாக நிருபிப்பதற்காக, இந்த 21ஆம் நூற்றாண்டில் எம்மத்தியில் உள்ள சகல சான்றுகளையும் சேகரித்து அவற்றை அப்பங்குக்கோயிலின் அருகில் ஓர் கட்டிடத்தில் பேணிக்காக்க முன்வருவோமாக!

இச்செயற்பாட்டுக்காக முதிர்ந்த கிறிஸ்தவ விசுவாசிகளின் வாய்மூல விளக்கங்களை இறுவட்டுக்களில் பதிவுசெய்து பேணிக்காப்பதும் மேலும் சரித்திர ஆவணங்கள், கவிகள், பாடல்கள், சிலுவைகள், செபமாலைகள், கருங்கல் வெட்டுக்கல், குருக்கள் பாவித்த பூசை உடுப்புக்கள், நற்கருணைப்பேழைகள், பிரசங்கக்கூடுகள், கொடிக்கம்பங்கள், கொடிச்சீலைகள், பழமைவாய்ந்த கட்டிட இடிபாட்டுப் பொருட்கள், சுருபங்கள், ஆபரணங்கள், நூற்றாண்டு மலர்கள், செபப்புத்தகங்கள், பாமாலைகள், முத்திரைகள், நாணயங்கள், வரலாற்று ஆவணங்கள் போன்றவற்றை விசுவாசத்தில் வளர்ந்த கிறிஸ்தவ மக்களிடம் இருந்து சேகரிப்போமாக!

பங்குத்தந்தையரின் ஆலோசனையுடனும் ஒத்துழைப்புடனும், கிறிஸ்தவ விசுவாசம் கொண்ட சகல பங்குகளிலுமுள்ள மக்கள்மூலம் இப்பொருட்களை ஆய்வுசெய்து, பெயர் இடம் போன்றவற்றைப் பொறித்து, இப்பொருட்களை (அடையாளச் சின்னங்களை) பேணிக்காப்போமாக. உதாரணமாக இந்தியா அன்னை வேளாங்கண்ணியில் அமைந்துள்ள பழமைவாய்ந்த நூதனசாலைபோன்று நாம் இவற்றை ஏற்பாடு செய்யலாம்.

முதலில் பங்குத்தளங்களான தலைமன்னார், பேசாலை. தோட்டவெளி, ஓலைத்தொடுவாய், மன்னார் மாதா கோயில், புனித செபஸ்தியார் பேராலயம், குருசுக்கோயில், தள்ளாடி அந்தோனியார் கோயில், புகையிரத நிலைய இந்தியக் குருக்கள் வருகைதந்த கோயில், மாந்தை, அடம்பன், பறப்பாங்கண்டல், முருங்கன், நானாட்டான், அரிப்பு, பரப்புக்கடந்தான், பம்பைமடு, இறம்பைக்குளம் பெரியகட்டு அந்தோனியார், குஞ்சிக்குளம், கோமரசங்குளம் போன்ற பிரதான கோயில்களில் பங்குமக்களின் உதவியுடன் இவற்றை ஆரம்பிப்போம்.

இக்கன்னி முயற்சியால் எமது வருங்கால கிறிஸ்தவ சமூதாயம் கிறிஸ்தவ விழுமியங்களைப் பேணவும், வரலாற்றை அறிந்துகொள்ளவும், பல்கலைக்கழக மாணவர்கள் மற்றும் ஆய்வாளர்கள் வரலாற்றை ஆய்வுசெய்யவும் இவை பெரிதும் உதவியாக இருக்கும்.

இச்செயற்பாட்டை மன்னார் ஆயரின் ஆசீர்வாதத்துடனும், பங்குக் குருக்கள் மற்றும் பொதுநிலையினரின் ஒத்துழைப்புடனும் துரிதகதியில் ஆரம்பிப்பது நன்மை பயக்கும்.

இதைத்தொடர்ந்து ஏனைய பங்குகளிலும் ஏனைய மறைமாவட்டங்களிலும் இதுபோன்ற முயற்சிகளை அமுல்படுத்த முடியும். மன்னார் வேதசாட்சியின் மைந்தர்களாகிய நாம் இப்புனித பணியை இவ்வாண்டில் ஆரம்பிப்போமாக.

- திரு. சின்கிளேயர் பீற்றர், ஆய்வாளர், மன்னார்

# நாட்டு நடப்புக்கள்

## கடந்த மூன்று ஆண்டுகளில் 1,610 பேர் கொலை 6 ஆயிரம் வன்கொடுமைச் சம்பவங்கள்

நாட்டில் கடந்த மூன்று வருடங்களில் ஆயிரத்து 610 பேர் கொலைசெய்யப்பட்டுள்ளனர். 6 ஆயிரத்து 210 பாலியல் வன்கொடுமைச் சம்பவங்கள் இடம்பெற்றுள்ளன. இவ்வாறு சட்டம் ஒழுங்கு அமைச்சர் சாகல ரத்னாயக்க தெரிவித்தார்.

நாடாளுமன்றம் கடந்த மே மாதம் 18ஆம் திகதி அன்று பிற்பகல் ஒரு மணிக்கு சபாநாயகர் கரு ஜயசூரிய தலைமையில் கூடியது. சபாநாயகர் அறிவிப்பு, பொது மனுத்தாக்கல் முடிவடைந்த பின்னர் வாய்மூல விடைக்கான கேள்விச்சுற்று ஆரம்பமானது. இதன்போது 2013, 2014 மற்றும் 2015ஆம் ஆண்டுகளில் அறிக்கையிடப்பட்ட கொலைகள், கற்பழிப்புக்கள், திடீர் விபத்துக்களின் எண்ணிக்கை எவ்வளவு என்று கூட்டு எதிரணியின் நாடாளுமன்ற உறுப்பினர் உதய கம்மன்பல வினா எழுப்பியிருந்தார். அதற்குப் பதிலளிக்கையிலேயே அமைச்சர் மேற்படி தகவலை வெளியிட்டார்.

2013ஆம் ஆண்டில் 586 பேரும், 2014இல் 548 பேரும் 2015இல் 476 பேரும் கொலைசெய்யப்பட்டுள்ளனர். அத்துடன், கடந்த மூன்றாண்டுகளில் ஒரு இலட்சத்து 11 ஆயிரத்து 950 திடீர் விபத்துகள் இடம்பெற்றுள்ளன. இவற்றில் 13 ஆயிரத்து 580 பேர் உயிரிழந்துள்ளனர் என்று அமைச்சர் மேலும் தெரிவித்தார்.

## யாழில் 217 மது நிலையங்கள் பாடசாலைகளோ 448 மட்டுமே

யாழ் குடாநாட்டில் வாழும் 6 லட்சம் மக்களின் கல்விநிலைக்கு 448 பாடசாலைகள் உள்ளபோதும், மது விற்பனை நிலையங்கள் மாத்திரம் 217 உள்ளதாகப் புள்ளி விபரங்கள் கூறுவதாகத் தெரிவிக்கும் கல்வியியலாளர்கள் இந்த நிலைக்குக் கவலை தெரிவிக்கின்றனர்.

இந்த நிலை ஆரோக்கியமான நிலை அல்ல என்று தெரிவிக்கும் கல்வியியலாளர்கள், எதிர்காலத்தில் மது விற்பனை நிலையங்கள் அதிகரிக்கப்படுவதைத் தடுப்பதோடு மது விற்பனை நிலையங்களைக் குறைக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் கோருகின்றனர்.

# பேசாலையில் மினி சூறாவளி

நாட்டில் ஏற்பட்டிருந்த சீரற்ற காலநிலை காரணமாக கடந்த மே 17ஆம் திகதி அன்று மன்னார் பேசாலைப் பகுதியில் மினி சூறாவளி ஏற்பட்டது. சம்பவ இடத்துக்கு அரச அதிகாரிகள், அனர்த்த முகாமைத்துவ நிலையத்தைச் சேர்ந்த அதிகாரிகள் பலரும் வருகை தந்திருந்தனர்.

அவ்விடத்துக்கு விரைந்த வடமாகாண மீன்பிடி, போக்குவரத்து அமைச்சர் பா. டெனீஸ்வரன் சேத விபரங்களைப் பார்வையிட்டதோடு மக்களுடன் கலந்துரையாடி சேத விபரங்கள் குறித்துக் கேட்டு அறிந்துகொண்டார். அப்பொழுது மக்கள் தங்கள் வாழ்நாளில் இவ்வாறானதொரு அனர்த்தம் தங்கள் ஊருக்கு இடம்பெறவில்லை என்றும் முன்னொருபோதும் இடம்பெற்றதாக தாங்கள் அறியவில்லை என்றும் பல மில்லியன் ரூபா சொத்துக்கள் சேதமாகி உள்ளதாகவும் குறிப்பிட்டுள்ளனர்.

அங்கு கருத்துத் தெரிவித்த அமைச்சர், பாதிக்கப்பட்ட குடும்பங்கள் வறிய குடும்பங்களாக உள்ளமையினால் மன்னார் மாவட்ட மீன்பிடித் திணைக்களத்தின் அதிகாரிகள் விரைந்து நிவாரணங்களைப் பெற்றுக்கொடுப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமென்று கோரிக்கை விடுத்தார். மேலும் அனர்த்த முகாமைத்துவ நிலைய அதிகாரிகள், உத்தியோகத்தர்கள் மீனவர்களுக்குரிய பொலிஸ் முறைப்பாடு, சரியான சேத மதிப்பீடு, உரிய தரவுகளைப் பெற்றுக்கொள்வதற்கு ஆவன செய்தல் போன்றவற்றை மேற்கொள்ள வேண்டுமென்றும் இதன்மூலம் நிவாரணங்கள் பெற்றுக்கொள்ளும்போது ஏற்படும் சிரமங்களைத் தவிர்க்கமுடியும் என்றும் கேட்டுக்கொண்டார்.

பின்பு அனர்த்த முகாமைத்துவ நிலையப் பொறுப்பதிகாரி ரியாஸீடன் தொடர்புகொண்டு பேசிய அமைச்சர், இது ஒரு வரலாறு காணாத அனர்த்தம் எனவும் இதன்மூலம் பல மில்லியன் ரூபாய் இழப்பு ஏற்பட்டுள்ளது என்றும் இழப்பீடுகளை விரைந்து பெற்றுக்கொடுக்க வேண்டும் என்றும் கேட்டுக்கொண்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## ஆக்கங்களை எதிர்பார்க்கின்றோம்

காலத்திற்குப் பொருத்தமான ஆக்கங்களை சுருக்கமாகவும், இறுக்கமாகவும் மன்னாவுக்கு எழுதி அனுப்புங்கள். தரம்கண்டு பிரசுரிப்போம். - *மன்னா நிர்வாகம்* -

### மன்னார் மாவட்ட உதைபந்தாட்ட லீக்

# புதிய நிர்வாகத்தெரிவு

மன்னார் உதைபந்தாட்ட லீக்கின் பொதுக்கூட்டமும் புதிய நிர்வாகத்தெரிவும் கடந்த 15.05.2016 அன்று மன்னார் வை. எம். சி. ஏ. மண்டபத்தில் காலை 10.30 மணியளவில் இலங்கை உதைபந்தாட்ட சம்மேளன பிரதிநிதிகளும், உபதலைவர்களுமான பிறிகேடியர் காரியவாசம், திரு அந்தோனிப்பிள்ளை ஆகியோரின் தலைமையிலும் நேரடிக்கண்காணிப்பிலும் நடைபெற்றது.

புதிய நிர்வாகத்தின் தலைவராக திரு ஜி. ஏ. டேவிட்சன் (ஜெறாட்) அவர்களும், செயலாளராக திரு ப. ஞானராஜ் அவர்களும் பொருளாளராக திரு கே. கோல்டன் டெனி அவர்களும் தெரிவுசெய்யப்பட்டனர். உபதலைவர்களாக திரு சி. பி. மகிமைராஜ் அவர்களும் திரு ஜி. டிகோணிங் அவர்களும் திரு எஸ். ஆர். ஏ. பெர்ணாண்டோ அவர்களும் திரு ஜி. பிறேம்குமார் அவர்களும் திரு ஏ. யேசுராஜன் அவர்களும் தெரிவுசெய்யப்பட்டனர். உபசெயலாளராக திரு பி. சுவேந்திரன் அவர்களும், உபபொருளாளராக திரு ஜே. சியாம்சன் அவர்களும் தெரிவுசெய்யப்பட்டனர்.

இவர்களை எதிர்த்து எவரும் போட்டியிடாததால் தெரிவுகள் போட்டியின்றி சுமூகமாக நடைபெற்றன. இப்புதிய நிர்வாகமானது அடுத்துவரும் மூன்று ஆண்டுகளுக்கு தமது பணியை மேற்கொள்ளும் என்பதும் குறிப்பிடத்தக்கது.

- தகவல் : ப. ஞானராஜ், கௌரவ செயலாளர், மன்னார் உதைபந்தாட்ட லீக்

## சந்தாதாரர் கவனத்திற்கு!

மன்னா பத்திரிகைக்கான சந்தாப் பணத்தை செலுத்தாதவர்கள் காலம் தாமதிக்காமல் உடனடியாக உங்கள் சந்தாவை செலுத்தி எம்மோடு ஒத்துழையுங்கள். உங்கள் மன்னா சந்தாக் காலம் முடிவடையும் திகதி உங்களுக்கு தபால் மூலம் அனுப்பப்படும் மன்னா பத்திரிகையில் உங்கள் விலாசத்திற்குக் கீழே உள்ளது. எனவே அதைப் பார்த்து உங்கள் சந்தாவைப் புதுப்பித்துக் - கொள்ளுங்கள். - மன்னா நிர்வாகம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மன்னார் மறைமாவட்டச் செய்திகள்

# வங்காலைப் பங்கில் பீடப்பணியாளர்களுக்கு பணி ஆடை வழங்கிய நிகழ்வு




வங்காலைப் பங்கில் நாற்பதுக்கும் மேற்பட்ட புதிய பீடப்பணியாளர்களுக்கான பணி ஆடை வழங்கல் நிகழ்வு கடந்த 22.05.2016 அன்று ஞாயிறு திருப்பலியின்போது இடம்பெற்றது.

பங்கில் பீடப்பணியாளர்களாக இணைந்து ஆன்மீக உருவாக்கத்தினுள் பணிசெய்யும் உன்னத நிலையை ஊக்குவிக்குமுகமாகவும், பங்கில் சிறுவர்களை இப்பணிக்கு உள்வாங்கி, அவர்களை ஒழுக்கமும் தலைமைத்துவப் பண்பும் கொண்ட நல்ல பிரஜைகளாக உருவாக்குவதற்காகவும் இந்த முயற்சி வங்காலைப் பங்கில் முன்னெடுக்கப்பட்டது.

வங்காலைப் பங்குத்தந்தை அருட்பணியாளர் சீமான்பிள்ளை ஜெயபாலன் அடிகளாரின் திட்டமிட்ட முயற்சியினால் இந்நிகழ்வு இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது.

பீடப்பணியாளர் ஆடை வழங்கப்பட்ட மேற்படி நாற்பதுக்கும் மேற்பட்ட புதிய சிறார்கள் முன்கூட்டிய உருவாக்கற் பயிற்சிகள், தியானம், விளையாட்டுப் போட்டிகள், பரிசளிப்பு வைபவங்கள், யாத்திரைஸ்தலப் பயணங்கள் மற்றும் உள்ளூர் தென்பகுதிக்கான சுற்றுலாக்கள் போன்ற நிகழ்வுகளினூடாக வழிநடத்தப்பட்டனர். இவ்வாறான நிகழ்வுகளினூடாக இச்சிறுவர்கள் அறிவு, ஒழுக்கம், தலைமைத்துவம், ஆன்மீகம் போன்ற நல்விழுமியங்களில் வளர்க்கப்பட்டனர். இந்நிகழ்வுகளின் உச்சக்கட்டமாகவே கடந்த 22.05.2016 அன்று விசேட ஞாயிறு திருப்பலி வேளையில் இச்சிறார்களின் பெற்றோர் சகிதம் தூய வெள்ளை ஆடையுடன் திருப்பலியில் பக்தியுடன் கலந்துகொண்ட இச்சிறுவர்களுக்கு பீடப்பணியாளர் ஆடை அணிவிக்கப்பட்டது. இவர்கள் அர்ப்பணம் செய்துகொண்டதுடன் சான்றிதழ்களும் பெற்றுக்கொண்டனர். பெற்றோரிடமும், உறவினர்களிடமும் சிரம் பணிந்து ஆசீர் பெற்றுக்கொண்டனர்.

இம்முயற்சியை திட்டமிட்ட வகையில் மேற்கொண்டுவரும் பங்குத்தந்தை மற்றும் உதவிப்பங்குத்தந்தை அருட்பணியாளர் அமல்ராஜ் குரூஸ், அருட்சகோதரிகள், சிறுவர்களின் பயிற்சியாளராக கடமையாற்றிவரும் திரு லா. ஸ்ரீபன் குரூஸ் ஆகிய அனைவரும் பாராட்டுக்குரியவர்கள்.

**தகவல்:** S. சூசைநாயகம் றெவ்வல் (JP) செயலாளர், ஆலய அருட்பணிப் பேரவை, வங்காலை.

# சின்னப்பண்டிவிரிச்சானில் திருவிழா, நூல் வெளியீடு, நாட்டுக்கூத்து








கடந்த மே மாதம் 20ஆம் திகதி இடம்பெற்ற சின்னப்பண்டிவிரிச்சான் புனித பிரான்சிஸ் சவேரியார் ஆலயத் திருவிழாவையொட்டிய சிறப்பு நிகழ்வாக நூல் வெளியீடும், நாட்டுக்கூத்து நாடக நிகழ்வும் இடம்பெற்றது.

சின்னப்பண்டிவிரிச்சான் புனித பிரான்சிஸ் சவேரியார் ஆலயத் திருவிழா கடந்த மே மாதம் 15ஆம் திகதி கொடி ஏற்றத்துடன் ஆரம்பமாகியது. மே 20ஆம் திகதி இடம்பெற்ற திருவிழாத் திருப்பலியை குருமுதல்வர் அருட்பணி. விக்டர்சோசை அடிகளார் தலைமைதாங்கி ஒப்புக்கொடுத்தார். பண்டிவிரிச்சான் பங்குத்தந்தை அருட்பணி. சவுல்நாதன், தட்சனாமருதமடு பங்குத்தந்தை அருட்பணி. மதன்ராஜ் ஆகியோர் இணைந்து திருவிழாத் திருப்பலியை கூட்டுத்திருப்பலியாக நிறைவேற்றினர். தொடர்ந்து திருச்சுருபப் பவனியும் புனிதரின் சுருப ஆசீரும் வழங்கப்பட்டது. தொடர்ந்து அன்னதான நிகழ்வும் நடைபெற்றது.

அன்று மாலை 7.00 மணிக்கு செழுங்கலை வித்தகர் ஏ. டி. தேவதாஸ் அவர்களின் 'அழியாத தேகம்' என்ற புனித பிரான்சிஸ்கு சவேரியாரின் வரலாற்றைக்கொண்ட நாட்டுக்கூத்து நாடக நூல் வெளியீடும் அந்த நாடக அரங்கேற்றமும் நடைபெற்றது. இந்நிகழ்வில் சிறப்பு விருந்தினர்களாக மடுப் பிரதேச செயலாளர் திரு. சத்தியயோதி, மடுப் பரிபாலகர் அருட்பணி. எமில், விடத்தல்தீவு பங்குத்தந்தை அருட்பணி. செல்வநாதன், வவுனியா தேசிய கல்வியியற் கல்லூரியின் முன்னாள் தலைவர் திரு. பேணாட் ஆகியோர் கலந்துகொண்டனர். இந்நிகழ்வை அதிபர் திரு. ஏ. ஜெரால்ட் அல்மேடா அவர்கள் தலைமை தாங்கி நடத்தினார். பண்டிவிரிச்சான் பங்குத்தந்தை அருட்பணியாளர் சவுல்நாதன் அவர்கள் இந்நிகழ்வுகள் அனைத்தையும் சிறப்பாக ஒழுங்கமைத்திருந்தார். நாடக நூலின் அட்டையை மேலே காணலாம்.

**தகவல்:** திரு. ஏ. ஜெரால்ட் அல்மேடா செயலாளர், ஆலயசபை.

# கீளியன்குடியிருப்புப் பங்கில் மே தினச் சிறப்பு நிகழ்வுகள்







தொழிலாளர் தினமாகிய மே 1ஆம் திகதி இடம்பெற்ற மே தினத்தை சிறப்பிக்கும் முகமாக கீளியன்குடியிருப்புப் பங்கில் பல்வேறு நிகழ்வுகள் முன்னெடுக்கப்பட்டன. முதலில் பங்குத்தந்தை அருட்பணி. ரெறன்ஸ் குலாஸ் அவர்களினால் சிறப்புத் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டது. அதனைத் தொடர்ந்து பங்கு மேய்ப்புப் பணிச்சபையினரால் மே தின நிகழ்வுகள் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தன.

முதல் நிகழ்வாக ஆண், பெண் அனைத்து வயதினருக்குமான மரதன் ஓட்டம் நடாத்தப்பட்டது. அதனைத் தொடர்ந்து சகல வயதினரும் கலந்துகொள்வதற்கேற்ற பல்வேறு விளையாட்டு நிகழ்வுகள் நடைபெற்றன.

சிறப்பு நிகழ்வாக அருட்தந்தையர்களுக்கும், பங்கு மக்களுக்கும் இடையிலான கரப்பந்தாட்ட போட்டியும் நடைபெற்றது. மேதின தொடர் நிகழ்வாக மே மாதம் 8ஆம் திகதி இரவு இசையால் மக்களை வசப்படுத்த பங்கிலுள்ள பாடகர்களால் "இன்னிசை இரவு" எனும் பெயரில் இசை நிகழ்ச்சி நடத்தப்பட்டது. இந்நிகழ்வுகளுக்குப் பல அருட்தந்தையர்கள் வருகைதந்து பாடகர்களை உற்சாகப்படுத்தினர்.

# வவு/ புனித அந்தோனியார் ஆலயத்தில் கல்லறை ஆண்டவருக்குப் புதிய பேழை



வவுனியா இறம்பைக்குளம் புனித அந்தோனியார் ஆலயத்தில் கல்லறை ஆண்டவருடைய திருச்சுருபத்தை வைப்பதற்காக புதிதாக அமைக்கப்பட்ட அழகிய பேழையை (கூட்டை) கடந்த மே மாதம் 23ஆம் திகதி வவுனியா பங்குத்தந்தை அருட்பணி. எஸ். சத்தியராஜ் அவர்கள் ஆசீர்வதித்து திறந்துவைத்தார்.

உதவிப் பங்குத்தந்தை அருட்பணி. சாந்தன், ஆலய மேய்ப்புப்பணிச்சபை உறுப்பினர்கள் மற்றும் இறைமக்கள் ஆகியோர் இந்நிகழ்வில் கலந்துகொண்டனர்.

# வவுனியாப் பங்கில் முதன்நன்மை விழா





வவுனியா இறம்பைக்குளம் புனித அந்தோனியார் ஆலயத்தைச் சேர்ந்த சிறார்களுக்கான முதன்நன்மை விழா கடந்த மே மாதம் 08ஆம் திகதி அன்று சிறப்பாக இடம்பெற்றது. அன்று 63 சிறுவர்கள் முதன்நன்மை பெற்றனர்.

முதல்நன்மை விழாத் திருப்பலியை பங்குத்தந்தை அருட்பணி. சத்தியராஜ், உதவிப் பங்குத்தந்தை அருட்பணி சாந்தன், மன்னார் மறைமாவட்ட மூத்த குருவும் வவுனியா மண்ணின் மைந்தனுமான அருட்பணி. ஜே. பி. தேவராஜா, அருட்பணி. ஜெயசீலன், யேசுசபைக்குரு அருட்பணி. அன்ரன், அருட்பணி. ஸ்ரனி (அமதி) ஆகியோர் ஒப்புக்கொடுத்தனர். மறையுரையாற்றிய அருட்பணி. ஜெயசீலன் அடிகளார், நற்கருணைமீதான விசுவாசம், அதனைப் பெறுவதற்கான தூய்மை, நற்கருணையுடனான ஆழமான உறவு, அதனைப் பிரதிபலிக்கும் கிறிஸ்தவ வாழ்வு என்பவை பற்றி சிறுவர்களின் சிறிய உள்ளங்களில் ஆணித்தரமாகப் படியும்படியாக விளக்கிக் கூறினார். திருப்பலி முடிவிலே பங்குத்தந்தை முதன்நன்மை பெற்ற சிறுவர்களை வாழ்த்தி, இவர்களுக்கான ஆயத்த வகுப்புக்களை முன்னெடுத்த அருட்சகோதரி. சுபா, திருமதி. பொன்ராணி, செல்வி. பிறிசில்லா ஆகியோருக்கு நன்றி தெரிவித்தார். முதல்நன்மை பெற்ற பிள்ளைகளின் படங்களை மேலே காணலாம்.

## பங்குச் செய்திகளை அனுப்பிவையுங்கள்

உங்கள் பங்கில் நடைபெறும் முக்கிய செய்திகளை எழுதி பங்குத்தந்தையின் அனுமதியுடன், புகைப்படங்களுடன் மின்னஞ்சல் ஊடாக மன்னாவுக்கு அனுப்பிவையுங்கள். எமது மின்னஞ்சல் முகவரி: nesanmnr@gmail.com - மன்னா நிர்வாகம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# புனித அந்தோனியார் வாழ்க்கை வரலாறும் புதுமைகளும்



## வாழ்க்கை வரலாறு

போர்த்துக்கல் நாட்டின் லிஸ்பன் நகரில் பிறந்த புனித அந்தோனியார் தம் இறுதி நாட்களை இத்தாலி நாட்டின் பதுவை நகரில் செலவழித்ததாலும், இவரது கல்லறை பதுவையிலேயே இருப்பதாலும், இவர் 'பதுவை அந்தோனியார்' என்று அழைக்கப்படுகிறார். இவரது திருமுழுக்குப் பெயர் பெர்டினாண்ட். இவர் கப்புச்சின் சபையில் சேர்ந்தபோது இவருக்கு முன்னோடியாக விளங்கிய தவமுனிவர் (பெரிய) அந்தோனியாரின் பெயராகத் தமது பெயரை மாற்றிக்கொண்டார்.

பிரபு குலத்தில் தோன்றிய இவர், 15 வயதில் அகஸ்டினியன் துறவியானார். 8 ஆண்டுகள் கொயிம்ப்ராவில் தவமுயற்சிகளிலும் வேதக்கல்வி கற்றுக்கொள்வதிலும் செலவழித்தார். கி. பி. 1220ல் மொரோக்கோவில் கிறிஸ்துவுக்காகக் குருதி சிந்தி உயிர்துறந்த பிரான்சிஸ்கன் துறவிகளின் உடல்களை டான்பேட்ரோ கொண்டுவந்ததைப் புனிதர் பார்த்தார்.

பார்த்த பிறகு அவருக்குள் தாமும் போய், இயேசுவுக்காகக் குருதி சிந்த வேண்டும் என்ற தணியாத தாகம் ஏற்படவே, தற்செயலாக அவரது துறவு மடத்திற்கு வந்த கப்புச்சின் சபையாரிடம் தம்மை ஏற்றுக்கொள்ளுமாறு கெஞ்சினார். கி.பி. 1221ல் கப்புச்சின் சபையில் ஏற்றுக்கொள்ளப்பட்டார்.

மொரோக்கோவுக்குப் புறப்படத் தம்மைத் தயாரித்துக்கொண்டார். புறப்படுமுன் கொடிய நோயினால் தாக்கப்பட்டு, ஐரோப்பாவுக்குத் திரும்பிவிட முயன்றார். எதிர்மாறாக, சிசிலியில் மெசினா நகருக்குக் கப்பல் போய்ச் சேர்ந்தது. நேரே அசிசி நகரை அடைந்தார். அப்போது போர்லி என்ற இடத்தில் ஒரு குருப்பட்டம் நிகழ எல்லாம் தயார் நிலையிலிருந்தது. விழா மறையுரை ஆற்ற ஒப்புக்கொண்டிருந்த டொமினிக்கன் சபைத் துறவி வரஇயலாத நிலை ஏற்பட்டது.

மறையுரை ஆற்றும்படி நம் புனிதரைக் கேட்டுக்கொண்டனர். தன்னம்பிக்கையில்லாமலே அவர் இசைந்தார். ஆனால் பேசத் தொடங்கியதும் அவரது திறமை, ஆழமான மறை நூல் அறிவு, நாவன்மை, மக்களின் நெஞ்சங்களை மேலே எழுப்பும் ஆற்றல், அத்தனையும் கேட்டவர் யாவரையும் ஆழ்ந்த வியப்பில் ஆழ்த்தின.

இதை நேரில் பார்த்த சபைத் தலைவர், லாம்பர்டி பகுதி முழுவதிலும் மறையுரை ஆற்றும் பணிப்பொறுப்பை அவரிடம் அளித்தார். மறைக்கல்வியும் துறவிகளுக்கு அவர் கற்றுக்கொடுக்க வேண்டியதாயிற்று. பாவிகள் நூற்றுக்கணக்கில் வந்து அவரிடம் அடைக்கலம் அடைந்தனர். பாறை மனம் கொண்ட பாவிகள், ஞான வாழ்வில் அக்கறை காட்டாதவர் யாவரும், அவரை அணுகியவண்ணம் இருந்தனர்.

புனித அசிசியாரின் இறப்புக்குப்பின் அந்தோனியார் இத்தாலிக்கு வரவழைக்கப்பட்டார். அன்று முதல் இறுதி நாள்வரை பதுவையில் அவர் தங்கினார். ஒரு காட்டுப் பகுதியில் தங்கி கி.பி 1231ல் தொடர்ச்சியாக மறையுரை ஆற்றிவந்தார். இதனிடையில் இவர் முற்றிலும் உடல் வலிமையிழந்து காணப்பட்டார். பதுவை நகருக்கு எடுத்துச்செல்லப்படும் வழியில் இறைவன் திருவடி சேர்ந்தார். ஜூன் 13, 1231ல் அனைத்து அருட்சாதனங்களையும் பெற்றவராகப் புனிதராகக் காலஞ்சென்றார். அப்போது இவருக்கு வயது 36.

இறந்த அடுத்தவருடமே இவருக்குப் புனிதர் பட்டம் கொடுக்கப்பட்டது. கி. பி. 1946ல் திருத்தந்தை 12ஆம் பத்திநாதர் மறைவல்லுநர் பட்டமளித்து இவரைப் பெருமைப்படுத்தினார். இன்று திருச்சபையில் இவரை நினைவுகூர்வதற்கு முதன்மையான காரணம், ஏழைகளின்மீது இவர் கொண்டிருந்த பரிவிரக்கம். இவர் பெயரால் இன்றும் உரொட்டிகள் ஆலய வளாகங்களில் ஏழைகளுக்கு அளிக்கப்படும் வழக்கத்தை நாம் பார்க்கிறோம். குழந்தை இயேசு இவர் தம் கைகளில் வந்து அமர்ந்ததாக இவரது உருவத்தில் பார்க்கிறோம். இழந்த பொருட்களைக் கண்டுபிடிக்க இவரின் உதவியை மக்கள் நாடுகின்றதைப் பார்க்கிறோம். பல புதுமைகள் அன்றும் இன்றும் நடைபெறுவதைக் காணும்போது மிக வியப்பாக இருக்கிறது.

இப்புனிதரின் பெயர் கொண்டுள்ள ஆலயங்களில் சமய பாகுபாடற்ற முறையில் இந்துக்களும், முஸ்லீம்களும் பல்லாயிரக்கணக்கில் வருகின்றனர். திருமணத்தை நல்லமுறையில் நடத்திக்கொடுக்க, பிள்ளைவரம் பெற்றுத்தர, காணாமற்போனதைக் கண்டுபிடிக்க, பேய் பிடித்தவர்களிடம் பேயின் விலங்குகளை அறுத்தெரிய என இவ்வாறு பல நன்மைகளை எதிர்பார்த்து அவற்றைப்பெற்று மகிழ்ச்சியடைகின்ற ஆயிரக்கணக்கான பக்தர்களை நாம் இன்றும் காணலாம். இதற்கு, இறைவனுடன் இணைந்து வாழ்ந்து, மேலுலகில் இறைவனிடம் ஆற்றல்பெற்றவர் என்ற காரணம் தவிர, வேறு எதையும் சொல்வது முற்றிலும் தவறாகும்.

அதேவேளையில், இப்புனிதர் மட்டில் கிறிஸ்தவர்களும், கிறிஸ்தவர் அல்லாதவரும் கொண்டிருக்கும் மூடநம்பிக்கை எதுவாயினும், அதைச் சுட்டிக்காட்டவும் தயங்கக்கூடாது.





## சிறு பராயத்தில் நிகழ்ந்த அற்புதங்கள் சில

### 01. சிலுவை அடையாளம் வரைந்தார், சாத்தான் அகன்றான்

ஒரு நாள் பேர்டினன்ட் ஆலயத்திற் செபித்துக்கொண்டிருந்தான். திடீரென வீசிய பெருங்காற்று பீடத்திலிருந்த பொருட்களை அசைத்து வீழ்த்தியது. ஓசை கேட்டதும் திடுக்கிட்டான் சிறுவன் பேர்டினன்ட். உடனே பீடத்தை நோக்கினான். பீடம் முழுவதும் கருமேகம் சூழ்ந்திருந்தது. உடல் நடுங்க முழங்காலில் அமர்ந்தான். அந்தநேரம் கரிய ஓர் உருவம் அவன்முன் தோன்றி அவனை அச்சுறுத்தியது. பேர்டினன்ட் கண்களை மூடிக்கொண்டு பளிங்குத் தளத்தில் அஞ்சாது சிலுவை அடையாளம் வரைந்தான். என்னே ஆச்சரியம்! அடுத்த நொடியில் அலறற் சத்தம் கேட்டது. கண்களைத் திறந்து பார்த்தான். தன்னைச் சூழ்ந்திருந்த கருமேகத்தையும், அச்சுறுத்திய கரிய உருவத்தையும் காணவில்லை. பளிங்குத் தளத்தில் தான் கையினால் வரைந்த சிலுவை அடையாளம் மட்டுமே பளிச்சிட்டது. ஆச்சரியம் அடைந்த பேர்டினன்ட், இறைவனை நன்றியுடன் போற்றித்துதித்தான்.

அன்று அச்சிலுவை அடையாளத்தைக் கண்ணுற்ற அருட்தந்தையர் நிகழ்ந்ததைச் சிறுவனிடம் கேட்டறிந்தனர். மேலும் வியப்படைந்த அவர்கள் அச்சிறு வயதினிலேயே பேர்டினன்ட்டிடம் காணப்பட்டிருந்த இறையருளின் மகத்துவத்தைப்பற்றியும் எண்ணி மனம் மகிழ்ந்தனர். அன்று வரையப்பட்ட சிலுவை அடையாளம் இன்றும் பார்ப்பவரைப் பரவசமடையச் செய்கிறது.

### 02. நடுப்பூசை வேளை ஏன் சிரித்தாய்?

ஒரு நாள் திருப்பலியின்போது குருவானவருக்குப் பணி செய்துகொண்டிருந்தான் சிறுவன் பேர்டினன்ட். குருவானவர் அப்ப, இரசத்தை ஒப்புக்கொடுக்கும் வேளையில், "கோ" வெனச் சிரித்தான் சிறுவன். பங்குத்தந்தை இதனை நன்கு அவதானித்தார். திருப்பலி முடிந்ததும். பேர்டினன்டை அழைத்து, "திருப்பலி வேளையில் ஏன் சிரித்தாய்?" எனக்கேட்டார். அதற்கு, "தந்தையே! திருப்பலி நடைபெற்றுக்கொண்டிருந்த வேளையிலே அப்ப, இரசத்தை நீங்கள் ஒப்புக்கொடுக்கும்போது பீடத்தை அண்ணார்ந்து நோக்கினேன். அங்கே, பீடத்தின் ஓரத்தில் கறுத்த உடலும், கொடிய பார்வையும் கொண்ட ஒர் உருவம் உட்கார்ந்திருந்தது. அது கோவினுள் இருந்த மக்களை உற்றுநோக்கி ஒவ்வொருவருடைய பாவங்ளையும் எழுதிக்கொண்டிருந்தது. தான் எழுதிய புத்தகத்தில் பக்கம் முடிந்துபோகவே தன் தொடையைக் கடித்துக் கிழித்து அதன்மேல் எழுத ஆரம்பித்தது. அதையே நான் கண்டேன், சிரித்தேன்" என்றான்.

இந்த நிகழ்வை அறிந்த பங்குத்தந்தை "இயேசுவின் திரு உடலையும், திருஇரத்தையும் தொடும் பாக்கியம் கிடைக்கப்பெற்ற எனக்கு, இச்சிறுவனுக்குக் கிடைத்துள்ள இப்பெரும் பேறு கிடைக்கவில்லை" என எண்ணி வியப்புற்றார். இப்புதுமைகள் யாவும் மக்களுடையே மனங்களைக் கவர்ந்தன. எனவேதான் சிறுவன் பேர்டினன்ட் திருப்பலியின்போது அணியும் உடையுடன் காணப்படும் மாதிரியிலான சுரூபம் இன்றும் அவ்வாலயத்திலுண்டு.

### 03. சிட்டுக்களைச் சிறைவைத்தார்

பருவகாலம், வயலிற் தானியங்கள் முற்றி விளைந்திருந்தன. பறவைக்கூட்டம் இங்கும் அங்கும் வட்டமிட்டுச் சுற்றிப் பறந்துகொண்டிருந்தன. காவல் செய்ய எவரும் கிடைக்கவில்லை. தந்தை மாட்டீன் அவசியத் தேவை காரணமாகப் போகவேண்டியிருந்தது. எனவே மகன் பேர்டினன்டை வயலுக்கு அழைத்துச்சென்று "மகனே! அதோ பார்! சிட்டுக்கள் எல்லாம் வயல்மேல் வட்டமிட்டுச் சுற்றுகின்றன. அவை வயலினுள் இறங்கினால் தானியங்களை அழித்துப் பாழாக்கிவிடும். எனவே இங்கு நின்று குருவிகளைத் துரத்து" என்று பணித்துச் சென்றார்.

தினமும் திருப்பலிக்குச் செல்லும் பேர்டினன்ட், எதைச் செய்வது என்று எண்ணித் தடுமாறினான். தந்தை இட்ட கட்டளையைப் புறக்கணிப்பதா? அன்றேல் திருப்பலிக்கு முற்றுப்புள்ளி வைப்பதா? என எண்ணிக் கலக்கமுற்றான். தன் தாயார் முன்னர் கூறிய அறிவுரைகள் சிறுவனின் நினைவிற் தோன்றின. எனவே நம்பிக்கை கொண்டவனாக வயல்வெளியில் முழந்தாள் இட்டான். "என் காவல் தூதர்களே வாருங்கள். எனக்கு ஒரு வழிகாட்டுங்கள். நான் என் தந்தையின் கட்டளைக்கும் பணிய வேண்டும், திருப்பலிக்கும் செல்லவேண்டும் இதற்கு நான் என்ன செய்வேன்?" என வேண்டி நின்றான்.

அப்போது "பேர்டினன்டே! நீ குருவிகளை அழைத்து, அருகில் உள்ள மாளிகையைத் திறந்து, அவற்றை உள்ளே அனுப்பிக் கதவை மூடிவிட்டு ஆலயம் செல்" என்னும் உள்ளுறுத்தல் அவனைத் தூண்டியது. இறைவனை வேண்டி மனம் உருகச் செபித்தான். பின்னர் சிட்டுக்களை அழைத்தான். என்னே ஆச்சரியம்! எல்லாச் சிட்டுக்களும் அவன் அழைப்பின் பிரகாரம் கதவு திறந்திருந்த மாளிகையினுள் புகுந்தன. கதவைப் பூட்டிய பேர்டினன்ட் மகிழ்ச்சியுடன் ஆலயம் சென்றான். நன்றிப் பெருக்குடன் இறைவனைப் புகழ்ந்து திருப்பலியில் வாழ்த்தினான்.

சிறிது நேரத்தின் பின்னர் வயலுக்கு வந்த தந்தை வயலில் மகனைக் காணாமையால் நேராகவே ஆலயம் சென்றார். திருப்பலி முடிந்து மகன் வீட்டுக்கு வந்துகொண்டிருக்கக் கண்டார். அவ்விடத்தில், "மகனே! உன்னிடம் நான் என்ன சொன்னேன்? அதை மறந்துவிட்டாயா?" எனக் கோபத்துடனும், மன வேதனையுடனும் கேட்டார்.

இதற்கு மகனோ, "அப்பா! நான் எல்லாக் குருவிகளையும் மாளிகையினுள் சிறை வைத்துள்ளேன். அதனால் தானியத்துக்கு எக்கேடும் நிகழ்ந்திருக்காது." என்றான். அவன் கூறிய வார்த்தைகளைச் சிந்தித்தவராகத் தன் மகனையும் அழைத்துக் கொண்டு மாளிகை நோக்கிச் சென்றார் தந்தை. மாளிகையினுள் குருவிகள் எல்லாம் அமைதியாக அடைந்திருந்ததைக் கண்டார். மனம் மகிழ்ந்து கதவைத் திறந்தார். குருவிகள் யாவும் குபீரெனப் பறந்தன வெளியே. ஆனால் அந்நிகழ்ச்சி மட்டும் தந்தையின் மனதில் நிழலாடிக்கொண்டிருந்தது. மேலும் இச்சம்பவம் மாட்டீன் பிரபுவுக்குப் பேரதிர்ச்சியையும் அத்துடன் பேரானந்தத்தையும் ஏற்படுத்தியது. தனையன் இறை அருளோடு வளர்வதை எண்ணிய தந்தை மகிழ்வுற்றார்.

### 04. சிறுமியின் துயர் போக்கினார்

அன்று ஒருநாள் பேர்டினன்ட் பேராலயம் நோக்கிச் சென்றுகொண்டிருந்தான். ஒரு சிறுமி நீர் நிறைந்த குடத்தைத் தலையிற் சுமந்தபடி அவன் எதிரில் வந்துகொண்டிருந்தாள். அவள் சிறுவன் பேர்டினன்டை அண்மித்துக்கொண்டு வருகையில் எதிர்பாராமல் குடம் விழுந்து உடைந்தது. ஓ! வெனக் கதறினாள் சிறுமி. "நான் என் செய்வேன்? வீட்டில் என்னை அடித்துக் கொன்றுவிடுவார்களே!" எனக் கதறிக் கண்ணீர் வடித்தாள்.

கதறும் சிறுமியின் கோலத்தைக் கண்ணுற்ற பேர்டினன்ட் மனமிரங்கினான். உடைந்த குடத்தின் துண்டுகளை ஒன்று சேர்த்துப் பொருத்தினான். கண்களை மூடியவனாகக் கடவுளிடம் மன்றாடினான். குடத்தின் துண்டுகள் ஒன்றுடன் ஒன்று பொருந்தின. அவ்வாறே குடம் பழைய நிலையிற் பரிணமித்தது. சிறுமியின் மகிழ்ச்சியைக் கண்டு பேர்டினன்ட் ஆறுதலடைந்தான். அவளும் அமைதியாக நீர் கொண்டு வீடு சென்றாள்.

### 05. நல்ல இதயங்களைத் தேடும் சிறுவன்

குளிர்கால மாலைவேளை. அன்று சிறுவன் பேர்டினன்ட் வீட்டில் யாரும் இல்லாது தனிமையில் கதவைத் தாழிட்டுக்கொண்டு உள்ளே இருந்தான். அப்போது யாரோ கதவிற் தட்டும் சத்தம் கேட்டது. ஒடிவந்து கதவைத் திறந்தான் பேர்டினன்ட். கதவின் அருகே ஐந்து வயதே மதிக்கத்தக்க அழகிய ஒரு சிறுவன் நிற்கக்கண்டான். அச்சிறுவன் பிச்சைக்காரன் போன்று ஒரு பையைத் தன் தோளிற் தொங்கவிட்டிருந்தான். அப்போது பேர்டினன்ட் அச்சிறுவனை நோக்கி "தம்பி! உனக்கு என்ன வேண்டும்? "பிச்சை"

"பசிக்கவில்லையா? றொட்டி தரட்டுமா?"

"என் பசி வேறு. உன் பசி வேறு"

"அப்படியானால், உனக்கு என்ன வேண்டும்?"

"வேண்டுவதைத் தருவதற்கு முன் இதோ! என் பையைப் பார்"

"ஆ! சிவப்பு வைடூரியங்கள்"

"இல்லை, இவை நல்ல இதயங்கள், இவற்றையே நான் தேடிச் செல்கின்றேன்"

"இதயங்களைத் தேடிச் செல்லும் நீர் யார்?"

"என்னை உற்றுப்பார். உனக்குப் புரியும்"

"ஆ! குழந்தை இயேசுவே!"

"பேர்டினன்ட்! உன் இதயத்தையும் எனக்குத் தருவாயா?"

"இதயத்தை மட்டுமா? என்னையே தருகின்றேன்."

"இதோ! வெனத் தன்னை ஒப்புக் கொடுத்து முழந்தாளில் அமர்ந்தான் பேர்டினன்ட். மறைந்தார் குழந்தை இயேசு.

எந்த அளவிற்குச் சின்னஞ்சிறிய பருவம் முதல் இறைஅருளைப் பேர்டினன்ட் பெற்றிருந்தான் என்பதற்கு இச்சம்பவம் ஒரு சிறந்த அற்புதமாக அமைந்துள்ளது.

இவற்றுக்கு எல்லாம் முழுமுதற் காரணம், பேர்டினன்ட் சிறுவயதில் இருந்தே நம்பிக்கையுடன் செபிக்கும் பண்பினை அவன் பெற்றோர் அவனுக்குக் கற்பித்து வளர்த்ததும், அவன் தன் நிலையில் அவற்றைக் கடைப்பிடித்து வாழ்ந்ததுமாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இலங்கைத் திருச்சபைச் செய்திகள்

# குடாநாட்டு மக்களின் வாழ்வியல் திட்டமிட்டு அழிக்கப்படுகின்றதா?

### யாழ் ஆயர் யஸ்ரின் ஆண்டகை கேள்வி

குற்றச் செயல்களைத் தடுப்பது என்பது ஒட்டுமொத்த சமூகத்தின் விழிப்புணர்விலேயே தங்கியுள்ளது. அக்கம் பக்கத்தில் குற்றச் செயல்கள் இடம்பெறும்போது வெறுமனே பார்த்துக்கொண்டிராது, இதுதொடர்பில் தமது எதிர்ப்பை வெளிக்காட்டவேண்டிய பொறுப்பு சமூகத்துக்கு உள்ளது. யாழ். குடாநாட்டில் அண்மைக்காலமாகக் குற்றச்செயல்கள் கட்டுக்கடங்காமல் அதிகரித்து வருகின்றன. குடாநாட்டு மக்களின் வாழ்வியல் திட்டமிட்டு அழிக்கப்பட்டு வருகின்றதா? என்ற ஐயத்தை இந்தச் சம்பவங்கள் தோற்றுவித்துள்ளன.

இவ்வாறு யாழ் மறைமாவட்ட ஆயர் ஜஸ்ரின் ஆண்டகை தெரிவித்துள்ளார். இந்தச் சமுதாய அவலநிலை உடனடியாக நிறுத்தப்பட வேண்டும் எனவும் அதற்குச் சமூக அக்கறைகொண்ட புத்திஜீவிகள் மற்றும் சமூகப் பெரியோர்கள் முன்வருதல் வேண்டும் எனவும் அவர் கேட்டுள்ளார். இது தொடர்பில் அவர் ஊடகங்களுக்கு விரிவான அறிக்கை ஒன்றையும் விடுத்துள்ளார்.

## கச்சதீவில் திட்டமிட்டபடி புதிய ஆலயம் அமையும்

### தென்னிந்திய விமர்சனங்கள் தொடர்பாக யாழ். குருமுதல்வர் கருத்து


கச்சதீவில் புதிய அந்தோனியார் ஆலயம் அமைப்பதற்கு, இந்திய அரசின் அனுமதியைப் பெற்றுக்கொள்ளவேண்டிய அவசியம் இல்லை. திட்டமிட்டவாறு புதிய ஆலயம் அமைக்கப்படும். இவ்வாறு யாழ். மறைமாவட்டக் குருமுதல்வர் அருட்திரு. ஜோ. ஜெபரட்ணம் அடிகளார் தெரிவித்தார்.

கச்சதீவு அந்தோனியார் ஆலய வளாகத்தில் புதிய ஆலயத்துக்கான கட்டடம் அமைப்பது தொடர்பாக தென்னிந்தியாவில் விமர்சனங்கள் எழுந்துவரும் நிலையில், யாழ். மறைமாவட்டக் குருமுதல்வருடன் தொடர்புகொண்டு கேட்டபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது, கச்சதீவு என்பது இந்திய இலங்கை ஒப்பந்தத்தில் இலங்கைக்குச் சொந்தமானது என்று தெரிவித்து இலங்கையரிடம் கையளிக்கப்பட்ட தீவு. எனவே இந்தத் தீவில் ஆலயம் அமைப்பதற்கு இந்திய அரசிடம் அனுமதி எடுக்கவேண்டிய எந்த அவசியமும் இல்லை. திட்டமிட்டபடி ஆலயம் அமைக்கப்படும். கச்சதீவில் புதிய ஆலயம் மட்டுமே அமைக்கப்படுகின்றதே தவிர வேறு எந்தக் கட்டடங்களும் கட்டப்படவில்லை. தற்போது உள்ள ஆலயம் 10 அடி அகலமும், 20 அடி நீளமும் கொண்டதாகவே உள்ளது. புதிதாகக் கட்டப்படும் ஆலயம் 70 அடி நீளத்திலும் 30 அடி அகலத்திலும் கட்டப்படுகின்றது. பழைமையான ஆலயத்தை இடித்துப் புதிய ஆலயம் கட்டப்படவில்லை. அந்த ஆலயத்துக்கு அருகிலேயே இந்தப் புதிய ஆலயம் அமைக்கப்படுகின்றது என்றார்.

## பத்திமா மாதா பற்றிய நூல் மீள்பதிப்பு

1949ஆம் ஆண்டு அருட்தந்தை என்றிஜெலான் அடிகளாரால் வெளியிடப்பட்ட **"அவர்கள் மூன்று சிறுவர்கள்"** எனும் நூல் யாழ் ஆயரின் அனுமதியுடன், மீள்பதிப்புச் செய்யப்பட்டு, 2016 மே 03ஆம் திகதி பண்டத்தரிப்பு பத்திமா அன்னையின் திருத்தல கொடியேற்ற ஆரம்பநாளில் பரிபாலகர் அருட்தந்தை மைக்கல் சவுந்தரநாயகம் அடிகளாரால் வெளியிடப்பட்டது. இந்நூல் முந்நூற்று நாற்பது பக்கங்களைக் கொண்டதாக அமைந்துள்ளது. இதன் பிரதி ஒன்றின் விலை ரூபா முந்நூறு (300/-) ஆகும்.



## சிட்னி வெள்ளிவிழா நிகழ்வுகளில் மட்டக்களப்பு ஆயர் பங்கேற்பு

கடல் கடந்து ஆயிரமாயிரம் மைல்களுக்கப்பால் சென்றாலும் எமது மறையையும், தாய் மொழியையும் மறக்க நினைக்கமாட்டோம் என்ற கொள்கைப்பிடிப்புடன் புலம்பெயர் தேசத்தில் கடந்த இருபத்தைந்து வருடங்களாகத் தமது ஆன்மீக விசுவாசப் பயணத்தில் மிகுந்த பக்தியுடனும், நேர்த்தியுடனும், துடிப்புடனும் செயற்பட்டுக்கொண்டுவருகின்ற சிட்னி தமிழர் கத்தோலிக்க ஒன்றியத்தின் வெள்ளிவிழா நிகழ்வுகள் சிட்னியில் மார்ச் 5ம் திகதி நடைபெற்றது.

இந்நிகழ்வுக்கு மட்டக்களப்பு மறைமாவட்ட ஆயர் மேதகு ஜோசப் பொன்னையா ஆண்டகை பிரதம விருந்தினராக அழைக்கப்பட்டிருந்தார். அங்கு சென்ற ஆயர் அவர்களை அங்குள்ள தமிழ் கத்தோலிக்க மக்கள் அன்புடன் வரவேற்றனர். ஆயர் அவர்கள் சிட்னி தமிழர் கத்தோலிக்க ஒன்றியத்தின் வெள்ளிவிழாத் திருப்பலியை ஒப்புக்கொடுத்து வெள்ளிவிழா நிகழ்வுகளிலும் கலந்து சிறப்பித்தார்.

## நியாயமற்ற நடைமுறைகளைத் தகர்த்து சமத்துவநிலை உருவாக்கப்பட வேண்டும்

### மேய்ப்புப்பணி மாநாடுபற்றி யாழ் ஆயர்

யாழ். மறைமாவட்டத்தில் பங்குக்குப்பங்கு, ஆலயத்துக்கு ஆலயமென இருக்கின்ற நியாயமற்ற, அநீதியான தனித்துவமான ஒழுங்குகளையும் சட்டதிட்டங்களையும் ஒழித்து, மறைமாவட்டம் முழுவதும் சமத்துவமான, நீதியான நடைமுறைகள் உருவாக இம்மேய்ப்புப்பணி மாநாட்டை அனைவரும் பயன்படுத்தவேண்டுமென யாழ் ஆயர் ஜஸ்ரின் ஞானப்பிரகாசம் ஆண்டகை கேட்டுக்கொண்டார். கடந்த மே மாதம் 5ஆம் திகதி அன்று யாழ் ஆயர் இல்லத்தில் நடைபெற்ற குருக்கள்மன்றக் கூட்டத்தின்போதே ஆயர் இவ்விடயத்தை வலியுறுத்தினார்.

மறைமாவட்டத்தின் பல பங்குகளில் காலாகாலமாக பல நியாயமற்ற நடைமுறைகள் கடைப்பிடிக்கப்பட்டு வருகிறபோதிலும் அவற்றை மாற்றுவதற்கு மேற்கொண்ட பல முயற்சிகளும் தோல்வியிலேயே முடிவடைந்ததென்பதையும் ஆயர் சுட்டிக்காட்டினார். பங்குமட்டங்களில், ஆலயமட்டங்களில் ஒருசிலருடைய கடினமான போக்கினால் பலர் பாதிக்கப்படுகிறார்கள் என்பதையும் எடுத்துரைத்த ஆயர், இம்மேய்ப்புப்பணி மாநாட்டில் இவ்விடயம் முக்கியப்படுத்தப்பட வேண்டும் என்றும் கேட்டுக்கொண்டார்.

## மன்னார் மறைமாவட்டச் செய்திகள்

### குடும்பம் பற்றிய ஆசிய மாநாட்டில் அருட்திரு. எஸ். கே. தேவராஜா





"ஆசியாவில் குடும்பங்கள் எதிர்நோக்கும் சிக்கல்களை ஆராய்வதும், குடும்பம் என்ற அலகைத் தாங்கிக் கொள்வதற்கான தீர்வுகளைக் காணலும்" என்ற மையப்பொருளைக் கொண்ட கருத்தரங்கு ஆசிய ஆயர்கள் பேரவையின் கூட்டமைப்பினால் (FABC) கடந்த மே மாதம் தாய்லாந்தில் இடம்பெற்றது. நூற்றுக்கும் மேற்பட்ட பேராயர்கள், ஆயர்கள், குருக்கள், பொதுநிலையினர் கலந்துகொண்ட இந்த மாநாட்டில் இலங்கையில் இருந்து 2 ஆயர்களும் 3 குருக்களும், 10 பொதுநிலையினரும் கலந்துகொண்டனர்.

மன்னார் மறைமாவட்டத்தில் இருந்து குடும்பநல, பொதுநிலையினர் பணியக இயக்குனர் அருட்திரு. எஸ். கே. தேவராஜா அடிகளார் கலந்துகொண்டார். பல்சமயத் திருமணங்களின் அதிகரிப்பு, குடியேற்றம், உள்ளூர் இடம்பெயர்வு, ஒரு பெற்றோரைக் கொண்ட குடும்பங்கள், மதச்சார்பற்ற சூழ்நிலையில் வளரும் குழந்தைகள் போன்றவை இன்று ஆசியக் குடும்பங்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகளில் சிலவாகும். ஆசியக் கண்டத்தில் உள்ள கத்தோலிக்கர்களில் 70 வீதமானவர்கள் ஆலயம் செல்லாதவர்கள் என ஆசியக் கண்ட மட்டத்தில் மேற்கொள்ளப்பட்ட ஒரு ஆய்வில் தெரியவந்துள்ளது. இந்தக் கத்தோலிக்க குடும்பங்களை அணுகுவதற்குரிய வழிவகைகளை ஆசியத் திருச்சபை ஆராய வேண்டும்.

பல்வேறு கோரிக்கைகள் மத்தியில், "பங்கு மற்றும் மறைமாவட்ட மேய்ப்புப் பணித்திட்டமிடல்களில் குடும்பங்கள் பற்றிய பார்வையே முன்னுரிமைப்படுத்தப்பட வேண்டும்" என்ற கோரிக்கையுடன் இக்கருத்தரங்கு இனிதே நிறைவுபெற்றது.

## சுவிஸ் நாட்டில் றொக்சன் அடிகளார் மேற்கொண்ட ஆன்மீகப் பணிகள்





மன்னார் மறைமாவட்டத்தைச் சேர்ந்த அருட்பணியாளர் றொக்சன் குரூஸ் அடிகளார் சுவிற்சலாந்து தமிழ் கத்தோலிக்க ஆன்மீகப் பணியகத்தின் அழைப்பின்பேரில் கடந்த பெப்ரவரி 18ஆம் திகதி சுவிற்சலாந்து நாட்டிற்குச் சென்று அங்கு 40 நாட்கள் பல்வேறு ஆன்மீகப் பணிகளை மேற்கொண்டு நாடு திரும்பியுள்ளார்.

சுவிஸ் தமிழ் கத்தோலிக்க ஆன்மீகப் பணியகம் வருடாவருடம் தவக்காலத்தின்போது வேறு நாடுகளில் இருந்து குருக்களை அழைத்து தவக்கால தியானங்களை வழங்குவது வழக்கம். இதனடிப்படையில் இந்த வருடம் றொக்சன் அடிகளார் அங்கு அழைக்கப்பட்டிருந்தார். சுவிஸ் தமிழ் ஆன்மீகப் பணியகத்தின் இயக்குனராக இருக்கும் மன்னார் மறைமாவட்டத்தைச் சேர்ந்த அருட்பணியாளர் அந்தோனிதாஸ் டலிமா அவர்களின் ஏற்பாட்டில் சுவிஸ் நாட்டில் உள்ள அனைத்து மறைமாவட்டங்களிலும் உள்ள தமிழ் கத்தோலிக்க மக்களுக்கு இந்தத் தவக்கலத் தியானம், திருப்பலி, நற்செய்திப் பகிர்வு ஆகியவற்றை றொக்சன் அகடிளார் வழங்கினார். றொக்சன் அடிகளார் தற்போது முருங்கன் பங்குத்தந்தையாகப் பணிப்பொறுப்பை ஏற்றுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

## மன்னாரில் 'அன்பின் மகிழ்வு' திருமடல் தொடர்பான செயலமர்வு





மன்னார் மறைமாவட்ட குடும்பநல, பொதுநிலையினர் பணியகத்தினால் ஏற்பாடு செய்யப்பட்ட 'அன்பின் மகிழ்வு' என்ற திருத்தந்தை பிரான்சிஸ் அண்மையில் வெளியிட்ட குடும்பம் பற்றிய திருமடல் தொடர்பான செயலமர்வு கடந்த மே மாதம் 10ஆம் திகதி மாலை 4.00 மணியளவில் குடும்பநல, பொதுநிலையினர் பணியகத்தில் இடம்பெற்றது. இதில் இலண்டனில் வசிக்கும் இலங்கைப் பொதுநிலைப் பணியாளராகிய திரு. எறிக் ஜீவராஜ் அவர்கள் இம்மடலின் பின்னணி மற்றும் உள்ளடக்கம் பற்றி உரையாற்றினார். குடும்பநல பொதுநிலையினர் பணியக இயக்குனர் அருட்திரு. எஸ். கே. தேவராஜா அடிகளார் இந்நிகழ்வை சிறப்பாக ஒழுங்கமைத்திருந்தார். இத்திருமடல் தொடர்பான விளக்கங்களையும் அவர் வழங்கினார். மன்னார் மறைமாவட்ட அப்போஸ்தலிக்க பரிபாலகர், குருக்கள், அருட்சகோதரிகள் என பலர் இதில் பங்கேற்றனர். உரைகளின் நிறைவில் கலந்துரையாடல் இடம்பெற்றது. பின்னர் குருக்களுக்கான நற்கருணை வழிபாடும், இராவுணவும் இடம்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அன்பிய வழி மறைக்கல்வி

## அன்பியத்தின் செயல்திறனை அதிகரிக்க சில ஆலோசனைகள்

தமிழ் நாட்டின் ஓர் மறைமாவட்டத்திலுள்ள அன்பியங்களில் நடைபெறும் வயதுவந்தோருக்கான விசுவாச பயிற்சியினடிப்படையில் மேற்கொள்ளப்பட்ட அறிவியல் ரீதியான கள ஆய்வின் முடிவுகளை ஐந்து தலைப்பின்கீழ் தொகுத்து வழங்குகிறோம். அவை: 1. அன்பியம், 2. வயது வந்தோரின் விசுவாசப் பயிற்சி, 3. உறவு நிலை, 4. சேவைநிலை, 5. சென்னை – மயிலை உயர் மறைமாவட்டம் ஆகியவை பற்றியன.

இம்முடிவுகள் மறைமாவட்டத்திலுள்ள பங்குத்தளங்களில் செயற்படும் அன்பியங்களிலுள்ள வயதுவந்தோரிடமிருந்து பெறப்பட்ட கருத்துக் கணிப்பு, தேர்ந்தெடுக்கப்பட்ட பங்குகளிலுள்ள அன்பிய ஒருங்கிணைப்பாளர்களிடம் மேற்கொள்ளப்பட கலந்துரையாடல்களில் வெளிப்பட்ட கருத்துக்கள் மற்றும் உயர் மறைமாவட்டத்திலுள்ள அன்பிய மையத்தில் பாதுகாக்கப்பட்ட கோப்புகளிலிருந்து பெறப்பட்ட தகவல்கள் ஆகியவற்றின் அடிப்படையில் பெறப்பட்டவை. ஆக்கபூர்வமான மற்றும் சவாலளிக்கக்கூடிய தகவல்கள் ஆய்வின் முடிவுகளாக இங்கு தொகுத்துத் தரப்பட்டுள்ளன.

### அன்பியத்தின் செயல்திறனை அதிகரிக்க ஆலோசனைகள் :

அன்பியம்பற்றி மேற்கொள்ளப்பட்ட ஆய்வின் அடிப்படையில் சவால்களைச் சந்திக்கவும், செயல்திட்டத்தை நிறைவேற்றும் வகையிலும் இங்கு தரப்படுகின்ற வழிகாட்டல்கள் அன்பிய மேம்பாட்டிற்கான சில நல்ல ஆலோசனைகளே.

### 1. மறைப்பணிக்கான ஆலோசனைகள்

1. பங்குதள அளவில் அன்பியத்திற்கு தொடர் செயலூக்க வழிகாட்டல் அளித்தால் மக்களை இலக்கு நோக்காளர்களாக ஆக்கலாம். மறைமாவட்ட அளவில் தலைவர்களுக்கு போதிய பயிற்சியும் உருவாக்கமும் தரவேண்டும். தலைவர்களுக்குக் கொடுக்கப்படும் பயிற்சி, விசுவாச உருவாக்கம் அன்பியத்தில் செபநிலை மற்றும் செயல்திட்ட இலக்குக்கொண்டதாக இருத்தல் வேண்டும். மக்கள் தங்களிடமிருந்தே செயல்நோக்க உணர்வைப் பெறவேண்டும். மக்களுக்குத் தரப்படும் தொடர்செயலூக்கப் பயிற்சி அன்பியத்தில் அவர்களுக்குரிய கடமை, பங்கேற்றல், அழைத்தல், நோக்கங்கள், இலக்கு அன்பியத்தின் தன்மை அதைச் சிறப்பாக நடத்தும் போக்கு போன்றவற்றைத் தெளிவாக எடுத்துக்கூறுவனவாக அமைய வேண்டும். பங்குதளக் குழுவின் தலைமையில் மாறும் அன்பியத் தலைவர்கள், செயலூக்க வழிகாட்டிகள், ஒருங்கிணைப்பாளர்கள் ஒன்றுகூடி கலந்துரையாட வேண்டும்.

2. வளர்ந்த பருவத்தினர் தொடர் செயற்திட்டத்தோடும், முழு ஈடுபாட்டுடனும் திருச்சபையின் மறைப்பணி செயல்வாழ்க்கையில் பங்கேற்க அன்பியக் கூட்டங்கள் தவறாமல் நடைபெற வேண்டும்.

3. சவால்களைச் சந்திக்கவும், பிரச்சினைகளைத் தெளிவாக்கவும், பயனுள்ள, அர்த்தமுள்ள செயற்பாடு நடைபெறவும் அவ்வப்போது எல்லா அன்பியத்திலும் மதிப்பீட்டுக்கூட்டங்களும் குறைபாடுகள் பற்றிய கருத்துப் பகிர்வும் (மக்கள், பங்குக்குருக்கள், மறைமாவட்ட ஒருங்கிணைப்பாளர் போன்றவர்களிடமிருந்து) நடைபெற வேண்டும். தொடர்ந்து கிடைக்கும் கருத்துக்கணிப்பையும், ஆலோசனைகளையும் சேகரித்து அவைகளை அன்பியத்தின் சிறந்த செயற்பாட்டிற்குப் பயன்படுத்த வேண்டும்.

4. இந்த ஒன்றுபட்ட முயற்சி, அன்பியத்தைப் புதுப்பிக்கவும், புதுப்பொலிவூட்டவும், புதிய வழிகாட்டுதல் தரவும் பயன்படுத்தப்பட்டு மறைமாவட்டம், மறைவட்டம், பங்குதளம், அன்பியம் என்ற எல்லா நிலைகளிலும் பலன்தருவதாக அமைய வேண்டும்.

5. ஒவ்வொரு அன்பியத்திலும் உள்ள குழந்தைகள், இளையோர்கள், திருமணமானவர்கள், முதியவர்கள் என்ற வெவ்வேறு பிரிவினருக்கு தனிக்கவனம் செலுத்த தனித்தனி குழுக்கள் செயற்படுவது நன்று.

6. மறைமாவட்ட மற்றும் மறைமாநில அளவில் உருவாக்கல், புதுப்பித்தல், செயலூக்க வழிகாட்டல், செயல்நோக்கம், உற்றுநோக்கல், உற்சாகப்படுத்துதல் அதிகாரம் மற்றும் உரிமை உணர்வூட்டல் போன்றவைகளில் சிறப்புக் கவனம் செலுத்திட வழிகாட்டும் கருத்துரையாளர்கள் குழு உருவாக்கப்பட வேண்டும்.

7. மக்களின் ஒத்துழைப்பு, குருக்களின் மனமுவந்த தாராள ஈடுபாடு போன்றவற்றைப் பெற்றிடத் தேவையான வழிமுறைகளையும் செயல்வகைகளையும் தெளிவாக வைத்திருக்கவேண்டும்.

8. நன்றாகவும் பயனுள்ளதாகவும் செயற்படும் அன்பியத்தைப்பற்றி ஞாயிறு திருப்பலி போன்ற நாள்களில் பொது அறிக்கையில் அறிவித்து, மக்கள்முன் கௌரவப்படுத்தி, அவர்களை உற்சாகப்படுத்த வேண்டும்.

9. 'வெற்றி கண்ட அன்பியங்கள்' போன்ற புத்தகங்களின் மூலம் சிறப்பாகச் செயற்படுகின்ற அன்பியங்களைப்பற்றி வாசித்து, சிந்தித்து அவைகளிலிருந்து சிறப்பு அன்பிய செயற்பாட்டிற்கு தூண்டுதல் பெறலாம். மறைமாவட்ட, மறைவட்ட, பங்குத்தள அளவிலுள்ள இத்தகைய சிறப்பு அன்பியத்தலைவர்களை அழைத்து அவர்களின் வெற்றிப் பாதைக்கான செயற்பாட்டினை பகிர்ந்துகொள்ளச் செய்யலாம்.



### 2. வயதுவந்தோரின் விசுவாசப் பயிற்சிக்கான ஆலோசனைகள்

1. இறைவார்த்தையை விளக்கிக்கூறி, வளர்ந்த பருவத்தினருக்கு பயிற்சி அளிக்க வேண்டும்.

2. விசுவாசத்தின் இடைநிலை பரிமாணத்திற்கு ஏற்ப, விசுவாச உருவாக்கத் திட்டம் இருக்க வேண்டும். வளர்ந்த பருவத்தினருக்கு அயலார்கள்மேல் காட்டுகின்ற அன்பின் வழியாக இறைவன்மேல் அவர்களுக்கு இருக்கும் அன்பு சரியானதாகவும், அர்த்தமுள்ளதாகவும் மாறவேண்டும். இதற்கு நற்செய்திப் பகிர்வைப் பயன்படுத்திக்கொள்ளவும்.

3. விசுவாச உருவாக்கத்தின் சமூகப் பரிமாணத்தின் ஒரு பகுதியாக திருச்சபையின் சமூகப் படிப்பினையை வளர்ந்த பருவத்தினருக்குப் படிப்பித்து, அதைச் செயல்படுத்த பயிற்றுவிக்க வேண்டும்.

4. கிறிஸ்து பிறப்பு விழா, உயிர்ப்பு விழா, தூய ஆவி விழா, கிறிஸ்தவ ஒன்றிப்பு வாரம் போன்ற சிறப்பு நிகழ்வுகளின்போது பிற கிறிஸ்துவ சபைகளோடு இணைந்து, செப வழிபாடு நடத்துவதன்மூலம் அன்பியத்தில் கிறிஸ்தவ சபைகளின் ஒன்றிப்பும் ஒத்துழைப்பும் அதிகரிக்கும்.

5. பிற மதத்தவரின் பொதுத்திருவிழாக் கொண்டாட்டங்களில் பங்கேற்பதன் மூலம் அன்பியங்களில் சமய நல்லிணக்கம் உருவாகும். இதனால் அப்பகுதியில் இருக்கும் பொதுவான தொல்லைகள், சமூகப் பிரச்சினைகள் போன்றவைகளை ஒன்றாக இணைந்து சந்திக்கும் ஈடுபாடு ஏற்படும்.

6. அன்பியத்தில் வளர்ந்த பருவத்தினருக்கு சூழல், ஆன்மீகம் பற்றிய பயிற்சி அளிப்பதன் மூலம் அவர்கள் சுற்றுச்சூழல் பற்றிய விழிப்புணர்வைப் பெற்று, இயற்கை வளங்களைப் பாதுகாக்கும் ஈடுபாட்டைப் பெறுவர். இதன்மூலம் மெல்ல மெல்லக் குழுவாக உருவாகி, தங்கள் பங்குத்தளம், தெரு, பகுதி போன்ற இடங்களைச் சுத்தப்படுத்தவும், தூய்மையாக வைத்துக்கொள்ளவும் முயல்வார்கள்.

7. அன்பியத்திலும், அன்பியத்தின் மூலம் வழிகாட்டப்படுகின்ற எல்லாச் செயல்பாடுகளிலும் வளர்ந்த பருவத்தினர் இறை அனுபவம் பெற்றிட வழிநடத்தப்பட வேண்டும். அவர்களுக்கு விசுவாசப் பக்குவத்தின் அறிகுறிகளையும், நம்பிக்கைகளையும், வாழ்க்கையையும் எப்படிச் சரியாக இணைத்து வாழவேண்டும் என்பதையும் கற்றுத்தர வேண்டும்.

8. அன்பியத்தை விசுவாச உருவாக்க மையமாகவும், நற்செய்தி அறிவிப்புக் கருவியாகவும் கொண்டுவரத் தனிக்கவனம் செலுத்தப்பட வேண்டும். வளர்ந்த பருவத்தினரின் விசுவாச உருவாக்கத்தை அன்பியம் வழியாக சமூக மறைக்கல்விப் பணியாக மேற்கொள்ளலாம்.

9. குறுகிய மனப்பான்மையோடு உள்ளவர்களுக்கு அல்லது தங்களை வெளிப்படுத்தத் தயங்கி, குறுகிய சூழலுக்குள் இருண்ட சூழலை வளர்த்துக்கொண்டிருப்பவர்களுக்கு உதவிசெய்து அவர்களைச் சமுதாயத்திற்குச் சான்றுபகர்பவர்களாக மாற்ற அன்பியம் முன்வர வேண்டும்.

10. அன்பியத்தில் ஒப்புரவு அருளடையாளம் மற்றும் திருப்பலிக் கொண்டாட்டங்கள் (அடிக்கடி) நடைபெற வேண்டும். இதற்கு முன்போ அல்லது பின்போ பங்குக்குருவும் அன்பியத் தலைவர்களும் குடும்ப சந்திப்பை மேற்கொள்ள வேண்டும். அன்பியத்தின் அனைத்துக் குடும்பங்களும் இதில் பங்கேற்க வழிவகை செய்யவேண்டும்.

### 3. உறவுநிலைக்கான ஆலோசனைகள்

1. அன்பியத்தில் உறவுகளை மேம்படுத்தும் செயல்பாடுகளை முன்னெடுக்க வேண்டும். அன்பியத்தில் இருக்கும் ஒவ்வொருவரும் பிறர் குடும்பங்களை நன்கு தெரிந்துகொள்ளுதல் வேண்டும். பகிர்வுகளை மேற்கொள்ள வேண்டும். முரண்பாடுகளைக் களைய வேண்டும். ஒருவரோடு ஒருவர் தொடர்புகொள்ளும் திறனை வளர்த்துக்கொள்ள வேண்டும். எல்லோரும் இணைந்து செய்யக்கூடிய பொதுத்திட்டங்கள், நிகழ்வுகளை ஒழுங்கு செய்யவேண்டும். குறுகிய - நீண்ட சுற்றுலா செல்லுதல், திருயாத்திரை மேற்கொள்ளுதல் போன்ற செயற்பாடுகளிலும் ஈடுபடலாம். இதன்மூலம் உறவுகளை மேம்படுத்தி ஒன்றிப்பை உறுதிப்படுத்த முடியும். தவறான எண்ணம், குறைநோக்கு உணர்வு, வெறுப்பு, மனதைப் புண்படுத்தும் போக்கு போன்றவைகளைப் புறந்தள்ளி விடவேண்டும். அன்பிய சமூகத்தில் மேலெழும் பிரச்சினைகளுக்குத் தீர்வுகாண வளர்ந்த பருவத்தினருக்கு முறையான பயிற்சி அளிக்கலாம். இந்தக் கண்ணோட்டத்தில் அன்பியத்தால் பொது செபதப வழிபாடுகளை நடத்தலாம்.

2. அன்பியத்தில் ஆன்மீகக் கொண்டாட்டங்களை நடத்துகின்ற அதேசமயம் பிறந்த நாள், திருநாள், திருமணநாள் போன்ற முக்கிய நாள்களை நினைவுகூர்ந்து கொண்டாடலாம். அதேபோல் அன்பியத்தைச் சார்ந்த குடும்பங்களின் குழந்தை பிறப்பு, திருமண நிகழ்ச்சி, புதுமனைபுகுவிழா, இறப்பு போன்ற துக்க நிகழ்வுகள், கிறிஸ்தவத் திருவிழாக்கள் மற்றும் தேசிய விழாக்கள் போன்றவைகளில் அன்பியத்தைச் சேர்ந்த மக்கள் பொதுவாகக் கலந்துக்கொண்டு சிறப்பிக்கலாம்.

3. மாநில, வட்ட மற்றும் மறைமாவட்ட அளவில் அன்பிய கருத்தரங்குகளுக்கு ஏற்பாடு செய்யலாம்.

4. அன்பிய ஆண்டு விழாவை குடும்ப நாளாகவும், அன்பிய ஞாயிறு, மறைப்பணி ஞாயிறு, விவிலிய ஞாயிறு, குடும்ப பொதுநிலையினர் ஞாயிறு போன்றவைகளையும் அன்பியத்தின் பாதுகாவலரான புனிதரின் திருநாள் போன்றவைகளையும் மிகச் சிறப்பான வகையில் கொண்டாட வேண்டும். இதுபோன்ற நாள்களில் சிறப்புக் கூட்டங்கள், திறன் போட்டிகள், விசுவாச உறுதிப்படுத்துதல், அவசர முக்கிய விஷயங்களை விவாதிக்கும் கூட்டங்களையும், படைப்பாற்றலை ஊக்குவிக்கும் நிகழ்வுகள், போட்டிகள் போன்றவைகளை அன்பியங்களுக்கிடையே நடத்தலாம்.

5. அன்பிய, பங்குத்தள, மறைமாவட்டச் செய்திகளை பகிர்ந்துகொள்ள பங்கு மறைமாவட்ட செய்தி மலரை வெளியிடலாம்.

### 4. சேவைநிலைக்கான ஆலோசனைகள்

1. இறைவார்த்தை வழியாகச் சமூகத்தின் எல்லாத் தரப்பினரையும் சென்றடைய விசுவாச உருவாக்க நிகழ்ச்சிகள் ஆக்கபூர்வமான வழியை ஏற்படுத்தும். வளர்ந்த பருவத்தினருக்கு உறுதியான இறைவெளிப்பாடுபற்றி பயிற்சிதர, இறைவார்த்தை அடிப்படையில் எளிய செயல்பாடுகளைத் தனிப்பட்ட வாழ்க்கையில் சமூக அளவில் செய்யலாம்.

2. மனித உரிமைச் சேவைகளால் வளர்ந்த பருவத்தினருக்கு பயிற்சி அளிக்கலாம். தங்களுடைய உரிமை மற்றும் சுய விடுதலை (உதாரணமாக, தங்களுடைய தனி மதிப்பீட்டு விழுமியத்தை அறிந்துகொள்ளுதல்), சமூக விடுதலை (உதாரணமாக, குழந்தைத் தொழிலாளர் நலன், சமூகத்தின் விளிம்பு நிலை மக்களை மேம்படுத்தல், சட்ட உதவிகளைச் செய்தல், சேரிவாழ் மக்களின் சூழலைக் காத்தல்) போன்ற சமுதாய சிந்தனைகளில் ஈடுபாடு காட்டி, எல்லாத் தடைகளிலிருந்தும், அடிமைத்தனத்திலிருந்தும் விடுதலை பெற்றவர்களாய் வாழ அன்பியம் அக்கறை காட்ட வேண்டும்.

3. அன்பியத்தில் வளர்ந்த பருவத்தினரின் விசுவாச உருவாக்கத்தின் வழியாக அரசியல்பற்றிய செயல்நோக்கப் பயிற்சி தந்து, நேர்மையான அரசியல் ஈடுபாட்டை ஊக்கப்படுத்தலாம்.

4. நற்செய்திப் பகிர்வு அடிப்படையில் ஆழமான ஆன்மிக, சமூக, அரசியல் செயல்பாடுகளுக்கு பயிற்சி அளிக்கலாம்.

5. அன்பியத்தின் மூலம் நற்செய்தி அறிவிப்பு அடிப்படையில் செயல்பாடுகளை மேற்கொள்ளலாம். தங்களுடைய சுற்றுச்சூழல், குடும்பங்களின் தேவைகள், தெருக்கள், பகுதியின் பிரச்சினைகளுக்கு சமூக ஆய்வின் மூலம் தீர்வு காணலாம்.

### 5. மறை மாவட்டத்திற்கான ஆலோசனைகள்

1. மறைமாவட்டத்தின் மேய்ப்புப்பணி முன்னுரிமைகளில் அன்பியம்தான் முதல் முன்னுரிமை கொண்டதாக எல்லா நிலைகளிலும் (அன்பியக் கிளைகள், மறை வட்டம் மற்றும் மறை மாவட்டம்) வெளிப்படுத்தப்பட வேண்டும். இதை மனதிற்கொண்டு, மக்களின் உருவாக்கம், சரியான தலைவர்களை உருவாக்கும் பயிற்சி, பங்குக் குருக்களுக்கு வழிகாட்டல், அன்பியத்தின் தொலைநோக்கைத் தெளிவுபடுத்துதல், இறையரசின் உணர்வில் பொதுநிலையினரைப் பங்காளர்களாக வைத்தல் போன்ற செயற்பாடுகளை மேற்கொள்ளலாம். அன்பியம் எவ்வளவு தேவையான விஷயம் என்று குருக்களுக்கும், துறவறத்தினருக்கும் எடுத்துரைக்கவேண்டும். மேலும் அன்பியத்தின் வளர்ச்சிக்கு அவர்களின் முழு ஒத்துழைப்பையும் தர வலியுறுத்த வேண்டும்.

2. மக்களுக்கு செயலூக்க வழிகாட்டல் அளிக்கவும், தலைவர்களை உருவாக்கும் பயிற்சிதரவும், இதற்காக ஒருமித்த கவனத்துடன் உழைக்கும் முழுநேரப் பணியாளர் அவசியம் தேவை. அவருடன் இணைந்து செயலூக்க வழிகாட்டல் அளிக்க விருப்பமும், ஆர்வமும், செயல்துடிப்பும் மிக்க குருக்கள், துறவறத்தினர், பொதுநிலையினர் கொண்ட குழுவை அமைக்க வேண்டும்.

3. அன்பியத்தின் செயலூக்க வழிகாட்டல், உருவாக்கம், செயல்பாடு ஆகியவைகளைத் தயாரிக்க, பயனுள்ள நீண்ட மற்றும் குறுகியகாலத் திட்டங்கள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

4. ஆயர் பேரவையின் வழிகாட்டல் திட்டத்தை, கொள்கையை, சட்டதிட்டங்களை முறையாகச் செயல்படுத்த வேண்டும். அவர்களின் வழிகாட்டலின்படி ஆண்டு ஒருமுறை மறைமாவட்ட அளவில் அன்பியக் கருத்தரங்கும், இரண்டாண்டுக்கு ஒருமுறை மறைமாவட்ட அளவில் மாநாடும் நடத்தப்பட வேண்டும். இரண்டு பொதுக் கூட்டங்களிலும் பொதுவான சமூக மற்றும் அரசியல் விஷயங்களைப்பற்றி பேச முயற்சி எடுக்க வேண்டும்.

(தொடர்ச்சி அடுத்த இதழில்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உலகத் திருச்சபைச் செய்திகள்

# கடவுளோடு ஒப்புரவாகுங்கள்


## யூபிலி மறைக்கல்வியுரையில் திருத்தந்தை

2015ஆம் ஆண்டு டிசம்பர் 8ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்ட இரக்கத்தின் சிறப்பு யூபிலி ஆண்டில், பல்வேறு பணிகளை ஆற்றுபவர்கள் மற்றும் பலதரப்பட்ட வயதினர்க்கென யூபிலி விழாக்கள் சிறப்பிக்கப்பட்டு வருகின்றன. ஏப்ரல் 30ஆம் திகதி சனிக்கிழமை அன்று இராணுவ மற்றும் காவல்துறையினரின் யூபிலி சிறப்பிக்கப்பட்டது. இவ்விழாவை முன்னிட்டு ஏறக்குறைய எண்பதாயிரம் பேர் வத்திக்கான் தூய பேதுரு வளாகத்தில் கூடியிருந்தனர். இவர்களில் ஏறத்தாழ ஒன்பதாயிரம் பேர் உலகில் மனிதாபிமானப் பணிகளில் ஈடுபட்டுள்ள பன்னாட்டு ரோட்டரி அமைப்பைச் சார்ந்தவர்கள். மேலும் இருபதாயிரம் பேர் இராணுவ மற்றும் காவல்துறையினர்.

திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் திறந்த வாகனத்தில் வத்திக்கான் வளாகத்தில் வந்தபோது இராணுவத்தினரின் இசைக்கருவிகள் முழங்கிக்கொண்டிருந்தன. கடவுளோடு ஒப்புரவாகுங்கள் (2 கொரி. 5: 20-21) என்று பவுலடிகளார் கொரிந்து மக்களுக்குக் கூறிய அறிவுரை, இந்த யூபிலி நிகழ்வில் முதலில் வாசிக்கப்பட்டது. திருத்தந்தை பிரான்சிஸ் அவர்களும் ஒப்புரவை மையப்படுத்தி உரை வழங்கினார். "அன்புச் சகோதர, சகோதரிகளே, இரக்கத்தின் முக்கிய கூறாகிய ஒப்புரவாதல் பற்றிய சிந்தனைகளை இன்று வழங்க விரும்புகிறேன்" என்று மறைகல்வியுரையைத் தொடங்கினார் திருத்தந்தை பிரான்சிஸ்.

இந்த இரக்கத்தின் சிறப்பு யூபிலி ஆண்டில் "கிறிஸ்துவோடு ஒப்புரவாகுங்கள்" (2 கொரி 5:20) என்ற தூய பவுலடிகளாரின் அழைப்பைக் கடைப்பிடிக்க நாம் அழைக்கப்பட்டிருக்கிறோம். கடவுள் தொடர்ந்து தமது மன்னிப்பை நமக்கு வழங்குகிறார். நம் பாவநிலையில் அவரின் அருளைச் சுதந்திரமாக ஏற்பதன் வழியாக மட்டுமே அவரிடம் திரும்பிச்செல்ல முடியும். இதற்கு அவர் தம் மகன் இயேசுவை நமக்கு அளித்துள்ளார். இயேசுவின் சிலுவை நம்மை இறைத்தந்தையிடம் மீண்டும் நடத்திச்செல்லும் பாலமாக அமைந்துள்ளது.

நாம் ஒவ்வொருவரும் ஒப்புரவு எனும் இலவசக் கொடையை ஏற்பதற்கு ஏற்ற காலம் இந்தப் புனித ஆண்டாகும். நம் சமூகங்களில் இதனை ஏற்று நம்மைச் சுற்றியுள்ள உலகிற்கு இதனை எடுத்துச்செல்வோம். கடவுளோடு ஒப்புரவாகும்போது நம் அகத்திற்குச் சுகமும் அமைதியும் கிடைப்பது மட்டுமல்லாமல் சமுதாயத்திற்குள் ஒவ்வொரு நிலையிலும் ஒப்புரவுக்காக உழைப்பதற்கு நம்மைத் தூண்டுகிறது. அதோடு உலகளாவிய அமைதி, நீதி மற்றும் ஒருமைப்பாட்டைக் கட்டியெழுப்புவதற்கும் உதவுகிறது.



இக்காரணத்தினால் உலகெங்கிலுமிருந்து இன்று நம்மோடு இருக்கின்ற இராணுவத்தினர் மற்றும் காவல்துறை உறுப்பினர்களை சிறப்பாக வரவேற்பதில் நான் மகிழ்கின்றேன். அன்பு நண்பர்களே, உங்களின் சவால் நிறைந்த பணி எல்லாவற்றுக்கும் மேலாக சமுதாயத்தில் அமைதி, பாதுகாப்பு மற்றும் ஒப்புரவுக்குப் பணியாற்றுவதாகும். நீங்கள் சந்திக்கும் இன்னல்கள் மற்றும் கலவரங்களில் ஒருபோதும் சோர்வடைந்துவிடாதீர்கள். மாறாக விசுவாசத்திலும் கடவுளின் அன்பு உதவியின் நம்பிக்கையிலும் எப்போதும் வளருங்கள். இவ்வாறு அன்பு, தீமையையும், அமைதி, வன்முறை மற்றும் போர்களையும் வெற்றிகொள்கின்றன என்ற உறுதிப்பாட்டுடன் கிறிஸ்தவ நம்பிக்கையின் அடையாளங்களாக நீங்கள் இருப்பீர்கள்.

இவ்வாறு தனது சனிக்கிழமை யூபிலி பொது மறைக்கல்வியுரையை நிறைவுசெய்த திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் கனடா, கென்யா, தென் கொரியா, பிலிப்பைன்ஸ், அமெரிக்கா, ஐக்கிய நாடு உட்பட பல நாடுகளிலிருந்து இதில் கலந்துகொண்ட இராணுவத்தினர் மற்றும் காவல்துறையினரை வாழ்த்தினார். நம் தந்தையாம் கடவுளின் அன்பிரக்கம் திருப்பயணிகள் மற்றும் அவர்களின் குடும்பங்களில் பொழியப்படச் செபித்தார். பின்னர் தனது அப்போஸ்தலிக்க ஆசீரை திருத்தந்தை அளித்தார்.

## திருத்தந்தைக்கு ஐரோப்பிய ஒன்றிய பாராளுமன்றத்தின் உயர்ந்த விருது

ஐரோப்பிய ஒன்றிய பாராளுமன்றத்தின் உயர்ந்த விருதான, அகில உலக 'சாலமக்னே' (Charlemagne) விருது திருத்தந்தை பிரான்சிஸ் அவர்களுக்கு வழங்கப்பட்டது.

ஐரோப்பியக் கண்டத்தில் உள்ள நாடுகளின் ஒருங்கிணைப்பிற்காகப் பாடுபடுவோருக்கு வழங்கப்படும் இவ்விருதுக்கு திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் தெரிவுசெய்யப்பட்டுள்ளார் என்ற செய்தி, கடந்த ஆண்டு டிசம்பர் 23ஆம் திகதி அறிவிக்கப்பட்டிருந்தது.

கடந்த மே மாதம் 6ஆம் திகதி வெள்ளியன்று மதியம் 12.00 மணிக்கு வத்திக்கானில் நடைபெற்ற விருதுவழங்கும் விழாவில், ஐரோப்பிய ஒன்றியப் பாராளுமன்றத் தலைவர் விருதுக்குழுவின் தலைவர் ஆகியோர் கலந்துகொண்டனர்.

2014ம் ஆண்டு திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் ஐரோப்பியப் பாராளுமன்றத்தில் வழங்கிய உரையில் பழம்பெரும் கலாச்சாரங்களின் விளைநிலமான ஐரோப்பியக் கண்டம், அமைதியிலும், சமுதாய வளர்ச்சியிலும் அக்கறை காட்டவேண்டும் என்று விடுத்த அழைப்பு இவ்விருதினை அவர் பெறுவதற்கு ஒரு காரணமாக அமைந்ததென விருது வழங்கும் குழு அறிவித்துள்ளது.

இரக்கம், சகிப்புத்தன்மை, ஒருங்கிணைப்பு, படைப்பு அனைத்துடன் வாழும் வழிகள் ஆகியவற்றை திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் தன் பணியில் இணைத்துள்ளதற்காக இவ்விருதுக்கு அவர் தெரிவுசெய்யப்பட்டுள்ளார் என்று விருது வழங்கும் குழுவினர் கூறியுள்ளனர்.

திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், இந்த விருதினைப் பெறும் இரண்டாவது திருத்தந்தை ஆவார். ஐரோப்பிய நாடுகளின் ஒருங்கிணைப்பிற்காக உழைத்த திருத்தந்தை புனித 2ஆம் யோன் போல் அவர்களுக்கும் 2004ம் ஆண்டு இவ்விருது வழங்கப்பட்டமை குறிப்பித்தக்கது.

## நாம் எல்லாரும் பொதுநிலையினராகவே திருஅவையில் நுழைந்தோம்

நம்மில் எவருமே ஆயராகத் திருஅவையில் நுழையவில்லை. மாறாக, பொதுநிலையினராகவே திருஅவையில் நுழைந்தோம் என்று சொல்லி, திருஅவையில் குருகுலத்தை மையமாக வைக்கும் போக்கை எச்சரித்துள்ளார் திருத்தந்தை பிரான்சிஸ்.

திருஅவையில் பொதுநிலையினரின் பங்கு குறித்த சிந்தனைகளை, நீண்ட கடிதமாக, திருப்பீட இலத்தீன் அமெரிக்க ஆணையத்தின் தலைவர் கர்தினால் மார்க் குவலற் (Marc Ouellet) அவர்களுக்கு எழுதியுள்ள திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், குருகுலத்தார், பொதுநிலையினருக்குப் பணியாற்ற வேண்டும் மற்றும் அவர்களைப் பயன்படுத்தக்கூடாது என்றும் கூறியுள்ளார்.

"இலத்தீன் அமெரிக்க நாடுகளின் பொதுவாழ்வில், பொதுநிலை விசுவாசிகளின் தவிர்க்க இயலாத பங்கு" என்ற தலைப்பில், கடந்த மார்ச் மாதத்தில், வத்திக்கானில் நடைபெற்ற கூட்டத்தில் கலந்துகொண்ட பிரதிநிதிகளைச் சந்தித்ததைத் தொடர்ந்து, மேலும் பல சிந்தனைகளை, இம்மடல் வழியாகத் தெரிவித்துள்ளார் திருத்தந்தை.

இலத்தீன் அமெரிக்கத் திருஅவையைப் பெரிதாகப் பாதிப்பவைகளில் குருகுலத்தை மையமாக வைக்கும் போக்கும் ஒன்று என குருக்கள் மற்றும் அர்ப்பண வாழ்வு வாழ்வோருக்கு நினைவுபடுத்தியுள்ள திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், குருகுலத்தார், பொதுநிலை விசுவாசிகளுக்குப் பணியாற்ற வேண்டும் என்றும் குறிப்பிட்டுள்ளார்.

நாம் எல்லாருமே பொதுநிலையினராகவே திருஅவையில் நுழைந்தோம் என்றும், திருஅவை, குருக்கள், ஆயர்கள், துறவறத்தார் ஆகிய உயர்ந்தோர் குழுவின் திருஅவை அல்ல என்றும், நாம் எல்லாருமே, விசுவாசிகள் மற்றும் இறைவனின் தூய மக்களால் ஆனவர்கள் என்றும் தெரிவித்துள்ளார் திருத்தந்தை பிரான்சிஸ்.

## கிறிஸ்தவர்களுக்கு இரட்டை வாழ்வு கூடாது

புறத்தோற்றத்தில் வெளிச்சமாகவும், இதயங்களில் இருள் நிறைந்தும் வாழும் இரட்டை வாழ்வு குறித்து எச்சரித்துள்ளார் திருத்தந்தை பிரான்சிஸ். பேசுவது ஒன்றும், செய்வது ஒன்றுமாக வாழ்கின்ற இரட்டை வாழ்வை கிறிஸ்தவர்கள் வாழக்கூடாது என்றும், இருளான பாதைகளில் கடவுளின் உண்மைகளைக் கண்டுகொள்ள முடியாது என்பதால், ஒளியில் நடக்குமாறும், கிறிஸ்தவர்களைக் கேட்டுக்கொண்டுள்ளார் திருத்தந்தை.

புனித சியன்னா கத்ரீன் விழாவாகிய கடந்த ஏப்ரல் 29ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை, சாந்தா மார்த்தா இல்லச் சிற்றாலயத்தில் ஆற்றிய திருப்பலியில், தூய யோவான் எழுதிய முதல் திருமடலிலிருந்து தனது மறையுரைச் சிந்தனைகளை வழங்கிய திருத்தந்தை, பாவத்திற்கும், இறையருளுக்கும் எதிரான நித்திய போராட்டம்பற்றிக் கூறினார்.

நாம் தவறிழைக்கும்போது, கடவுளின் மன்னிப்பையும், அவரது கனிவையும் தேடவேண்டும். அதுவே ஒளியின் வாழ்வுக்கு நம்மை அழைத்துச் செல்லும் என்றும், இதுவே கிறிஸ்தவ வாழ்வு என்றும், நாம் பாவம் செய்யவில்லை என்போமானால், நாம் பொய்யர்கள் என்றும் மறையுரையில் கூறினார் திருத்தந்தை. 'பிள்ளைகளே' என்று தூய யோவான் தனது மடலைத் தொடங்குவதுபற்றிக் குறிப்பிட்ட திருத்தந்தை, இந்தப் பாசமுள்ள வாழ்த்து, தாத்தா, தனது இளம் பேரக்குழந்தைகளை அழைக்கும் தொனி போன்று உள்ளது என்றும், இம்மடலிலுள்ள கனிவும் ஒளியும் இதில் வெளிப்படுகின்றது என்றும் திருத்தந்தை பிரான்சிஸ் கூறினார்.


கடவுள் ஒளியாய் இருப்பதால் நாம் ஒளியில் நடக்க வேண்டும் என்றும், ஒளியில் ஒரு காலும், இருளில் ஒரு காலும் வைத்து நடக்கக்கூடாது என்றும், பொய்யர்களாக வாழக்கூடாது என்றும் தனது மறையுரையில் திருத்தந்தை பிரான்சிஸ் கேட்டுக்கொண்டார்.

# புனிதர்களின் பாதையில்

## புனித ரோமுவால்ட்

*மடாதிபர் - (கி.பி. 952 - 1027)*

*- திருவிழா யூன் 19 -*



மாதமொரு புனிதரை அறிந்துகொள்வோம்


இவர் இத்தாலியில் ரவென்னா நகரில் பிரபு குலத்தில் தோன்றியவர். 20 வயதுவரை மனம்போன போக்கில் வாழ்ந்தவர். ஒருமுறை இவரது தந்தை தம் உறவினர் ஒருவரைச் சொத்துத் தகராறு காரணமாக இவரின் கண்ணெதிரில் கொன்றுபோட்டார். இதற்குக் கழுவாயாக ஆசீர்வாதப்பர் சபை மடம் ஒன்றில் தஞ்சம் புகுந்து, அங்கு கடும் தவமுயற்சிகளில் ஈடுபட்டார். ஆனால் அங்கு துறவிகள் எவ்விதக் கட்டுப்பாடுமின்றி வாழ்ந்தது இவருக்கு எரிச்சலை மூட்டியது. எனவே அந்த மடத்தைவிட்டு வெளியேறி, முதலில் வெனிஸ் நகருக்கு அருகிலும், பின்னர் பிரன்னீஸ் மலைப்பகுதியிலும் செபதவ வாழ்க்கையை மேற்கொண்டார்.

அடுத்த 30 ஆண்டுகள்வரை வட இத்தாலி, தென் பிரான்சு, தென் ஸ்பெயின் பகுதிகளில் துறவு மடங்களில் ஒழுங்குகளைப் பற்றுறுதியுடன் கடைப்பிடிக்க வழிகாட்டியாகத் திகழ்ந்தார். தனிமையில் இறைவனுடன் நெருங்கிய தோழமைகொள்ள விரும்பியவர்களுக்கு மனித வாடையே இல்லாத சூழலில் குடிசைகள் அமைத்துக்கொடுத்தார். அதில் ஒரு மடம்தான் கமல்டொலி என்ற இடத்தில், அப்பினைன் மலை உச்சியில் கி.பி. 1012ஆம் ஆண்டு ஐந்து குடிசைகள் கொண்டதாக அமைந்துள்ளது.

புனிதர் தனிப்பட்ட ஒரு துறவு சபையைத் தோற்றுவிக்கத் திட்டமிடவில்லை. இருப்பினும், கமல்டொலிஸில் நிறுவப்பட்ட மடம்தான், கடுமையான ஒழுங்குகள்கொண்ட பெனடிக்டின் துறவற சபையாகப் பெயர்பெற்றுக் காட்சியளிக்கிறது. இதுவே மேலைத்திருச்சபையில் தவமுனிவர்களுக்கான சபையாக மீண்டும் தோன்றியது. இது சுற்றுச்சுவர் எழுப்பப்பட்ட ஒரு சிற்றூர். இங்கே வரும் ஒவ்வொரு துறவியும் ஒரு அறை, ஒரு பணித்தளம், ஒரு தோட்டம் இவற்றைப் பெற்றுக்கொண்டு அங்கே என்றும் மௌனம், தனிமை இவற்றினிடையே இறைபணி புரிகிறார். வெளி உலகத் தொடர்பை அவர் நினைத்தும் பார்க்க முடியாது.

இப்புனிதரின் வாழ்க்கை வரலாறுபற்றி விவரிக்கும் புனித பீற்றர் டேமியன் இவ்வாறு கூறுகிறார்: "ரோமுவால்டு உலகம் முழுவதையும் ஒரு துறவற மடமாகவும். ஒவ்வொருவரையும் ஒரு துறவியாகவும் மாற்றும் திட்டம் வைத்திருந்தார்!" மௌனமும் கடும் தவமுயற்சிகளும்தான் இச்சபையின் சிறப்புக் கூறுகள்! கி.பி 1086ஆம் ஆண்டு முதல், பெண்களுக்கும் அவர்களின் நிலைக்கேற்பக் கமெல்டொலிஸ் என்ற இடத்தில் மடங்கள் தோன்றத் தொடங்கின. புனிதரின் கல்லறையில் பல புதுமைகள் நிகழ்ந்ததாகக் குறிப்புக்கள் உள்ளன. இதன் காரணமாக இவர் இறந்து ஐந்து ஆண்டுகளுக்குப்பின், இவரது கல்லறைமீது ஓர் ஆலயம் எழுப்பப்பட்டுள்ளது. கி.பி. 1466ல் இவரது உடல் அழியாமல் இருந்ததாகக் கூறப்படுகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# அதிர்வுகள் .....!

அருட்பணியாளர் செ. அன்புராசா, அ.ம.தி எழுதும்

சமகால சமூக அரசியல் ஆன்மீகம் சார்ந்த தொடர் 53

## நறுக்காக, சுறுக்காக, சுவையாக, சுகமாக அமைய வேண்டும் !

### *மனக்குழப்பத்திலும் தெளிவாயிருக்கிறான்!*

மிகவும் பிரசித்திபெற்ற ஒரு நிறுவனத்தின் பிரமுகர் ஒருவர் மனநோயாளர் விடுதியைப் பார்வையிடுவதற்காகச் சென்றிருந்தார். மனநோயாளர் அனைவரையும் ஓரிடத்தில் உட்கார வைத்திருந்தார்கள் பொறுப்பானவர்கள். பிரமுகர், அங்கு குழுமியிருந்த மனநோயாளர்களுடன் பேசவிரும்பினார். அந்நோயாளர்கள் நீண்ட உரைகளை செவிமடுக்க மாட்டார்கள் என்பதை பிரமுகருக்கு விடுதிப் பொறுப்பாளர் எடுத்துக்கூறியும் அப்பிரமுகர் அவர்களுடன் பேசவேண்டும் என்று பிடிவாதமாய் இருந்தார். அதனால் விடுதிப் பொறுப்பாளர் அவர் விருப்பத்திற்கே விட்டுவிட்டார்.

பிரமுகர் பேச்சை ஆரம்பித்து சிறிது நேரத்துக்குள்ளேயே அந்நோயாளர்கள் ஒவ்வொருவரும் ஒவ்வொரு திசையைப் பார்த்தபடி இருந்தார்கள். இருப்பினும், பிரமுகர் தன்னுடைய உரையை நீண்ட நேரமாக ஆற்றிக்கொண்டு நின்றார். ஒரே ஒரு நோயாளி மட்டும் அப்பிரமுகரின் உரையை மிகக்கவனமாகக் கேட்டுக்கொண்டிருந்தான்!

மனநோயாளர் விடுதி என்பதால் அவர்களிடம் அத்தகைய ஆர்வத்தை பிரமுகர் எதிர்பார்க்கவில்லை. ஆயினும், அக்குறித்த நோயாளி மிகுந்த ஆர்வத்தோடும், கரிசனையோடும் அவரின் உரையைக் கவனித்துக்கொண்டிருந்ததால் பிரமுகர் மிகுந்த மகிழ்ச்சி அடைந்தார்.

உரை முடிவுற்றதும் குறிப்பிட்ட அந்நபர் எழுந்துசென்று விடுதிப் பொறுப்பாளரிடம் ஏதோ கூறிவிட்டுத் தன்பாட்டில் போய்விட்டார். தம் உரைபற்றியதாகத்தான் அவன் ஏதாவது கூறிவிட்டுச் சென்றிருக்கவேண்டும் என எண்ணிய பிரமுகர் விடுதிப் பொறுப்பாளரிடம் விடயத்தை வினவினார்.

ஆரம்பத்தில் விடயத்தைக் கூறவிரும்பாவிட்டாலும் அப்பிரமுகரின் தொடர் வேண்டுகோளுக்கு இணைங்கி அம்மனிதர் கூறிய விடயத்தை வெளிப்படுத்த ஒருவாறு இசைந்தார் விடுதிப் பொறுப்பாளர்: 'என்ன கொடுமை சேர் இது! இவனையெல்லாம் வெளியேவிட்டு, என்னைப்போல ஆட்களையெல்லாம் உள்ள வைச்சிருக்கிறாங்களே!' என்றான் ஐயா! என்று பதில் நிறுத்தினார் விடுதிப் பொறுப்பாளர்!

### *எங்கு, எப்படி, எவ்வளவு!*

பேச்சுக்களை – உரைகளை ஆற்றுகின்றபோது எங்கு, எப்படி, எவ்வளவு நேரம் பேசவேண்டும் என்ற கலை பரவலாகப் பலருக்குத் தெரியாததுபோலத்தான் தெரிகிறது. பலவகைப்பட்ட நிகழ்வுகளில் பங்கெடுக்கின்றபோது இவ்வாறான உணர்வு அவ்வப்போது மனதில் எழுவது தவிர்க்க முடியாததாகின்றது. எதைப்பற்றிப் பேசவேண்டும் என்கின்ற ஆயத்தம் இல்லாமல் வந்து, ஏதாவது பேசவேண்டும் என்பதற்காக மேடைகளில் - நிகழ்வுகளில் பேசுபவர்கள் இருக்கின்றார்கள். அப்படிப்பட்டவர்களின் பேச்சில் எந்தவிதமான பொருளும் இருக்காது, சுவையும் இருக்காது, வெறும் சலிப்பே மிஞ்சி விஞ்சிக் கிடக்கும்.

தலைப்பைக் கொடுத்து இவ்வளவு நேரத்தில் உங்கள் பேச்சு - உரை இருக்கவேண்டும் என்று கேட்டுக்கொண்டால் நன்றாக தலையை ஆட்டி, "ஓம் ஓம்" என்பார்கள். ஆனால், என்ன விடயத்தைப்பற்றிப் பேசுவது என ஆயத்தம்செய்து வருவதும் கிடையாது, கொடுத்த விடயத்தைப்பற்றிப் பேசுவதும் கிடையாது, நேரத்தைக் கவனத்தில்கொள்வதும் கிடையாது.

இதில் மிகவும் வேதனைக்குரியதும் ஒருவகையில் கோபத்திற்குரியதும் என்னவென்றால் ஐந்து நிமிடம் உரையாற்றக் கேட்டிருந்தால் உரையாற்றத் தொடங்கி சுமார் ஐந்து நிமிடங்களில், "....... சுருக்கமாக உரையாற்றும்படி ஏற்பாட்டாளர்கள் கேட்டிருக்கிறார்கள். எனவே சுருக்கமாக என் உரையை ஆற்றி விடைபெறலாம் என எண்ணுகிறேன்!" என எந்தவித கூச்சமும் இல்லாமல் கூறி, உரையை நிறைவுசெய்யவேண்டிய நேரத்தில் - இடத்தில் அவர்கள் உரையை ஆரம்பிப்பார்கள்! இது எப்படிப்பட்டது என்றால், விமானம் தரையிறங்க வேண்டிய விமான நிலையத்தை அடைந்து அங்கு தரையிறங்காமல் மீண்டும் தேவையேதும் இல்லாமல் உயரப்பறந்து விமான நிலையத்தைச் சுற்றி தேவையில்லாமல் வட்டமடிப்பதைப் போன்றது. 'எந்த விமானியும் அப்படிச் செய்வார்களா?' என நீங்கள் கேட்கலாம். ஆனால், மேடைகளில் - நிகழ்வுகளில் அப்படிச் செய்கிறார்களே! அதற்கு என்ன சொல்லப் போகிறீர்கள்?

இப்படிப்பட்டவர்களை அடுத்துவரும் நிகழ்வுகளில் அவைக்குள் வரவிடாமல் சபைக்குள் கட்டிவைத்து நல்ல உரைகளைக் கேட்கச் செய்யவேண்டும். இல்லையென்றால், இப்பேர்ப்பட்ட பேச்சாளர்களின் ஆயுட்காலத்திலேயே இவர்களுடைய பார்வையாளர்களாக இருப்பவர்களின் ஆயுட்காலம் முடிவுறும் என்று அடித்துக் கூறலாம்! இவ்வுண்மையைத்தான் இன்றைய மொழிநடையில் 'அறுத்து அறுத்துக் கொல்லுதல்' என அழைக்கின்றார்கள்.




### *உரைகள் பல வகை!*

உரைகளில் எத்தனையோ வகையுண்டு என்பதனை உரையாற்றுபவர்கள் முதலில் நன்கு அறிந்துகொள்ள வேண்டும். வெவ்வேறு வகைப்பட்ட உரைகளைப் பற்றிய அறியாமைதான் ஒருவகையான உரையுடன் இன்னொரு வகையான உரையைக் கொண்டுவந்து கலந்து புட்டு அவிக்கப்போய் களிக் கிண்டினதுபோல பலருடைய உரைகள் ஆகிவிடுவதற்குக் காரணமாகின்றது.

நாற்பத்திநான்கு வகையான உரைகளைப்பற்றி கலாநிதி மனோன்மணி சண்முகதாஸ் அவர்கள் 'இன்று தமிழ்மொழியில் உரைகள் - ஒரு நுனித்த நோக்கு' என்ற கட்டுரையில் எழுதியிருக்கின்றார். அவை; அஞ்சலியுரை, அருளுரை, அறிமுகவுரை, அறிவுரை, அணிந்துரை, ஆசியுரை, ஆய்வுரை, என்னுரை, ஏற்புரை, கண்டனவுரை, கருத்துரை, காண்டிகையுரை, குறிப்புரை, சிறப்புரை, சுருக்கவுரை, சொற்பொருளுரை, திறப்புரை, தெய்வீக உரை, தொகுப்புரை, தொடக்கவுரை, நயப்புரை, நன்றியுரை, நிறைவுரை, நினைவுரை, நேர்முகவுரை, பதவுரை, பதிப்புரை, பாராட்டுரை, பிரார்த்தனையுரை, பொழிப்புரை, மறுப்புரை, முகவுரை, முடிவுரை, முன்னுரை, வரவேற்புரை, வழக்குரை, வாழ்த்துரை, விசேட உரை, விமர்சனவுரை, வியப்புரை, விரிவுரை, விருத்தியுரை, விளக்கவுரை, வெளியீட்டுரை என்பனவாம்.

ஆக, உரையாற்றச் செல்வதற்கு முன்பாவது எவ்வாறான உரைக்குத் தம்மை அழைத்திருக்கின்றார்கள் என்றாவது பார்த்துவிட்டுச் செல்வது நிகழ்வு ஏற்பாட்டாளர்களுக்கும், பார்வையாளர்களுக்கும் மிகுந்த நன்மை பயக்கும். அத்துடன் கொடுக்கப்பட்ட உரையில் என்னன்ன விடயங்களைச் சேர்த்துக்கொள்ள வேண்டும் என்பதைக் குறித்துக்கொண்டு செல்வதாலும், அவற்றை மட்டும் உரைப்பதாலும் கோடி புண்ணியம் கிடைப்பதோடு மற்றய பேச்சாளர்களின் - ஏற்பாட்டாளர்களின் - பார்வையாளர்களின் சூடான பெருமூச்சுக்களைக் குறைக்கவும் வழிவகுக்கும் எனத் துணிந்து கூறலாம்.

### *இரங்கல் உரைக்காவது இரக்கம் காட்டவேண்டும்!*

ஓர் இறுதி அஞ்சலி நிகழ்வொன்றில் குறிப்பிட்ட ஒருவரை இரங்கல் உரையாற்ற அழைத்திருந்தார்கள். அந்நபர் அங்கு வந்திருந்த அத்தனைபேரையும் விழித்து, வணக்கம் சொல்லி முடிப்பதற்குள் மூன்று நான்கு நிமிடங்களே ஆகிவிட்டன. அவருக்குக் கொடுக்கப்பட்ட நேரம் அஞ்சலி நிகழ்வுக்கு வந்தவர்களை விழிப்பதிலேயே முடிந்துவிட்டது! காரணம் சாவுவீடு என்பதால் பலதிறத்தாரும் அங்கு வந்ததனால் அத்தனை பேரையும் விழித்து வணக்கம் கூற விளைந்ததால் வந்த நிலையோ அல்லது வினையே என்று தெரியவில்லை!

பொதுவாக வெளியீடு விழா, பாராட்டுவிழா, பரிசளிப்பு விழா, கலை விழா போன்ற விழாக்களில் முதன்மை விருந்தினர், சிறப்பு விருந்தினர்(கள்), கௌரவ விருந்தினர்(கள்) போன்றவர்களை பேச்சாளர் ஒருவர் உரையாற்றுவதற்கு முன் விழித்துச் சொல்கின்ற மரபு - வழக்கம் இருக்கிறது. இவ்விழாக்களில்கூட அழைக்கப்பட்ட அத்தனை விருந்தினர்களையும் விழித்துச் சொல்லவேண்டிய தேவையில்லை. அனைவரையும் பொதுவாக விழித்துக்கூறி வணக்கம் தெரிவித்துவிட்டு விடயத்திற்குள் செல்ல முடியும்.

ஆனால், இரங்கல் உரையாற்றும்போது பொதுவாக இம்மரபு கடைப்பிடிக்கப்படுவதில்லை. காரணம், சாவுவீட்டில் இறந்தவர்தான் முதன்மை விருந்தினர்! ஆக, இறந்துபோனவரின் நற்பண்புகளைப் பற்றி, சமூகத் தொண்டுகள் செய்திருந்தால் அவர் செய்த சமூகத் தொண்டுகளைப்பற்றி விதந்துரைக்கலாம். சாவடைந்தவருக்கு அஞ்சலியும், அவரின் பிரிவால் துயருறுகின்ற உறவினர்களுக்கு ஆறுதலும் இரங்கல் உரையில் கூறலாம். அதைவிடுத்து நினைத்தவற்றை எல்லாம் இரங்கல் உரையில் பேச முடியாது, பேசவும் கூடாது.

### *ஒருவார்த்தை போதுமெனில், இரு வார்த்தை ஏன்?*

ஒருவர் பேசுவதை (உரையாற்றுவதை) அவதானித்துவிட்டு சிறுவன் ஒருவன் அவரிடத்தில் சென்று, "ஐயா நீங்க, எங்கட அப்பா மாதிரிப்பேசிறிங்க!" என்றான். அவர் மகிழ்ச்சி மிகுதியால் அவனை ஆரத்தழுவி உச்சி முகர்ந்து, "அப்ப, உங்கட அப்பா நல்லாப் பேசுவாரா?" எனக் கேட்டதற்கு அவன், "இல்ல, எங்க அப்பா நல்லா உளறுவாரு!" என்றானாம்.

"ஒரு சொல் போதும் என்றால், ஏன் இரு சொற்களைச் செலவு செய்கிறாய்! எவ்வளவு சொல்லியும் பயனில்லை என்றால், ஒரு சொல்லையும் வீணாக்காதே!" என்ற ஓர் அனுபவசாலியின் வாக்குமூலம் என்னைப் பொறுத்தவரையில் உரையாற்றுபவர்கள் - பேச்சாளர்களின் முதன்மையான சத்திய வாக்காக அமைதல் வேண்டும்.

மேலும், அனேக பேச்சாளர்களில் - உரையாற்றுபவர்களில் காணப்படும் பொதுவான ஒரு குறைபாட்டை பாரசீகப் பழமொழி அழகாகப் படம்பிடித்துக் காட்டுகின்றது: "எல்லா மனிதருக்கும் ஒரு பலவீனம் இருக்கிறது: ஒன்று, கதைக்க வேண்டிய இடத்தில் மௌனமாய் இருப்பது! மற்றொன்று, மௌனமாய் இருக்க வேண்டிய இடத்தில் பேசித் தொலைப்பது" என்று செல்கின்றது அப்பழமொழி. பேச்சாளர்கள் - உரையாற்றுபவர்கள் பின்பற்றவேண்டிய இரண்டாவது சத்திய வாக்கு இது!

### *கு(ர)ணப்படுத்தவும் பயன்படுத்தலாம்!*

"வார்த்தையால் ஒருவரைக் குணமாக்கவும் முடியும், ரணமாக்கவும் முடியும்!" என்ற வாக்கியம் மிகவும் அருமையான, அவசியமான, உயிரோட்டம் நிறைந்த வார்த்தைகள். காரணம், உற்சாகமான வார்த்தைகள், மேற்கொள்ளும் - மேற்கொள்ளவிருக்கும் முயற்சிகளுக்கு மேலும் உந்துசக்தியாக அமையும். ஆறுதலான வார்த்தைகள், கவலைகளுடன் இருக்கும்போது மனதை ஆற்றுப்படுத்தும். அறிவுடன்கூடிய அனுபவ வார்த்தைகள், ஆக்கபூர்வமான திட்டங்களுக்கும் செயற்பாடுகளுக்கும் வலுச்சேர்க்கும்.

ஆனால், கெட்ட வார்த்தைகள் வெறுப்பை, கோபத்தை ஏன் பகைமையைக்கூட ஏற்படுத்தும். அவமதிக்கும் - அவமானப்படுத்தும் வார்த்தைகள் தாழ்வுமனப்பான்மையை உருவாக்கும். உணர்ச்சிவசப்பட்ட வார்த்தைகள், மூளையைச் சிந்தனை செய்யவிடாமல் வெறும் உணர்வுகளுக்கு மட்டும் தீனிபோடும்.

அதனால்தான், மென்மையான - ஆரோக்கியமான வார்த்தைகள் குணப்படுத்தும் ஆற்றலையும், வன்மையான - கொடூரமான வார்த்தைகள் காயப்படுத்தும் அதாவது ரணப்படுத்தும் தன்மையையும் கொண்டிருக்கின்றன. ஆக, வார்த்தைகளின் அடிப்படையான இத்தார்ப்பரியங்களை நன்கு புரிந்துகொண்டால், உரையாடல்களிலும் தொடர்பாடல்களிலும் அனைவருக்கும் நன்மைபயக்கும், குணப்படுத்தும் சக்திமிக்க வார்த்தைகளை ஒருவர் எப்போதும் பயன்படுத்திக்கொள்ள முடியும்.

வாழ்க்கையில் ஏற்படும் 95 வீதமான பிரச்சினைகள் எங்கள் குரல்தொனியால் ஏற்படுகிறது என்கிறார்கள் சிலர். என்ன சொல்கிறோம் என்பதல்ல, எப்படிச் சொல்கிறோம் என்பதுதான் முக்கியமானது! தொனியை மாற்றுங்கள், வாழ்க்கையில் - உறவில் - தொடர்பாடலில் பாரிய மாற்றம் ஏற்படும் என்கிறார்கள்.

### *வெல்லும் அதேவேளை கொல்லும்!*

ஆகவேதான், "சில வார்த்தை வெல்லும், சில வார்த்தை கொல்லும்" என்றார்கள். வார்த்தைகளால் ஒருவரை வாழ்விக்கவும் அதாவது உற்சாகமான ஊக்கப்படுத்தும் வார்த்தைகளால் ஒருவரை வளப்படுத்தவும் முடியும்! அதேவேளை வார்த்தைகளால் ஒருவரை காயப்படுத்தி, ஆயுள்பூராகவும் மனம்நொந்து வாழவேண்டிய சூழலையும் ஏற்படுத்த முடியும். இவ்வுண்மையைத்தான், "தீயினால் சுட்டபுண் உள்ளாறினும் ஆறாதே நாவினால் சுட்ட வடு" என்ற வள்ளுவரின் வார்த்தைகள் சுட்டிநிற்கின்றன.

ஆனால், உண்மையில் அடுத்தவரின் உணர்வுகளை மதித்து, தேவையான வார்த்தைகளை மட்டும் பேசி உரையாடல்களை அமைத்துக்கொள்வோமாயின் ஒவ்வொரு உரையாடலும் அர்த்தம் சேர்ப்பதாக, ஆறுதல் கொடுப்பதாக, உற்சாகம் ஊட்டுவதாக, சக்தி அளிப்பதாக, உயிர் ஊட்டுவதாக அமைந்துவிடும்.

அதனால்தான் சொல்கிறார்கள், "சொற்கள் தேனீக்கள் போன்றவை. அவைகளில் தேனும் உண்டு, கொடுக்கும் உண்டு" என்று! வார்த்தைகள் – உரையாடல்கள் தேனீக்கள்போல தேனையும் தரலாம், கொடுக்காகவும் கொட்டலாம். சிலர் தேனாக இனிக்காமல் எப்போதும் கொடுக்காகக் கொட்டிக்கொண்டிருப்பார்கள். அதனால்தான், சிலர் தங்கள் உரையாடல்களில் பொதுவாக மற்றவர்களைக் காயப்படுத்தி அல்லது மனதை நோகடிக்கும் வகையில் வார்த்தைப் பிரயோகங்களை பயன்படுத்துவதைப் பார்க்கலாம்.

### *கவனமாகக் கையாளவேண்டும்*

"ஒரு கவனக்குறைவான வார்த்தை சர்ச்சையில் முடியும், ஒரு கடுமையான வார்த்தை வாழ்க்கையை முறிக்கும், ஒரு கசப்பான வார்த்தை வெறுப்பை வளர்க்கும்" என்ற வார்த்தைகள் நம் உரையாடல்களையும் தொடர்பாடல்களையும் சீர்மைப்படுத்திச் செம்மைப்படுத்துவதற்கு உதவும் என உறுதியாகக் கூறலாம்.

ஆக, நாம் பேசும், உரையாடும், சொல்லும் வார்த்தைகளுக்கு ஆற்றல் உண்டு, சக்தி உண்டு என்பதை நன்றாக உணர்ந்துகொண்டு வார்த்தைகளை நறுக்காக, சுறுக்காக, சுருக்கமாக, சுவையாகச் சொல்லக் கற்றுக்கொள்வோம் என்றால் பேச்சு பேச்சாத்தான் இருக்கணும் - இருக்கும்.

(கருத்துக்களுக்கும் விமர்சனங்களுக்கும்: இமெயில்; anpuomi1970@gmail.com அல்லது விலாசம்; 'அமதிக்கரங்கள்', மாங்குளம்.)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இரக்கத்தின் ஆண்டு - சிறப்புக் கட்டுரை

# ஆழம்காணா இறை இரக்கம்

பீ. கிறிஸ்பி குருஸ், பேசாலை

நற்செய்தியின் இதயத்தொனியாக விளங்குவது இறைவனின் இரக்கம் என்றால் அது மிகையாகாது. இறைவனின் இரக்கத்தை அறியாதவர்கள் அறிந்துகொள்ளவும், அதை அனுபவிக்கவும் நம்மை அழைத்து நிற்கின்றது இறை இரக்கத்தின் குரலொலி. இதை அறியாது வாழ்வோமாயின் அது நமது மடமை ஆகும். இறைவனின் குணாதிசயங்களில் முதன்மையானதும் தனித்துவமானதும் இறைவனின் இரக்கம் ஆகும்.

இரக்கம் என்பது இறைவன் மனிதனைச் சந்திக்கின்ற மாபெரும் செயலாகும். இறைத்தந்தையையும் மனிதனையும் இணைக்கின்ற உறவுப்பாலம்தான் இயேசுக்கிறிஸ்து. இறைத்தந்தையின் அளவுகடந்த இரக்கத்தினை வெளிப்படுத்தும் திருமுகம் அவரே. இறை இரக்கத்தின் தொடக்கமும் முடிவும் அவரே.

அன்புதான் இயேசுவின் இதய ஊற்று. இயேசுவின் அன்புக்கு எல்லை இல்லை. இயேசுவினுடைய அன்பின் அடையாளம் சிலுவை. அதற்குமேல் அன்புக்கு அளவுகோல் இல்லை. அந்த அன்புதான் சிலுவையில் தொங்கிக்கொண்டிருக்கிறது. மலையருவிபோல அதிலிருந்து இரக்கம் வடிந்துகொண்டிருக்கிறது. இயேசுவின் திருக்காயங்கள் அனைத்தில் இருந்தும் இரக்கம் பெருக்கெடுத்துப் பாய்கின்றது. ஆனாலும் இயேசுவின் திருஇருதயத்தின் காயமானது ஆழம்காணமுடியாத இறை இரக்கத்தின் ஊற்றாக இருக்கின்றது. ஆன்மாக்களுக்குரிய அருள் அனைத்தும் இந்த ஊற்றில் இருந்துதான் பெருக்கெடுத்தோடுகின்றது. இந்த ஊற்றில் நாம் நனைய வேண்டுமாயின் தூய கதவாகிய திருவிவிலியத்தின் வாயில் வழியாக உள்ளே நுழைய வேண்டும்.

மனித வரலாறு முழுவதும் இறைவன் தம்மை அன்பும் இரக்கமும் உள்ளவராக வெளிப்படுத்தி இருக்கின்றார் (தி.பா: 103) இறைவனின் அன்பு அபரிமிதமாக வெளிப்படுவதைத் திருவிவிலியத்தில் காணமுடிகின்றது. "நம் குற்றங்களுக்கு ஏற்ப நம்மை நடத்துவதுமில்லை, தண்டிப்பதுமில்லை." மரணப்பாடுகளை அனுபவித்த இயேசு ஆண்டவர் சிலுவையில் தொங்கிக்கொண்டிருந்து "தந்தையே இவர்கள் அறியாமல் செய்கிறார்கள்" என்ற திருவசனத்தின் வாயிலாக நம் குற்றங்களையெல்லாம் மன்னிக்கிறார். நம் உயிரைப் படுகுழியின்று மீட்கின்றார். சிலுவையில் இருந்து இரக்கம் பாய்ந்துவரும் வாய்க்கால்களைப் பார்ப்போம்.

### 01. இயேசுவின் அன்பு

இயேசுவின் அன்பு நற்செய்தியின் மெய்ப்பொருளாகும். அன்பு கடவுளிடமிருந்து வருகின்றது. "நாம் வாழ்வு பெறும் பொருட்டு கடவுள் தம் மகனை உலகுக்கு அனுப்பினார். இதனால் கடவுள் நம்மீது வைத்த அன்பு வெளிப்பட்டது" (1 யோவா 4:9). தம் மகனை நம் பாவங்களுக்குக் கழுவாயாக அனுப்பினார் என்பதில்தான் அன்பின் தன்மை விளங்குகிறது. அனைத்திலும் தலைசிறந்தது அன்புதான். திருச்சட்டத்தின் நிறைவும் அன்புதான். தூய ஆவியின் கனிகளில் முதன்மையானதும் அன்புதான். இறை அன்புதான் மனித வாழ்வுக்கு ஆணிவேரும், அடித்தளமுமாய் அமைந்துள்ளது. இறை அன்புக்கு ஈடுஇணையும் இல்லை, உரசிப்பார்க்க உரைகல்லும் இல்லை. இறைவன் நம்மை அன்பு செய்கிறார் என்று உணரும்போது அந்த உணர்வுக்குள் ஏற்படுகின்ற விசுவாசம்தான் அவரது அன்புக்கு நாம் காட்டும் பதிலன்பு.

### 02. இயேசுவின் பரிவுள்ளம்

"திரண்டிருந்த மக்களை அவர் கண்டபோது அவர்கள்மேல் பரிவுகொண்டார்" (மத் 9:36). இயேசுவின் வார்த்தையைக் கேட்க ஊர்களிலிருந்து கால் நடையாக, பசியோடு களைப்போடு, இயேசுவைக் காணவேண்டும் என்ற ஆவலோடு வந்திருந்த திரளான மக்களைக் கண்டு அவர்கள்மீது பரிவுகொண்டார் என்று மத் 14:14ல் பார்க்க முடிகின்றது. மேலும் "நான் இம்மக்கள் கூட்டத்தின்மீது பரிவுகொள்கிறேன். ஏற்கனவே மூன்று நாட்களாக இவர்கள் என்னுடன் இருக்கிறார்கள். உண்பதற்கும் இவர்களிடம் ஒன்றும் இல்லை. இவர்களைப் பட்டினியாய் அனுப்பிவிடவும் நான் விரும்பவில்லை" என்று இயேசு ஆண்டவர் தன்னை தேடிவந்த மக்கள்மீது பரிவிரக்கம் கொள்வதை (மத் 15:32) அறியமுடிகின்றது. இதே பரிவுள்ளத்தை நல்ல சமாரியனும் குற்றுயிராய்க் கிடந்த ஒருவர்மேல் காட்டுவதை (லூக் 10:33) பார்க்கிறோம்.

கொஞ்சம் முன்னோக்கி பழைய காலத்தை எட்டிப் பார்ப்போமானால், "எகிப்தில் என் மக்கள் படும் துயரத்தை என் கண்களால் கண்டேன். அவர்கள் எழுப்பும் குரலையும் கேட்டேன்" என்று இஸ்ராயேல் மக்கள்மீது இறைத்தந்தை பரிவிரக்கம் கொள்வதை விடுதலைப்பயண நூல் படம்பிடித்துக் காட்டுகின்றது. பாலைவன பயணத்தின்போதும் வானில் இருந்து 'மன்னா' என்ற அப்பமும், பாறையில் இருந்து தண்ணீரும் கொடுத்து மக்களின் பசி, தாகம் ஆற்றுவதை அவரது பரிவுள்ளம் எடுத்துக் காட்டுகின்றது.

### 03. இயேசுவின் கருணை

இறைவன் நேர்மையாளருக்கு ஆசிவழங்கி கருணை என்னும் கேடயத்தினால் மறைத்துக் காக்கின்றார் (தி.பா 5:12) என்றும், அவரது சினம் ஒரு நொடிப்பொழுதுதான் இருக்கும். அவரது கருணையோ வாழ்நாள் முழுவதும் நீடிக்கும்! (தி.பா 30:5) என்றும் பார்க்கிறோம். "பெரும் சுமை சுமந்து சோர்ந்திருப்போரே எல்லாரும் என்னிடம் வாருங்கள். நான் உங்களுக்கு இளைப்பாறுதல் தருவேன். நான் கனிவும் மனத்தாழ்மையும் உடையவன்" (மத் 11:28-29) என இயேசு ஆண்டவர் இவ்வாறு கூறுகின்றார். இயேசு தனது விண்ணரசுப் பணியில் இறையரசைப் போதித்ததை மட்டுமல்ல உடல்நலம் குன்றியவர்களைத் தொட்டுக் குணப்படுத்தியதையும் நற்செய்தி வாயிலாக அறிகின்றோம். "எனது தழும்புகளால் நீங்கள் குணமாவீர்கள். நானே உன்னைக் குணமாக்கும் ஆண்டவர்" என்று தன்னிடம் ஓடிவந்த நோயாளர்களைத் தொட்டுக் குணமாக்கினார் கருணை உள்ளம் கொண்ட தெய்வம் இயேசு ஆண்டவர்.

### 04. இயேசுவின் பாதுகாப்பு

"மலைகள் நிலைசாயிலும், குன்றுகள் இடம்பெயரினும் உன்மீது நான் கொண்ட பேரன்போ நிலைசாயாது" (ஏசா 54:10). இறைவனின் பேரன்பும், உண்மையும் தொடர்ந்து நம்மைப் பாதுகாக்கின்றது. "அவர் கேடுவரும் நாளில் என்னைத் தம் கூடாரத்தில் மறைத்து வைப்பார். குன்றின்மேல் என்னைப் பாதுகாப்பார்". இஸ்ராயேல் மக்கள் வழிப்பயணம் செய்யும்போது "ஆண்டவர் பகலில் அவர்களை வழிநடத்த மேகத்தூணிலும், இரவில் ஒளிகாட்ட நெருப்புத் தூணிலும் இருந்தார். பகலிலும், இரவிலும் அவர்கள் பயணம் செய்வதற்காக அவர் அவர்கள்முன் சென்றுகொண்டிருந்தார்" (வி.ப 13:21).

இறைவன் நம்மை உருவாக்கியதோடு தனது கடமை முடிந்ததென்று விட்டுவிடவில்லை. ஒவ்வொருவருடைய தலைமுடியைக்கூட எண்ணி வைத்திருப்பதிலிருந்து நாம் எழுவதையும் அமர்வதையும் அறிவதிலிருந்து, தாயின் கருவில் நம்மை பாதுகாப்பதிலிருந்து அவருடைய இரக்கம் எப்போதும் நம்மோடு உள்ளது. "என் பிரசன்னம் உன்முன்னே செல்லும் என்று வழிநடத்துகின்றார். இதோ உலக முடிவுவரை எந்நாளும் உங்களோடு இருக்கிறேன்" என்று எம்மோடு உடனிருக்கின்றார். "அஞ்சாதே, திகையாதே உன்னோடு நான் இருக்கிறேன்" என்று ஆற்றுப்படுத்துகின்றார். அவருடைய பாதுகாப்பு நமக்கு அரணும் கேடயமுமாக இருக்கிறது.


### 05. இயேசுவின் இரக்கம்

"இரக்கத்தின் சுவாலை தன்னை வழங்கும்படி என்னை எரித்துக் கொண்டிருக்கிறது. அதனை ஆன்மாக்கள்மீது பொழிந்துவிட விரும்புகிறேன்" (புனித பவுஸ்ரீனா) என்று இயேசு ஆண்டவர் புனித பவுஸ்ரீனாவுக்கு வெளிப்படுத்தியிருக்கிறார். இயேசுவின் இறைஇரக்கம் ஆழம் காணமுடியாததும், ஆய்ந்தறிய இயலாததுமாகும். இரக்கம் என்பது இறைவன் மனிதரை அணுகிவருகின்ற செயல்களைச் சுட்டிக்காட்டும் தனித்துவமான வார்த்தையாகும். இறை இரக்கத்தின் மையக்கருத்து என்னவெனில் (லூக் 6:36) "உங்கள் தந்தை இரக்கம் உள்ளவராய் இருப்பதுபோல நீங்கள் இரக்கம் உள்ளவராய் இருங்கள்" என்பதாகும். ஒருவன் தன்னிலே இரக்க சுபாவம் உள்ளவராய் இருந்தால் அதைத் தனக்குள் அடக்கிவைத்திருக்க மாட்டார். அதைச் செயலில் காட்டுவார். செயல் அற்ற விசுவாசம் உயிரற்றது. ஒரு மனிதனைப் பிரதிபலித்துக் காட்டுவது அவனது சொல், செயல் என்பவையாகும். தந்தை இரக்கம் உள்ளவர் இதற்கு வேறு மாற்றுக் கருத்து இல்லை.

தந்தையின் இரக்கத்தை பெற்றுக்கொண்ட நாமும் ஆன்மீக சரீர இரக்கச் செயல்களில் ஈடுபடுதல் அவசியமாகும். இன்றைய உலகம் அநியாயத்துக்கும் அக்கிரமத்துக்கும் விலை போய்விட்டது. மனித மாண்பு செல்லாக் காசாகி பகை உணர்வு எங்கும் விதைக்கப்படுகின்றது. இரக்கமற்ற அநீத செயல்கள் அறுவடையாகின்றது. இந்த இறை இரக்கத்தின் காலம் நம்மைச் சிந்திக்க அழைக்கின்றது. இறைத்தந்தையைப்போல காயப்பட்ட உள்ளங்களைத் தேடிச்செல்வோம். சமுதாயத்தின் ஓரங்களில் வாழுகின்ற மக்களைநோக்கி நடப்போம். இறை இரக்கம் தொடர் பாடலாக எம்மைக் கடந்தும் வரட்டும். தூய கதவுகளை நோக்கி இறை ஆசிபெற "இறை இரக்கம்" என்ற வெற்றிக்கொடி பிடித்து விசுவாசப் பயணம் மேற்கொள்வோம்.

## சிறுவர் பொழிவு

### வர்ணம் தீட்டுவோம் வாங்க



### கதை : அன்பா, செல்வமா, வெற்றியா சிறந்தது?

ஓர் ஊரில் குமரன் என்பவன் தனது தாய் தந்தையுடன் வசித்துவந்தான். ஒருநாள் அவன் வீட்டின்முன் மூன்று வயதானவர்கள் வந்து, "உள்ளே வரலாமா?" என்று கேட்டனர். குமரனின் தந்தை, 'வாருங்கள்' - என்றார். "நாங்கள் மூவரும் ஒன்றாக வரமுடியாது... எங்களில் எவராவது ஒருவர்தான் வரமுடியும்... என் பெயர் பணம்... இவர் பெயர் வெற்றி... இவர் பெயர் அன்பு... எங்கள் மூவரில் ஒருவர்தான் ஒரு வீட்டுக்குள் செல்லமுடியும்... எங்கள் மூவரில் உங்களுக்கு எவர் வேண்டுமோ அவரை அழைத்துக்கொள்ளுங்கள்" என்றார் பணம் எனப்படுபவர்.

குமரனின் தந்தை "வெற்றியை அழைக்கலாம்.. நாம் எந்த வேலையைச் செய்தாலும் அதில் வெற்றியடையலாம்" - என்றார். ஆனால் குமரனோ... "அப்பா பணத்தையே உள்ளே அழைக்கலாம்... நம்மிடம் பணம் சேர்ந்துவிட்டால்... வெற்றி உட்பட... அனைத்தையும் வாங்கலாம்" என்றான். ஆனால் குமரனின் தாயோ 'வேண்டாம்... அன்பையே அழைக்கலாம். அன்புதான் முக்கியம்' என்றாள்.

பின்னர் மூவரும், "அன்பு உள்ளே வரட்டும்" என்றனர். அன்பு உள்ளே வர, அவரைத் தொடர்ந்து வெற்றியும், பணமும்கூட உள்ளே நுழைந்தனர். உடன் குமரனின் அம்மா, "அன்பை மட்டும்தானே உள்ளே அழைத்தோம்" என்றார்.

அன்பு சொன்னார். "நீங்கள் பணத்தையோ, வெற்றியையோ அழைத்திருந்தால்..... மற்ற இருவரும் வெளியே நின்றிருப்போம். ஆனால் அன்பான என்னை வரச்சொன்னதால் நான் இருக்கும் இடத்தில்தான் பணமும், வெற்றியும் இருக்கும். ஆகவே அவர்களும் உள்ளே வந்துவிட்டனர்.

அன்பு உள்ளம் இருந்தால் எமது வாழ்வில் வெற்றியும், தேவையான வசதிகளும் தாமாகவே வந்துவிடும்.

அன்பே கடவுள்!

இதையே வள்ளுவர், "அன்பின் வழிய துயிர்நிலை, அஃ. திலார்க்கு என்புதோல் போர்த்த உடம்பு" என்றார். அன்பு நெஞ்சத்தின் வழியில் இயங்குவதே உயிருள்ள உடலாகும். இல்லையேல், அது வெறும் எலும்புத்தோல் போர்த்திய வெறும் உடலாகும். சுருங்கச் சொன்னால் அன்புமனம் கொண்டவர்களே மனிதர்கள் ஆவர் என்பது இந்தக் குறளின் கருத்தாகும்.

### தேவன்பிட்டி பங்கு ... 14ஆம் பக்கத் தொடர்

கடந்த மே மாதம் 11ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகிய ஆயத்த நாள் வழிபாடுகள் இறை இரக்கத்தை மையப்படுத்திய கருப்பொருளில் இடம்பெற்றன. 22ஆம் திகதி மாலை 5.30 மணிக்கு இடம்பெற்ற நற்கருணை வழிபாட்டை மன்னார் மறைமாவட்டக் குருமுதல்வர் அருட்திரு. விக்ரர் சோசை அடிகளார் தலைமைதாங்கி நடாத்தினார்.

தேவன்பிட்டிப் பங்குத்தந்தை அருட்பணியாளர் எஸ். அருட்குமரன் அவர்கள் இந்நிகழ்வுகள் அனைத்தையும் ஒருங்கிணைத்து சிறப்பாக நடத்தியிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

## தேவன்பிட்டி பங்கு உதயத்தின் 25ஆம் ஆண்டு வெள்ளி விழா நிகழ்வுகளின் பதிவுகள்







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கலை இலக்கியச் சாளரம்

# கவிதைக் களம்

## அம்மாவின் முந்தானை

- ம: ஆன் நிலூஷா

ஓ வென்று அழுகிறது வானம்
சோ வென்ற மழை
அத்தனை துளிகளும் சொர்க்கத்தைப்போல
ஆனந்தத்துளிகள்
நான் எந்தத் துளியில் நனையட்டும்...??

தெருவெல்லாம் சின்னச் சின்னக் குளங்கள்...
சீக்கிரம் வற்றிவிடும் அருவிகள்....
சறுக்குச்சாலை....
வீதி நெடுக பறக்கும் வாகனங்கள்....
சரக்கு நனைந்த பதட்டத்தில் அவசரமாய் மூடிவைக்க
உரப்பை தேடும் சில்லறைக் கடைக்காரன்....
குளிர் தாங்கமுடியாமல் காற்றைப் போர்த்திக்கொண்டு
நடுங்கும் பனி சொட்டும் இலைகள்....

எல்லாத் தலைகளிலும் குடைப்பூக்கள்...
யாரோ சிலரின் தலைகளில் கைக்குட்டைகள்...
என் தலையை மட்டும் போர்த்தியிருக்கிறது – என்
அம்மாவின் அழுக்கு முந்தானை...
நான் இளவரசியாய்த் தவழ்ந்த காலத்தில் - அந்த
முந்தானை என் அழகான அரண்மனை...
அவள் சேலையால் கட்டிய கோட்டையைத் தாண்டித்தான்
எந்தப்படையும் என்னை நெருங்க முடியும்...

மறந்தும்கூட நினைத்ததில்லை
இறந்து போவாளென்று..!
இன்று சுடலையில்..!
நானும்..!
அம்மாவின் நினைவுகளும்..!
கரித்துண்டுகளும்..!
உடைந்த மண்சட்டியும்..!

ஓ வென்று அழுகிறது வானம்..
சோ வென்ற மழை....
முந்தானையால்
என் தலை போர்த்திட
இன்று யாருமில்லை....!



## நான் கவிஞன்

- ந. பிரதீப்

வாழ்க்கையிடம்
தோற்றுப்போய்விட்டேன்
வந்தது... போனது...
மிஞ்சியிருப்பது...
எல்லாமே ஏமாற்றம்...

சாதிக்கத் துடிக்கின்றேன்
இறுதியில்
புகை பிடிக்கிறேன்...


வாலிபம் தேய்ந்துகொண்டிருக்கிறது
மாநகரசபை
விளக்குமாறுபோல...

குப்பைகளை
சேர்த்துக் கொண்டிருக்கின்றேனா...?
இல்லை
சுத்தம் செய்கிறேனா...?

பார்வைக்கு அருவருப்பாயிருக்கிறேன்
தவறு
என்னுடையதல்ல...
என்னைப் பார்ப்பவர்கள்
கண்களில்
ஊத்தையிருக்கிறது...








# கொஞ்சம் சிரிங்க

ஒருவர்: நீண்ட நாள் உயிரோட வாழ என்ன வழி?
மற்றவர்: வேறென்ன... சாகாமல் இருப்பதுதான்.

..........................

ஒருவர்: காதலர்கள் ஏன் எப்பவும் பொய்யே பேசுறாங்க?
மற்றவர்: அவங்க மெய் மறந்து காதலிக்கிறவங்களாச்சே!

..........................

ஒருவர்: நாக்கைப் பிடுங்கிக்கொண்டு சாகலாம் என்று நினைத்தேன்.
மற்றவர்: செய்வதுதானே...
முதலாமவர்: கை எச்சிலாகி விடுமே....

..........................


இவர்: "நாங்கள் ஏழு பேர் ஒரே குடையின்கீழ் நடந்து சென்றோம். ஆனால் ஒருத்தர்கூட நனையவில்லை"
மற்றவர்: "அது எப்படி?"
இவர்: "அப்போதுதான் மழையே பெய்யவில்லையே..."

..........................

ஆசிரியர்: "உலகில் எங்கெல்லாம் பெற்றோல் கிடைக்கிறது?"
மாணவன்: "எல்லாப் பெற்றோல் நிலையத்திலும் சேர்"

..........................

ஆசிரியர்: "ஏண்டா நாய் படம் வரைந்துவிட்டு, வாய் மட்டும் வரையாமல் விட்டு வைச்சிருக்கிறாய்?"
மாணவன்: "அது வாயில்லாப் பிராணி சேர்"



ஆசிரியர்: "வேடந்தாங்கலுக்கு வருகிற பறவைகள் எல்லாம் எங்கிருந்து வருகின்றன?"
மாணவன்: "முட்டையிலிருந்துதான் சேர்"

..........................

ஆசிரியர்: "படிச்சி முடிச்சதுக்குப்பின் என்ன பண்ணலாம் என்று இருக்கிறாய்?"
மாணவன்: "புத்தகத்தை மூடி வைக்கலாம் என்று இருக்கிறேன் சார்"

..........................

ஆசிரியர்: "சுரேஷ்... நீ மட்டும் ஏன் ஹோம் வோர்க் பண்ணலை?"
சுரேஷ்: "நான் ஹொஸ்ரல்ல தங்கி இருக்கிறேன் சார்"

..........................

ஆசிரியர்: "உங்க பையன் இங்கிலிஸில் படு வீக்கா இருக்கிறான் சார்"
தந்தை: "தமிழில் எப்படி இருக்கிறான் என்று சொல்லுங்க சார்"
ஆசிரியர்: "தங்களின் மகன் ஆங்கிலத்தில் மிகவும் வலுவிழந்து இருக்கிறான் ஐயா"
தந்தை: ???!!!

# மன்னா விளம்பரப் பலகை

நேரத்தின் நிலையை அறிந்துகொள். காலமே உன் உயிர்.
அதை வீணாக்குவது உன்னையே நீ கொலை செய்துகொள்வது போலாகும்.

நீங்கள் வாழ்க்கையை விரும்புகிறீர்களா? அப்படி என்றால் நேரத்தை வீணாக்காதீர்கள். ஏனெனில் வாழ்க்கை என்பது நேரத்தைக் கொண்டுதான் உருவாக்கப்பட்டு இருக்கிறது.

..........................

நிறைய அடி விழுந்தா அது வாழ்க்கை. நிறைய முடி விழுந்தா அது வழுக்கை.

..........................

சாப்பிடும்போது தரையைப் பார்த்து சாப்பிடுகிறோம் பூமித்தாய்க்கு நன்றி சொல்ல. தண்ணீர் அருந்தும்போது வானத்தைப் பார்த்து அருந்துகிறோம் மேகத்துக்கு நன்றி சொல்ல.

வேலைக்குப் போகிறவர்களின் திங்கட்கிழமையைவிட, வேலை கிடைக்காதவர்களின் திங்கட்கிழமைகள் கொடூரமானவை.

..........................

இவன் என்ன நினைப்பான், அவன் என்ன நினைப்பான் என்று நினைச்சே வாழ்கிறோம். ஆனா உண்மையில் ஒருத்தனும் நம்மைப்பற்றி நினைக்கிறதேயில்லை..! இதுவே நிதர்சனம்.

..........................

அப்பா 50 ரூபா மிச்சப்படுத்த 30 நிமிடம் நடந்ததற்கும், நான் 30 நிமிடம் மிச்சப்படுத்த 50 ரூபா ஓட்டோவுக்கு கொடுக்கிறதுக்கும் பேருதான் தலைமுறைக்கான இடைவெளி!!!

முதியோர் இல்லத்தையும் அனாதை இல்லத்தையும் ஒன்றுசேர்த்து விடுங்கள்.. பாட்டி தாத்தாவும் பேரக் குழந்தைகளும். மகிழ்ச்சியாய் விளையாடட்டும்!!

மொபைல் போனை முதலில் வைத்திருந்தவர்கள் ஆச்சரியப்படுத்தினார்கள். இப்போது வைத்திருக்காதவர்கள் ஆச்சரியப்படுத்துகிறார்கள்...!!!

# சித்த மருத்துவக் குறிப்புகள்



- **கண்ணோய் தீர**
  வெள்ளை (அ) சிவப்பு நந்தியாவட்டைப் பூவைப் பிழிந்து, அந்த ரசத்தை 2-3 துளி கணக்காய் காலை மாலை கண்களுக்கு விட்டுவர கண்ணோய் தீரும்.
- **சேற்றுப் புண்ணுக்கு**
  மருதோன்றி இலையை அரைத்துப் பூச குணமாகும்.
- **நகச்சுற்று குணமாக**
  வெற்றிலையுடன் கற்சுண்ணாம்பு சேர்த்தரைத்து சீழ்கோர்த்த நகச்சுற்றுக்குப் பூசலாம்.
- **முகப்பரு குணமாக**
  சங்கை பன்னீரில் உரைத்துப் பூசலாம்.
- **பொடுகு குணமாக**
  வெள்ளை மிளகு (அ) நல்ல மிளகை பாலில் அரைத்து தலைக்குத்தடவி குளித்துவந்தால் பொடுகு வராது.
- **கண்நீர் கோர்த்தல் தணிய**
  மஞ்சள் நீரில் ஒரு சிறிய வெண்சீலைத்துண்டை நனைத்து நிழலிலுலர்த்தி வைத்துக்கொண்டு கண்நோய் உள்ளவர்கள், இச்சீலையைக் கொண்டு கண்களைத் துடைத்துவர கண்சிவப்பு, கண்ணருகல், கண்வலி, கண்ணில் நீர்கோர்த்தல் இவை தணியும்.
- **புகையிலை நஞ்சுக்கு**
  வெங்காயக் கிழங்கு சாற்றை உட்கொள்ள புகையிலை நஞ்சு மாறும்.
- **குடிவெறியின் பற்று நீங்க**
  மிளகாய்ச் செடியுடன் இலவங்கைப்பட்டை, சக்கரை சேர்த்து குடிநீரிட்டுக் கொடுக்க குடிவெறியின் பற்று நீங்கும்.
- **நீரிழிவு நீங்க**
  தொட்டாற்சிணுங்கி இலையையும், வேரையும் உலர்த்திப் பொடித்து பாலில் 4-8 கிராம் சேர்த்துக் கொடுக்க நீரிழிவு நீங்கும்.
- **நரம்புத் தளர்ச்சி நீங்க**
  அமுக்கராக் கிழங்கு பொடி 1 பங்கும், கற்கண்டு 3 பங்கும் சேர்த்து, வேளைக்கு 4 கிராம் காலை மாலை உட்கொண்டு, அரை அல்லது ஓர் ஆழாக்குப் பசுவின் பால் சாப்பிட்டுவர நரம்புத் தளர்ச்சி நீங்கும்.
- **வீக்கத்திற்கு ஒற்றடம்**
  நொச்சி இலையை வதக்கி ஒற்றடமிட வீக்கம், கீல்வாயு தீரும்.
- சுத்தமான தேங்காய் எண்ணெயை சுடவைத்து, அதில் ஒரு தேற்கரண்டி தேங்காய்ப்பால் விடவும். அது கொதித்து அடங்கியதும் ஒரு கரண்டி கஸ்தூரி மஞ்சள் பொடி சேர்த்து இறக்கவும். ஒரு வயதுவரை குழந்தையின் உடலில் இந்த எண்ணெய் தேய்த்து பின்னர் பாசிப் பயறு மாவு தேய்த்து குளிக்கவைப்பதன் மூலம் சரும நோய்கள் வராமல் தடுக்கலாம்.

# சமையல் குறிப்பு

## தேங்காய் முட்டைக் குழம்பு



### தேவையானவை:

அவித்த முட்டைகள் - 3,
மிளகாய்த்தூள் - 1 தேக்கரண்டி
மல்லித்தூள் - 1 தேக்கரண்டி
மஞ்சள் தூள் - 1/2 தேக்கரண்டி
உப்பு - தேவையான அளவு
தேங்காய் - 5 பத்தைகள்
தக்காளி - 2, வெங்காயம் - 2
தாளிக்க - கடுகு, எண்ணெய், கறிவேப்பிலை

### செய்முறை :

தேங்காயை மைய அரைத்துக்கொள்ளவும். வெங்காயத்தையும், தக்காளியையும் பொடியாக நறுக்கிக்கொள்ளவும். ஒரு பாத்திரத்தில் எண்ணெய் ஊற்றிக் காய்ந்ததும் கடுகு, கறிவேப்பிலை போட்டுத் தாளித்து வெங்காயத்தைப் போட்டு வதக்கவும். வெங்காயம் வதங்கியதும் தக்காளியைப் போட்டு வதக்கி பிறகு மிளகாய்த்தூள், மல்லித்தூள், மஞ்சள் தூள் உப்பு சேர்த்து சிறிது நீரவிட்டு கொதிக்கவிடவும்.

குழம்பு பதத்துக்குவரும்போது அரைத்து வைத்துள்ள தேங்காய் விழுதைச் சேர்த்து ஒரு கொதி கொதிக்கவிடவும்.

குழம்பு சேர்ந்து வந்ததும் முட்டைகளைத் தோல் உரித்து குழம்பில் போட்டு இறக்கவும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருவழிபாடு

## திருவழிபாடு பற்றிய கேள்வி பதில்களும் இறையியல் விளக்கங்களும்

### தொடர் 7 -

## 2.9.2 நியமனம் பெறாத பிற பணியாளர்கள்

**133. இதில் யாரெல்லாம் இடம்பெறுவர்?**

பாடல் குழுவினர், திருவழிபாட்டுக் குழுவினர், பீடப் பணியாளர்கள் (Altar servers), வாசகர்கள் (Readers), கோவில் பணியாளர்கள் (Sacristans), வேதியர்கள் (Catechists), விளக்கவுரையாளர் (Commentator), காணிக்கைப் பொருள்களை கொணர்பவர், கோவிலில் உண்டியல் எடுப்பவர் ஆகியோர் நியமனம் பெறாத பிற பணியாளர்கள்.

**134. பாடல் குழுவினரின் பணி என்ன?**

திருவழிபாட்டுப் பாடல்களுக்கான சிறப்புப் பயிற்சி செய்தல் வேண்டும். தாங்கள் பாடுவதோடு மட்டுமல்லாமல் எல்லா நம்பிக்கையாளரும் பாடுவதற்குத் துணையாக இருக்க வேண்டும். வாசகங்களுக்கு ஏற்ற பொருத்தமான பாடல்களைத் தேர்வுசெய்து பாடவேண்டும். இது இவர்களின் கடமையும்கூட.

**135. பங்குத் திருவழிபாட்டுக் குழுவினரின் பணி என்ன?**

- ஒவ்வொரு வாரமும் பங்கு அருள்பணியாளரின் தலைமையின்கீழ் கூடி, வருகின்ற ஞாயிறு திருப்பலிபற்றிக் கலந்துரையாடித் திட்டமிட்டு, முன்தயாரிப்புப் பணிகளை மேற்கொள்ள வேண்டும்.
- ஞாயிறு வாசகங்களுக்கு ஏற்ற மையக்கருத்தை முடிவுசெய்து, அதற்கேற்ற முன்னுரை, விளக்கவுரைகள் ஆகியவற்றைத் தயாரித்தல் வேண்டும்.
- வாசகர்களுக்கு சிறப்புப் பயிற்சி அளிக்க வேண்டும்.
- பொருத்தமான பாடல்களைத் தேர்வுசெய்து, பாடல் குழுவினர் பாட உதவிட வேண்டும். வாசக நூலில் உள்ள பதிலுரைத் திருப்பாடலைப் பாட/ வாசிக்கத் தூண்டிட வேண்டும்.
- வாசகம், மறையுரை இவற்றோடு தொடர்புடைய நம்பிக்கையாளரின் மன்றாட்டுகளை எழுதியோ, சொந்தமாகச் சொல்லியோ சிறப்பாகப் பங்கேற்க வேண்டும்.
- ஞாயிறு திருப்பலிகளில் மேற்குறிப்பிட்ட பவனிகளைச் (காண்க கேள்வி எண்?) செயல்படுத்த ஆவனசெய்ய வேண்டும்.
- தீப, தூப, மலர் அஞ்சலி செய்பவர்கள் இதற்கான செயலுக்கு முன்கூட்டியே தயாரிக்கப்பட வேண்டும்.
- கோவிலையும், பலிப்பீடத்தையும், வாசக மேடையும் பொருத்தமான விதத்தில் அணிசெய்ய வேண்டும்.
- இறை வாசகங்களுக்கு ஏற்ற சுவரொட்டிகள், படங்கள் போன்றவற்றைத் தயாரித்து, மக்களின் பார்வைக்கு வைத்து, பொருளுள்ள பங்கேற்பிற்கு வழிவகுத்தல் வேண்டும்.
- அருளடையாளக் கொண்டாட்டங்களின்போது அவற்றிற்கான சிறப்புத் தயாரிப்பு செய்தல் நல்லது. அருளடையாளக் கொண்டாட்டத்தில் பங்கேற்போர்க்கு வழிகாட்டுதல் அவசியம்.
- கோவிலும், திருப்பலி உடைகள், திருக்கலங்கள் ஆகியவையும் தூய்மையாக இருக்க உதவுதல், கவனம் செலுத்துதல்.
- திருவழிபாட்டுக் குழுவினர் மற்ற அனைத்துக் குழுவினரையும் திருவழிபாட்டில் சிறப்புப் பங்கெடுக்க உதவிட வேண்டும்.
- எல்லாவற்றிற்கும் மேலாக, கிளைப் பங்குகளின் திருவழிபாட்டுக் கொண்டாட்டங்களுக்கு உதவிட வேண்டும்.

**136. பீடப்பணியாளர்கள் என்பவர் யார்? அவர்களின் பணி என்ன?**

பீடப்பணியாளர்கள் பீடத்தில் அருள்பணியாளருக்கு திருவழிபாட்டு நிகழ்வுகளில் உதவிபுரிபவர்கள். இவர்கள் திருப்பலி, அருளடையாளக் கொண்டாட்டங்கள், திருச்சடங்கு நிகழ்வுகள் ஆகியவற்றிலும் திருவழிபாட்டு இடங்களையும் பொருள்களையும் ஆள்களையும் புனிதப்படுத்துதல் போன்ற வழிபாட்டு நிகழ்வுகளிலும் அருள்பணியாளருக்கு உதவிபுரிதல் இவர்களின் சிறப்பான பணி ஆகும்.

திருப்பலியில் பவனியின் தொடக்கத்தில் திருச்சிலுவையைத் தாங்கிவருவதும், பீடத்தில் மெழுகுத்திரிகளை ஏற்றுவதும், தூபமிடுவதில் துணைபுரிவதும், திருப்பலிக் கலங்களைப் பீடத்தில் வைப்பதும், அருள்பணியாளருக்கு உதவுவதும் இவர்களது பணிகளில் சிறப்பானவைகளாகும். மேலும் திருப்பலியின்போது காணிக்கைகளை மக்களிடமிருந்து பெறுவதும், புனித வியாழன் அன்று பாதம் கழுவும் சடங்கின்பொழுது பன்னிரு திருத்தூதர்களாக நியமிக்கப்பட்டவர்களை அத்திருச்சடங்குக்கு அழைத்துவருவதும் அவர்களது பணிகளே.

**137. பீடப்பணியாளர்கள் திருப்பலியின்போது எப்பொழுதெல்லாம் மணி ஒலிக்கச் செய்ய வேண்டும்?**

1. அருள்பணியாளர் தம் கைகளை அப்பம் மற்றும் இரசக் கிண்ணத்தின்மீது விரித்து, சிலுவை அடையாளம் வரையும்போது.
2. அப்பத்தை உயர்த்திப் பிடிக்கும்போது
3. இரசக் கிண்ணத்தை உயர்த்திப் பிடிக்கும்போது
4. 'இவர் வழியாக இவரோடு இவரில்' பாடும்போது
5. 'இதோ இறைவனின் செம்மறி' என்ற மன்றாட்டைச் சொல்லி முடித்து, திருஇரத்தத்தைப் பருகும்போது.



**138. வாசகத்தைப் பறைசாற்றுபவர் எவ்வாறு தமது பணியை ஆற்ற வேண்டும்?**

இறைவார்த்தையை வாசிப்பது என்பது உரிமையோ கௌரவமோ அல்ல. மாறாக, ஆவியாரின் கொடை: இது மக்களை நம்பிக்கைக்கு அழைக்கும் ஒரு பணி. எனவே வாசகத்தைப் பறைசாற்றுபவர் அனைவருமே சிறப்புடன் ஆற்ற வேண்டும். எனவே அவர்களுக்குச் சிறப்புப் பயிற்சி வேண்டும். பத்து நிமிடத்திற்குமுன் பயிற்சி போதும் என்று மட்டும் இருந்துவிடக்கூடாது: நன்கு பொருள் உணர்ந்து வாசித்துப் பார்க்க வேண்டும்: அப்போதுதான் அது உண்மையான பறைசாற்றலுக்கு வித்திடும்:

இரண்டாவதாக, வாசகத்தோடு வேண்டுதல் மனநிலையைக் கொண்டிருக்க வேண்டும்: வாசகத்தின் வழியாகக் கடவுளின் திட்டத்தைக் கண்டு உணர வேண்டும்: வாசகம் வலியுறுத்துவதை வெளிப்படுத்த வேண்டும்.

அனைவரும் இப்பணியைச் சிறப்புடன் ஆற்ற வேண்டும் என்றால் இதற்கான பொறுப்பில் உள்ளவர்கள் சிறப்புக் கவனம் செலுத்த வேண்டும்.

**139. கோவில் பணியாளர்களின் பணி என்ன?**

இவர்களுள் பயிற்சி பெற்றவர்களும் உள்ளனர்: பயிற்சி பெறாதவர்களும் உள்ளனர். இவர்கள் கோவிலில் இறைவேண்டலை ஆரம்பிப்பது, நிறைவு செய்வது, கோவிலில் மணி அடிப்பது, கோவிலில் பொருள்களை ஒழுங்குசெய்வது, திருப்பலிக்குத் தேவையானவற்றைத் தயார் நிலையில் வைப்பது போன்ற பணிகளில் ஈடுபடுகின்றனர்.

**140. வேதியர்களின் பணி என்ன?**

இவர்கள் வேதியர்க்கான பயிற்சிநிலையத்தில் சிறப்புப் பயிற்சி பெற்றவர்கள். பங்கு அருள்பணியாளர்கள் செல்ல இயலாத இடங்களுக்கும் சென்று பணியாற்றுபவர்கள். இவர்களது சிறப்புப் பணிகள்: அருளடையாளக் கொண்டாட்டங்களுக்கு அவ்வருளடையாளங்களைப் பெறுவோரையும், இறைமக்களையும் தயாரிப்பது, பங்குகளில் மறைக்கல்வி ஆற்றுவது, நற்செய்திப்பணி ஆற்றுவது, திருவழிபாட்டைச் சிறப்பிக்க உதவும் பல நிலைகளிலும் பங்களிப்பது போன்றவை.

**141. திருவழிபாட்டில் விளக்கவுரையாளர்களின் பங்கு என்ன?**

உரோமைத் திருப்பலி நூலின் பொதுப் போதனை கீழ்வருமாறு கூறுகிறது: "இவர் தேவைக்கு ஏற்ப நம்பிக்கையாளருக்கு விளக்கவுரைகள், அறிவுரைகள் போன்றவற்றைச் சுருக்கமாக வழங்குவார். இதனால் திருப்பலிக் கொண்டாட்டத்தை மக்களுக்கு அறிமுகப்படுத்தி, அதை அவர்கள் ஆழ்ந்து புரிந்துகொள்ள உதவுவார். விளக்கவுரையாளரின் குறிப்புகள் **நன்றாகவும் சுருக்கமாகவும்** தயாரிக்கப்பட வேண்டும். விளக்கவுரையாளர் தம் பணியை நிறைவேற்றும்போது மக்கள்முன் தக்க இடத்தில் நிற்பார். ஆனால் அவர் வாசக மேடையைப் பயன்படுத்தக்கூடாது" (எண் 105ஆ). இவ்வாறு விளக்கவுரையாளர்கள் இறைமக்களைத் திருவழிபாட்டில் முழுமையாகவும் பொருளுணர்ந்தும் செயல்முறையிலும் பங்கேற்கத் தூண்டுகின்றனர்.

**குறிப்பு:** ஒரே விளக்கவுரையாளர்தான் இப்பணியில் ஈடுபட வேண்டும்.

**142. காணிக்கைப் பொருள்களைக் கொணர்பவர் யார்?**

காணிக்கைப் பொருள்கள் திருக்கூட்டத்தினரிடமிருந்தே பலி நிறைவேற்றுபவரிடம் கொண்டுவரப்படுகின்றன. பீடப்பணியாளர்கள் தவிர, பிற வேளைகளில் இதற்கென்று ஆள்கள் முன்கூட்டியே நியமிக்கப்படுகின்றனர் (எடுத்துக்காட்டாக, திருமண விழா, புதுநன்மை விழா).

**143. கோவிலில் உண்டியல் எடுப்பவர் யார்?**

தொடக்கக்காலத் திருச்சபையிலிருந்தே திருவழிபாட்டுக் கொண்டாட்டங்களின்போது உண்டியல் எடுக்கும் வழக்கம் இருந்து வந்திருக்கிறது (1கொரி 16: 1-4). இப்பணியை பொதுநிலையினர் யார் வேண்டுமானாலும் செய்யலாம்: எடுத்துக்காட்டாக, கோவில் பணியாளர், பீடப்பணியாளர், அன்பியப் பணியாளர் போன்றோர்.

**குறிப்பு:** இக்காணிக்கை பங்கு அருள்பணி நலனுக்காகப் பயன்படுத்தப்படுகிறது.

## 2.10 திருப்பலியின் சின்னங்கள்

"கண்காணிப்பாளர்கள் (Bishops) கடவுள் பணியில் பொறுப்பாளர்களாய் இருப்பதால், ... தங்களுக்குக் கற்பிக்கப்பட்ட உண்மைச் செய்தியைப் பற்றிக்கொண்டிருக்க வேண்டும். அப்பொழுது அவர்கள் நலந்தரும் போதனையை அறிவுறுத்தவும் எதிர்த்துப் பேசுவோரின் தவற்றை எடுத்துக்காட்டவும் வல்லவர்களாய் இருப்பார்கள்" (தீத்து 1:9).

## 2.10.1 ஆயருக்கு உரிய திருப்பணியின் சின்னங்கள்

**144. ஆயருக்கு உரிய சிறப்புச் சின்னங்கள் எவை?**

தலைச்சீரா, செங்கோல், மோதிரம், மார்பில் அணியும் சிலுவை ஆகியவை.

**145. தலைச்சீரா எதன் அடையாளம்? ஆயர்கள் ஏன் திருப்பலியில் அதை அணிந்து கொள்கின்றனர்?**

புனிதத்துக்கும் மாட்சிக்கும் அடையாளமாய் இருப்பதால் அதை அணிந்துகொள்கின்றனர். அது மட்டுமல்ல அந்தத் தலைச்சீராவின் இரு கூம்புப் பகுதிகள் சில சிறப்பம்சங்களைக் கொண்டிருக்கின்றன.

அ) பழைய ஏற்பாட்டுப் பின்னணியைக் கொண்டு இது கிறிஸ்துவுக்கும் இறைமக்களுக்கும் இடையே உறவை ஏற்படுத்தும் ஓர் அடையாளமாக இருக்கிறது (லேவி 8, விப 28,39).

ஆ) இரு கூம்புப் பகுதிகள் பழைய ஏற்பாடு, புதிய ஏற்பாட்டின் அடையாளங்கள் (குறிப்பாக பலிகள் - எபி 9:23-24).

**146. செங்கோல் எதன் அடையாளம்?**

இது ஆயரின் ஞான அதிகாரத்தையும் மேய்ப்புப் பணியையும் குறித்துக் காட்டுகிறது. தம் மறைமாவட்டத்தின் எல்லைக்குள்ளாக மட்டுமே தமது அதிகாரத்தைச் செலுத்தக்கூடுமென்று காட்டுவதற்காக அக்கோலின் நுனி வளைந்திருக்கிறது.

**147. மோதிரம் எதைக் குறிக்கிறது?**

ஆயர் தம் மறைமாவட்டத்தோடு ஒருவித ஞான உறவினால் ஒன்றித்திருக்கிறார் என்பதைக் குறிக்கிறது. அதை முத்தம் செய்வது மரியாதைக்கும் மகிழ்ச்சிக்கும் அறிகுறி.

**148. மார்புச் சிலுவை குறிப்பது என்ன?**

ஆயர் தம் மார்பில் அணிந்துள்ள சிலுவை இயேசு பாடுபட்ட உண்மையான சிலுவையின் திருப்பண்டத்தைக் கொண்டுள்ளது என்பது ஒரு மரபு உண்மை. இது பொறுப்பு வாய்ந்த தமது பணியானது தாம் சுமக்கவேண்டிய ஒரு பாரமான சிலுவை என்று அவருக்கு நினைவுபடுத்துகிறது.

## 2.10.2 பேராயருக்கு உரியது

**149. பேராயருக்கு உரிய சிறப்பான அணிகலன் எது?**

புனிதர் அக்னேஸ் திருநாளில் திருத்தந்தையால் மந்திரிக்கப்பட்ட ஆட்டுக்குட்டிகளின் உரோமத்தினால் நெய்யப்பட்டு, கருப்புப் பட்டால் ஆன சிலுவைகளால் நடுவில் அணிசெய்யப்பட்டுள்ள பட்டையான ஒரு துகில், அதற்கு "பால்லியும்" (Pallium) என்று பெயர். இது ஆங்கில எழுத்து 'Y' வடிவில் உடையது.

குறிப்பு :

- இந்த அணிகலன் திருத்தந்தைக்கு உரியதாக இருந்தாலும் பேராயரின் பணியைச் சிறப்பிக்கும் விதத்தில் திருத்தந்தை அவர்கள் பேராயருக்கு புனித பேதுரு, பவுல் திருவிழா அன்று அணிவிக்கிறார்.
- இது திருத்தந்தையின் அருள்பணி சார்ந்தவற்றில் பேராயர் பங்குகொள்வதன் அடையாளம். திருத்தூதரகப் பீடத்தோடு உள்ள அவரது ஒன்றிப்பைக் குறித்துக் காட்டுகிறது:
- பேராயர் தனது மறைமாவட்டத்தில் மட்டும் அல்ல, தனது அதிகாரத்திற்கு உட்பட்ட துணை மறைமாவட்டங்களிலும் திருப்பலி நிறைவேற்றும்போதெல்லாம் இதை அணிந்து கொள்ளலாம்.

## 2.10.3 திருத்தந்தைக்கு உரியது

**150. ஆடம்பரமான நேரங்களில் திருத்தந்தை தம் தலைமீது அணிந்துகொள்வது என்ன?**

ஒன்றின் மேல் ஒன்று வைக்கப்பட்ட மூன்று முடிகள் கொண்ட முக்கீரிடம். இம்மூன்று முடிகள் அவர் செலுத்தும் மூன்று அதிகாரங்களைக் குறிக்கின்றன.

1. அவர் உரோமையின் ஆயர்:
2. திருச்சபையின் தலைவர்
3. உலக அரசர்

குறிப்பு : இப்போது இது அணியப்படுவது இல்லை.

**151. திருத்தந்தை அணிந்துகொள்ளும் மோதிரத்திற்கு என்ன பெயர் வழங்கப்படுகிறது?**

அதில் புனிதர் பேதுரு கடலில் வலை வீசிக்கொண்டிருப்பதன் படம் செதுக்கி இருப்பதால், "மீன்பிடிப்பவருடைய மோதிரம்" என்று சொல்லப்படுகிறது. புனிதர் பேதுரு இயேசுவால் "மனிதரைப் பிடிப்பவன் ஆவாய்" (லூக் 5:10) என்று அழைக்கப்பட்டதன் நினைவாக திருத்தந்தை அந்த மோதிரத்தை அணிந்துகொள்கிறார். புனித பேதுருவின் வாரிசு இவர் என்பதையும் இது சுட்டிக்காட்டுகிறது.

(அடுத்த மாத இதழிலும் தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விவிலியக் குறுக்கெழுத்துப்போட்டி இல.167

## சீராக்கின் ஞானம் 21 முதல் 40 முடிய

உங்கள் விடைகளை ஓகஸ்ட் மாதம் 15ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பிவைக்கவும். சரியான விடைகளை எழுதும் மூன்று அதிஸ்ரசாலிகளுக்கு பரிசுத்தொகைகள் அனுப்பிவைக்கப்படும். பாராட்டுப்பெறும் 50 பேருடைய பெயர் விபரங்கள் மன்னாவில் பிரசுரிக்கப்படும். (பதிப்பாசிரியர்)

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 04 | | | | | | | | | 11 |
| | | 22 | | | 06 | | | | |
| 07 | | | | | | 20 | | 21 | 17 |
| 10 | | | | | | | 18 | 15 | |
| | 09 | | | | ❖ | | | | |
| 23 | | | | 01 | | 19 | | | |
| | | | 05 | | | | | | 13 |
| | | | | 14 | | | | 16 | |
| | ❖ | 08 | | | 03 | | | | |
| 02 | | | | | | | | | 12 |

உங்கள் விடைகளை, *குறுக்கெழுத்துப் போட்டி, மன்னா பத்திரிகை அலுவலகம், கலையருவி, இல. 116/3, சென். ஜோசப் வீதி, பெற்றா, மன்னார்* என்ற முகவரிக்கு அனுப்பவும்.

### இடமிருந்து வலம்

1. மதி கெட்டோரைப் பொறுத்துக்கொள்வதைவிட மணல், ............, இரும்புத்துண்டு ஆகியவற்றைச் சுமப்பது எளிது.
2. நலம் ............. சில வேளைகளில் மருத்துவர்கள் கையில் உள்ளது எனக் கூறக்கூடிய நேரமும் உண்டு.
3. .......... அறிவாற்றலால் ஆண்டவர் அவர்களை வேறுபடுத்தினார்.
4. .............. அவரைத் தேடுவோர் அவரது பரிவைப் பெற்றுக்கொள்வர்.
5. இறந்தோருக்காக ...............
6. நெறிகெட்டோரின் கூட்டம் ............ குப்பை போன்றது.
7. வனப்பையும் அழகையும் ............. நாடுகிறது.
8. அதன் முடிவில் கீழுலகின் ............ உள்ளது.
9. ................ இல்லையேல் மனிதன் பெருமூச்சுவிட்டு அலைவான்.
10. என் உதடுகளை நுண்ணறிவு எனும் முத்திரையிட்டு ............ யார்?

### வலமிருந்து இடம்

1. ................ இறைவனே நலம் அருள்கிறார்.
5. அவற்றை .................... செய்வதில் விழிப்பாய் இருக்கிறார்கள்.
6. .............. தழும்பை உண்டாக்கும்.
11. சலிக்கின்றபோது .......... உமி தங்கிவிடுகின்றது.
12. ................ அழகினில் மயங்கிவிடாதே
13. .............. கலன்களை, சூளை பரிசோதிக்கின்றது.
14. ............. போன்று நறுமணம் பரப்புங்கள்.
15. .......... வெறுமையான, பொய்யான நம்பிக்கை கொண்டுள்ளனர்.
16. இரைக்காகப் பதுங்கிச் ................ காத்திருக்கின்றது.
17. மனம் ........... அழு:
20. நல்ல மனிதர் தமக்கு அடுத்திருப்பவருக்குப் ................ நிற்பர்.

### மேலிருந்து கீழ்

1. அவர்கள் ................. ஓட்டுவதில் தங்கள் உள்ளத்தைச் செலுத்துகிறார்கள்.
11. ................ வளமான வயலைத் தேடு:
15. ............ வாழ்க்கை, நாள்களின் எண்ணிக்கையில் அடங்கும்:
16. கட்டளைகளை நினைவில்கொள்: அடுத்தவர்மீது ............. கொள்ளாதே.
18. .................. வாக்குவாதம் நெருப்பை மூட்டுகிறது:
22. பேறுகாலப் பெண்போன்று உள்ளம் .............. செய்கிறது.

### கீழிருந்து மேல்

4. எளிய உணவே ஏழைகளுக்கு ....................
2. ............... அழகு அவளுடைய கணவனை மகிழ்விக்கும்.
7. மருந்து செய்வோர் இவற்றால் .................. செய்கின்றனர்.
12. இலவங்கப் பட்டைபோலும், பரிமளத்தைலம் போலும் ........... கமழ்ந்தேன்.
19. எல்லா நீர்நிலைகளிலும் ஆற்றங்கரைகளிலும் வளரும் நாணல், ................ வருகைகளுக்கு முன்னரே பிடுங்கி எறியப்படும்.
21. அவர்கள் வைகறையில் ................. எழுகின்றார்கள்.
23. நீதிமான்களின் ............. ஏற்றுக்கொள்ளத்தக்கது.

# விவிலியக்குறுக்கெழுத்துப் போட்டி இல. 165

## சரியான விடைகளை அனுப்பியவர்களில் பரிசுபெறும் மூன்று அதிஸ்ரசாலிகள்:



**முதலாம் பரிசு:**
எ. ஹிவெக்ஷா,
எமில்நகர், ஜிம்றோன் நகர்,
மன்னார்.



**இரண்டாம் பரிசு:**
V. G. சஜி,
சாந்திபுரம்,
மன்னார்.

**மூன்றாம் பரிசு:**
R. ஜெகநாதன்,
மடுக்கரை,
நானாட்டான்.

விடைகளை எழுதி அனுப்பியவர்கள் 77 பேர்.
சரியான விடைகளை எழுதியோர் 66 பேர்.

# விவிலியக் குறுக்கெழுத்துப்போட்டி இல. 165ல் சரியான விடைகளை அனுப்பியவர்களில் பாராட்டுப் பெறும் போட்டியாளர்கள்

01. என். சி. ஆன் யூலியானி றோச், பள்ளிமுனை, மன்னார்.
02. செ. ஞானச்சந்திரா, செட்டிக்குளம், வவுனியா.
03. அ. அமில்டன், வேதசாட்சி கோவிலடி, தோட்டவெளி, மன்னார்.
04. I. இருதயமேரி, கற்குளம் - 2, ஆசிக்குளம், வவுனியா.
05. அருள்நேசராசா அன்பு, இலுப்பைக்கடவை, மன்னார்.
06. வி. வேஜின் டிலைக்சனா, சின்னப்பண்டிவிரிச்சான், மடு.
07. K. துளசிகா, சிதம்பரபுரம், ஆசிக்குளம்.
08. ந. ஆன் மயூரிகா, வேப்பங்குளம், வவுனியா.
09. A. தீப்பிக்கா, இலுப்பைக்கடவை, மன்னார்.
10. V. J. M. றெஜினா, தேக்கவத்தை, வவுனியா.
11. M. J. லெம்பேட், கன்னியர்மட வீதி, மன்னார்.
12. ராணி அரசரத்தினம், தபால் கந்தோர்வீதி, மன்னார்.
13. தேவிகா பத்மராஜா, பெற்றா, மன்னார்.
14. N. திலைக்ஷனா குரூஸ், 1ம் வட்டாரம், பேசாலை.
15. து. செபதீக்கா, புதுக்கமம், உயிலங்குளம்.
16. பி. டக்சா பீரிஸ், முத்தரிப்புத்துறை.
17. செ. ஆனந் டில்ஷான் மொறாய்ஸ், 1ம் வட்டாரம், வங்காலை.
18. அ. அன்ரனிக்கா, களிமோட்டை, முருங்கன்.
19. சுமங்கனா அல்போன்ஸ், பெற்றா, மன்னார்.
20. ச. பத்திநாதன் பீரிஸ், பெரிய பண்டிவிரிச்சான், மடு.
21. T. தனுஷன், வேப்பங்குளம் பங்கு, தாஸ்கோட்டம்.
22. சா. டெய்சி லியோன், முத்தரிப்புத்துறை.
23. S. அன்ரன் குரூஸ், 6ம் வட்டாரம், வங்காலை.
24. ஆ. மேரி யோசப்பின், மாதிரிக்கிராமம், வங்காலை.
25. T. S. லீலாவதி, சாந்திபுரம், மன்னார்.
26. கிறிஸ்ரின் ஏஞ்சல் டலிமா, 1ம் வட்டாரம், பேசாலை.
27. அமலதாஸ் ஜெஸ்லின், பாப்பாமோட்டை, மன்னார்.
28. அ. இசக்கியேல், ஜோசப்வாஸ்நகர், தோட்டவெளி.
29. R. மீரா, பள்ளிமுனை கிழக்கு, பள்ளிமுனை, மன்னார்.
30. அ. சுதர்சினி லெம்பேட், சிறுக்குளம், பறப்பாங்கண்டல்.
31. M. சகாய டெனிஸ், தலைமன்னார் பியர், தலைமன்னார்.
32. யோ. யூடிற் டலிமா, தோமஸ்புரி, வங்காலை.
33. டொ. டர்லின் றொக்சி, சிறுத்தோப்பு, பேசாலை.
34. S. சுபராணி, P. S. L., தபால் கந்தோர் வீதி, மன்னார்.
35. A. கில்டா, கட்டையடம்பன், மடுவீதி.
36. A. நந்தினி, பெரிய பண்டிவிரிச்சான், மடுக்கோவில், மடு.
37. யோ. மிரியம் டர்ஷிக்கா, நானாட்டான்.
38. றூ. மேரி ராஜ்மி டயஸ், 5ம் வட்டாரம், வங்காலை.
39. ஜீவரெட்ணம் யசிந்தா, 6ம் வட்டாரம், விடத்தல்தீவு.
40. அ. அகஸ்ரீனா, உயிர்த்தாரசன்குளம், முருங்கன்.
41. A. J. பீற்றர் பீயன் மனோ, பள்ளிமுனை கிழக்கு, மன்னார்.
42. M. நேசன் ஜீவிதா, பாப்பாமோட்டை, மன்னார்.
43. N. செபமாலை மரியம்மா பீரிஸ், ஆனாள்நகர், வங்காலை
44. அ. அனுஷியன், களிமோட்டை, முருங்கன்.
45. மேவின் செனாலி குரூஸ், பேசாலை.
46. ம. பிளண்ரீனா, கன்னியர்மட வீதி, மன்னார்.
47. றொபின் கிறிஸ்ரி றிதுசன், தோட்டவெளி, மன்னார்.
48. க. மடோனா, கற்குளம் - 2, வவுனியா.
49. M. ஷெரீனா ஷெஹானி, இலுப்பைக்கடவை, மன்னார்.
50. அ. ஸ்ரெலா மேரி, துட்டுவாகை, நேரியகுளம்.

# யூபிலி விழாக் காணும் தேவன்பிட்டி பங்கு ஓர் பார்வை

புதிய மன்னார் மறைமாவட்டம் ஆரம்பிக்கப்பட்டு (1981) பத்து வருடங்களுக்குப் பின்னர் 1991ஆம் ஆண்டு அன்றைய மன்னார் ஆயர் மேதகு தோமஸ் சௌந்தரநாயகம் ஆண்டகை அவர்களினால் தேவன்பிட்டி புதிய பங்காகப் பிரகடனப்படுத்தப்பட்டது. முதல் பங்குத்தந்தையாகிய அருட்பணியாளர் டெஸ்மன்ட் குலாஸ் தொடக்கம் இன்றைய பங்குத்தந்தையாகிய அருட்பணியாளர் எஸ். அருட்குமரன் வரை பதின்மூன்று பங்குத்தந்தையர்கள் கடந்த இருபத்தைந்து வருடங்களில் இப்பங்கில் பணியாற்றியுள்ளனர்.

அருட்பணியாளர்கள் டெஸ்மன்ட் குலாஸ், எஸ். ஸ்ரீபன்ராஜா, எஸ். கே. தேவராஜா, எஸ். மரியதாசன், டி. அலக்ஸ்சாண்டர் சில்வா, எம். ஜெயபாலன், ஏ. சகாயநாதன் (தி.ப.), என். பாக்கியறஞ்சித், பி. அருள்நாதன் (அமதி), கே. சுகுணராஜ் குரூஸ், ஏ. மரியதாசன் குரூஸ், எவ். யூட் ஞானராஜ் குரூஸ், ஏ. றஜனிகாந் (தற்காலிகம்), எஸ். அருட்குமரன் ஆகியோர் இப்பங்கில் பங்குத்தந்தையர்களாகப் பணியாற்றியுள்ளனர்.

கல்வி, பொருளாதாரம் போன்ற பல்வேறு நிலைகளில் பின்தங்கிய மக்களை அதிகமாகக் கொண்ட இந்தப் புதிய பங்குத்தளப் பணியானது கடந்த 25 வருடங்களில் பாரிய பலன்கொடுத்துள்ளதைக் காணமுடிகிறது. குறிப்பாக வாழ்வாதார முயற்சிகள், கல்வி வளர்ச்சி போன்ற துறைகளில் இப்பங்குப் பணித்தளம் பல முன்னேற்றங்களைக் கண்டுள்ளது. ஆகவே இந்த யூபிலி நிகழ்வானது கடந்தகால முன்னேற்றங்களை திரும்பிப்பார்த்து நினைவுகூர்கின்ற மகிழ்வின் தருணமாக அமைந்திருந்தது. (தொடர்ச்சி 11ம் பக்கம்)

## சீனாவின் மிக உயரமான ......

3ஆம் பக்கத் தொடர்ச்சி

படகு போன்ற வடிவமைப்புடன், 75 மீட்டர் உயரத்துடன் கட்டப்பட்டுள்ள இந்தக் கத்தோலிக்க கோவிலே, சீனாவின் மிக உயரமுடைய கத்தோலிக்க கோவிலாக அமைந்துள்ளது. இக்கோவில் அமைந்திருக்கும் சுசோ (Suzhou) பகுதியில் முதன்முதலில் 1616ம் ஆண்டு இத்தாலிய இயேசுசபை அருள்பணியாளர் ஜியுலியோ அலனி (Giulio Aleni) நற்செய்தி அறிவித்தார். குன்ஷான் (Kunshan) நகரில் 1911ஆம் ஆண்டு கட்டப்பட்ட இந்த ஆலயம் 1949ஆம் ஆண்டு ஆட்சிக்குவந்த கம்யூனிச அரசால் பறிமுதல் செய்யப்பட்டு, கல்விக்கூடமாக மாற்றப்பட்டது. 1992ஆம் ஆண்டு திருப்பி வழங்கப்பட்ட அந்த இடத்தில் பெரிய கோவில் ஒன்று கட்டுவதற்கான முயற்சிகள் 2004ம் ஆண்டு தொடங்கப்பட்டு தற்போது நிறைவுபெற்று புதிய கோவில் திறக்கப்பட்டுள்ளது.

## பணமும் பதவியும் ....

1ஆம் பக்கத் தொடர்ச்சி

இயேசு இவ்வுலகுக்குப் பணிபுரிவதற்கேயன்றி பணிவிடை பெறுவதற்காக வரவில்லை. ஆனால், திருச்சபையின் ஒவ்வொரு நிறுவனத்திலும் உலகாயுத உணர்வுகள் தெரிகின்றன. இவையெல்லாமே செல்வம், பெருமை, கர்வம் ஆகியவற்றைப் பற்றியதே. ஆனால் பணிவும், தாழ்மையுமே கிறிஸ்தவ வாழ்வு என்று திருத்தந்தை கூறினார்.

கடவுளின் பகைவனாகிய இந்த உலகப்போக்கு உணர்வைப் புரிந்துகொள்வதற்கு ஆண்டவரிடம் வரம் வேண்டுவோம் என்று தனது மறையுரையை நிறைவுசெய்தார் திருத்தந்தை.

## திருத்தந்தை இஸ்லாமியத் ........

1ஆம் பக்கத் தொடர்ச்சி

திருப்பீட பல்சமய உரையாடல் அவைத் தலைவர் கர்தினால் ஜீன் லூயிஸ் ரவுறன், அந்த அவையின் செயலர் ஆயர் மிகுவல் ஏஞ்சல் ஆகிய இருவரும் இமாம் முகமது அல்-தாயிப் அவர்களை வரவேற்று திருத்தந்தையிடம் அழைத்துச் சென்றனர்.

முகமது அல் - தாயிப் அவர்களைக் கட்டியணைத்து வரவேற்ற திருத்தந்தை, திருத்தந்தையின் நூலகத்தில் 30 நிமிடங்கள் தனியே சந்தித்துப் பேசினார். உலக அமைதியில் பெரிய மதங்களின் பங்கு, வன்முறை மற்றும் பயங்கரவாதத்தைப் புறக்கணித்தல், மத்திய கிழக்கில் நெருக்கடியான சூழல்களில் கிறிஸ்தவர்களின் நிலை, அவர்களைப் பாதுகாப்பது போன்ற தலைப்புகள் இச்சந்திப்பில் இடம்பெற்றன என்று திருப்பீட செய்தித் தொடர்பாளர் இயேசு சபை அருள்பணி. பெதரிக்கோ லொம்பார்தி அவர்கள் கூறினார்.

இச்சந்திப்பு முடிந்து, சுற்றுச்சூழல் குறித்த, 'இறைவா உமக்கே புகழ்' என்ற திருமடல், அமைதிப் பதக்கம் ஆகியவற்றை திருத்தந்தை பிரான்சிஸ் பரிசாக அளித்தார்.

## இயற்கை வளத்தை வளமாகப் ....

1ஆம் பக்கத் தொடர்ச்சி

தொடர்ந்து மங்கல விளக்கேற்றல், வரவேற்பு நடனம் இடம்பெற்றது. வரவேற்பு உரையை மன்னார் கறிற்றாஸ் வாழ்வுதய இயக்குனர் அருட்பணி. எம். ஜெயபாலன் அடிகளார் வழங்கினார். தொடர்ந்து விருந்தினர்களின் உரைகளும் கலை நிகழ்வுகளும் இடம்பெற்றன.

மன்னார் கறிற்றாஸ் - வாழ்வுதய பணியகம், மன்னார் மறைமாவட்டத்தில் மூன்று இலக்குக் கிராமங்களைத் தெரிவுசெய்து "மானிடரை வலுவூட்டி ஏழ்மை ஒழிப்பு" என்ற திட்டத்தை நடைமுறைப்படுத்தி வருகின்றது. இக்கிராமங்களில் இயற்கைப் பசளை பயன்படுத்திய விவசாயச் செய்கைமுறை, கிருமிநாசினி பாவனையில்லாத சிறுவீட்டுத்தோட்டம், உள்ளக மூலப்பொருட்களை சாதுரியமாகப் பயன்படுத்துதல் போன்ற கருப்பொருளை செயல்முறைப்படுத்தி வருகின்றது. இவற்றை உள்ளடக்கியதாகவே மேற்படி கண்காட்சி அமைந்திருந்தது. →

இக்கண்காட்சியில் இயற்கை பசளை தயாரிப்பு, அதன் பயன்பாடுகள், பல்வகை விவசாய முறைகள், தமிழரின் பாரம்பரிய உணவு வகைகள், அவற்றின் உற்பத்தி முறைகள் என்பன உள்ளடக்கப்பட்டுள்ளன. மேலும் கிராமிய சிறு குழுக்களின் சுய உற்பத்தி பொருட்களின் விற்பனையும், பாடசாலை கற்றல் உபகரணங்களை காட்சிப்படுத்துதலும் இடம்பெற்றது.



# தயவுசெய்து அவதானியுங்கள்


நீத்தார் நினைவுகள், திருமண யூபிலி, பிறந்தநாள் நினைவுகள் போன்றவற்றைப் பிரசுரிக்க விரும்புகின்றவர்கள் எந்த மாதத்தில் இந்த நினைவுகள் பிரசுரிக்கப்படவேண்டுமோ அந்த மாதத்திற்கு முதல் மாதம் 10ம் திகதிக்கு முன்னர் அனைத்து விபரங்களையும் எம்மிடம் ஒப்படைக்க வேண்டும் என்பதை அன்போடு நினைவுபடுத்துகின்றோம்.

**கட்டணம் :**
கறுப்பு வெள்ளை 4,500/=,
கலர் 7,500/=

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நீங்காத நினைவுகள்

## 01ம் ஆண்டு நினைவஞ்சலி



மலர்வு 12 10 1929

உதிர்வு 20 06 2015

### திரு. சின்னராசா அந்தோனிப்பிள்ளை

(யோசவாஸ்நகர், தோட்டவெளி - விடத்தல்தீவு)

ஓராண்டுகள் மறைந்து போனாலும் - உம் நினைவுகள் எம்மைவிட்டு அகலாதையா. உம்பிரிவு கண்டு எம் மனம் அழுகின்றது எம் அழுகுரல் உமக்கின்னும் கேட்கவில்லையோ?

எம் மனதில் என்றும் நீங்காமல் நிறைந்திருப்பீர் உம் நினைவுகள் என்றும் நிலைத்திருக்கும் ஆறுதல் கொள்ளும் ஆண்டவன் மடியில் அமைதியில் இளைப்பாற இறைவனடி இறைஞ்சுகின்றோம்.

பிரிவால் நினைந்துருகும்:
மனைவி, பிள்ளைகள், பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்

## 8ம் ஆண்டு, 14ம் ஆண்டு நினைவஞ்சலி





திரு. டென்னிஸ் அந்தோனிப்பிள்ளை
மலர்வு : 17 - 07 - 1927
உதிர்வு : 12 - 06 - 2008

திருமதி. அந்தோனிப்பிள்ளை செபஸ்ரியம்மா
மலர்வு : 12 - 06 - 1933
உதிர்வு : 30 - 04 - 2002

"நான் நல்லதொரு போராட்டத்தில் ஈடுபட்டேன், என் ஓட்டத்தை முடித்துவிட்டேன், விசுவாசத்தைக் காத்துக்கொண்டேன்" (2 திமொத்தேயு 4:7,8)

அம்மா, ஐயா, காலங்கள் ஆண்டுகள் ஓடினாலும் எப்பொழுதும் உங்கள் முகங்கள் எங்கள் உள்ளத்தைவிட்டுப் போவது இல்லை.

(கண்டி, கல்முனை, பரீஸ், கனடா ஆகிய இடங்களில் ஆனி 12ம் திகதி இரங்கல் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்படும். முருங்கன் கிறிஸ்து அரசர் ஆலயத்தில் ஆனி 13ம் திகதி திங்கட்கிழமை காலை 6.00 மணிக்கு இரங்கல் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்படும்.

தகவல் - R. றெஜி (மகள்)

## 26ம் ஆண்டு நினைவஞ்சலி



மலர்வு 29 01 1970

உதிர்வு 21 06 1990

### செல்வன். போல் விக்ரர் விஜயதேவா

(நறுவிலிக்குளம்)

எம் பாசமிகு அன்பு விக்ரர் விஜயதேவா
ஆண்டுகள் பல ஆனாலும் எம் நெஞ்சைவிட்டு
அகலவில்லை புன்னகைக்கும் உன் பூ முகம்!
நீ மறைந்த அன்று கலங்கிய எம் கண்கள்
கண்ணீர் வடிக்கிறதே இன்றும்!

நீண்ட நாட்கள் வாழ்வாயென எதிர்பார்த்திருந்தோம்
நீ சடுதியாய் மறைந்தாயே எம்மைவிட்டு!
கர்த்தர் உன்னை அன்புடன் அழைத்திருந்தாலும்
வாழ்கிறாய் எம் மனதில் என்றென்றும்!
கர்த்தரின் சந்நிதியில் மீண்டும் உன்னைக்
காணும் நாளை ஆவலுடன்
காத்து நிற்கின்றோம்!

பிரிவால் நினைந்துருகும்:
குடும்பத்தினர்

## 06ம் ஆண்டு நினைவஞ்சலி



### செல்வன். நீக்கிலஸ் கனிலன்

(சிறுக்கண்டல். முருங்கன்)

மலர்வு : 21 - 08 - 1995
உதிர்வு : 11 - 06 - 2010

"ஆண்டவர் அளித்தார், ஆண்டவர் எடுத்துக்கொண்டார், ஆண்டவரது பெயர் போற்றப் பெறுக" (யோபு 1:21)

மாலைப் பொழுது கருகி மறையும் அந்த வேளையில் மரணத்தின் கொடுக்கால் உன்னைக் கொட்டினான் சாத்தான்.
வீழ்ந்தாய் திரும்ப எழும்பவே. விண்ணகத்தில் அனுமதிக்கவில்லை, வைத்தியசாலையில் அதிதீவிர சிகிச்சைப் பிரிவில் வயர்களால் உடல் உள் உறுப்புக்கள் அனைத்தும் பிணைக்கப்பட்டு இருந்தாய்.
பேச வாய் திறக்க முடியாமல் கால், கரங்கள் கட்டப்பட்டு இருக்கையில் உன் கன்னத்தில் வழிந்தோடிய கண்ணீரை நினைக்கையில் எங்கள் நெஞ்சத்தில் உதிரம் இன்றும் கொட்டுதடா.

மோட்சத்தின் கனிலன், உனக்காக தினமும் முழந்தாளில் செபிக்கிறோம்.
நாங்களும் பரலோகம் வந்துசேர செபிப்பாயா?

பிரிவால் நினைந்துருகும்:
அப்பா, அம்மா, அண்ணன், அண்ணி

## 01ம் ஆண்டு நினைவஞ்சலி



மலர்வு 07 08 1934

உதிர்வு 12 06 2015

### திரு. செ. அந்தோனிப்பிள்ளை கொடுதோர்

(பெரிய நாவற்குளம், திருக்கேதீஸ்வரம்)

"உயிர்ப்பும் உயிரும் நானே, என்னில் விசுவாசம் கொள்பவன் இறப்பினும் வாழ்வான்" (யோவான் 11:25)

ஆண்டொன்று போனாலும் எங்கள் ஐயா,
உங்கள் அழகு முகம் காண்பதெப்போ?
நாங்கள் சிறு வயதில் இழந்திருந்தாலும்,
தனியாக உம் சோகம் மறைத்து எம் பாசம் சுமந்து
கண் கலங்காது எம்மை வளர்த்து விட்டீர் எங்கள் ஐயா!
தாய் செய்யும் கடமைகளை கண்ணியமாக செய்து.
கடமை முடிந்தென கடுகதியில்
கடவுளிடம் விரைந்தீர்களோ ஐயா!
உங்கள் ஆன்மா சாந்தி அடைய இறைவனிடம்
வேண்டுகின்றோம்.

பிரிவால் நினைந்துருகும்:
பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்,
*தகவல்: மகள் ச. பிரான்சிஸ்கா*

## 31ம் நாள் நினைவஞ்சலி



### எஸ். செபஜீவன் குருஸ் (முத்தரிப்புத்துறை)

மலர்வு : 01 - 10 - 1993
உதிர்வு : 04 - 05 - 2016

அன்பான பேச்சும், பண்பான குணமும், அழகான வதனமும், எடுப்பான நடையும் கொண்டவனே! கண்டவர் மனம் மயங்கச் செய்யும் உன் நுனிநாக்கு ஆங்கிலம் எங்கள் காதுகளில் இப்பவும் ஒலிக்க நீ மட்டும் எங்களைத் தவிக்கவிட்டு நிலையான உறக்கம்கொண்டது ஏனடா? உன் அன்னை துடிதுடிக்க, அப்பா விழி கலங்க, பாசமான அக்கா, அண்ணா தம்பிமார் உன் நண்பர்கள், நண்பிகள் நாங்கள் ஏங்கி நிற்க, எம்மைவிட்டு ஏனடா சென்றாய்? கர்த்தர் உன் பெயரில் இருக்கும் ஜீவனைத் தராமல் போனதேனோ? நீ நித்தியத்திற்கும் இறைவீட்டில் இளைப்பாற இறைவனை வேண்டுகின்றோம்.

பிரிவால் நினைந்துருகும்: நண்பர்கள், நண்பிகள்,
RDX முத்தரிப்புத்துறை


## தயவுசெய்து அவதானியுங்கள்

நீத்தார் நினைவுகள், திருமண யூபிலி, பிறந்தநாள் நினைவுகள் போன்றவற்றைப் பிரசுரிக்க விரும்புகின்றவர்கள் எந்த மாதத்தில் இந்த நினைவுகள் பிரசுரிக்கப்படவேண்டுமோ அந்த மாதத்திற்கு முதல் மாதம் 10ம் திகதிக்கு முன்னர் அனைத்து விபரங்களையும் எம்மிடம் ஒப்படைக்க வேண்டும் என்பதை அன்போடு நினைவுபடுத்துகின்றோம்.
கட்டணம் : கறுப்பு வெள்ளை 4,500/=, கலர் 7,500/=

## மன்னாவுக்கு பணம் அனுப்பும் விபரம்

வங்கியின் பெயர் : Hatton National Bank Ltd, Mannar
பணம் பெறுபவர் பெயர் : The Editor, 'MANNA'
வங்கிக் கணக்கு இலக்கம் : S/A No. 020020029782


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# மன்னா

# நீங்காத நினைவுகள்

## 01ம் ஆண்டு நினைவஞ்சலி

### அருட்பணியாளர் சவிரி விக்ரன் அவிதப்பர்



மண்ணில் : 17.06.1959
குருத்துவம் : 06.09.1988
விண்ணில் : 22.06.2015

கண்ணில் தூக்கமில்லை, முகத்தில் புன்னகையில்லை
மனதில் நிம்மதியில்லை, வாழ்வில் சந்தோசமில்லை
மறைமாவட்டம் அதிர்ந்துபோக,
இறைமக்கள் இதயம் உதிர்ந்துபோக
உறவுகள் உருகித் தவிக்க நீர் விடைகொடுத்தது ஏனோ?
உற்சாகமாக ஊசலாடும் பருவமதில்
ஊர் ஊராய் சுற்றிவரும் பருவமதில்
உறவுகளோடு இணைந்து வாழும் பருவமதில்
இறை அழைத்தலுக்கு செவிமடுத்தீர்!
வெள்ளை நிறத்திலே உடை அணிந்து
குருத்துவக் கோலத்தை அலங்கரித்து
இறையன்பை இனிதே பகிர்ந்து
இறையரசைப் போதித்தீரே!
நீர் மறைந்த செய்தி கேட்டு எமது கண் விழிகளில் ஈரமது
காயுமுன்னே! ஆண்டு ஒன்றும் வந்துவிட்டதே!
புனிதரின் பாதையில் விண்ணகத்தில் வீற்றிருக்கும் நீர்
அல்லும் பகலும் எங்களுக்காய்
ஆண்டவர் இயேசுவிடம் வேண்டிடுவீர்.

பிரிவால் நினைந்துருகும்:
அம்மா மற்றும் உறவுகள் (பிச்சைகுளம், முருங்கன்)

## 02ம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு 22 – 05 – 1955



உதிர்வு 04 – 05 – 2014

### திரு. ஞா. அந்தோனிப்பிள்ளை (அந்தோனி) (கூமாங்குளம் - வவுனியா)

"ஆண்டவர் தம்
அன்பர்களின் சாவு
அவரது பார்வையில்
மதிப்பிற்குரியது"

அன்புக்கு இலக்கணமாய்,
பாசத்தின் பிறப்பிடமாய்,
பார்போற்றும் உத்தமனாய்,
பாரினிலே நீர் வாழ்ந்தீர்.

ஈராண்டு சென்றாலும்
இருவிழிகள் காயவில்லை
உனைப்பெற்ற அன்னையும்,
உன் அன்புத் தந்தையும்
விண்ணுலகில் உனைக்கண்டு
மகிழ்கையிலே!

கரம் பிடித்த உம் மனைவி உடல் நொந்து வாடி நிற்க
நீர் பெற்ற உம் மக்கள் திகைப்புற்று
நீண்ட தூரம் உனைப்பிரிந்து துடிக்கையிலே
அன்புப் பேர மக்கள் உம் நினைவால் வாடுகையில்
எங்கே நீர் சென்றீர்...? சென்ற இடம் தெரியவில்லை!
தேம்புகிறோம்... தேடுகிறோம்.....!
ஆண்டவன் சந்நிதியில் உம் ஆன்மா அமைதிபெற
இறைஞ்சுகிறோம் இறைவனிடம்!

பிரிவால் நினைந்துருகும்,
மனைவி, பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

## 01ம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு 17 – 03 – 1938



உதிர்வு 29 – 06 – 2015

### திரு. கந்தையா சேபஸ்தியாம்பிள்ளை (க/ வண்ணாகுளம், அடம்பன்)

ஓராண்டு சென்றாலும் ஓயவில்லை உங்கள் நினைவலைகள்
ஒருமுறையேனும் உங்கள் திருமுகம்
காட்ட வரமாட்டீர்களோ ஐயா?
அமைதியான வதனமும் அன்பான பேச்சும்
நேர்த்தியான உடையும்
நேர்மைக் குணமும் உங்களில் கண்டோம்.

கலங்கரை விளக்காய் வழிகாட்டி
கல்விதனில் நாம் உயர்ந்து நிற்க
காலம் எல்லாம் துணைநின்றீர்கள்
கண்ணியமாய் ஞானமதில் வாழவைத்தீர்கள்
உங்கள் ஆன்மா இறைவனில் அமைதிபெற வேண்டுகின்றோம்

பிரிவால் நினைந்துருகும்,
மனைவி, பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்
உற்றார், உறவினர்கள்.

## 08ம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு 07 – 10 – 1986



உதிர்வு 18 – 06 – 2008

### செல்வி. சேபஸ்ரியான் றோமெற்றிரணிஸ்ரா (ரூபினி) (கண்டல், திருக்கேதிஸ்வரம்)

"உயிர்த்தெழுதலும் வாழ்வும் நானே. என்னிடம்
நம்பிக்கைகொள்பவர் இறப்பினும் வாழ்வார்" (யோவான் 11:25)

ஆண்டுகள் எட்டு ஓடி மறைந்தாலும்
ஆறவில்லை எம் துயரங்கள்.
மீண்டும் எப்போ காண்போமென
ஏங்கித் தவிக்கின்றன எம் கண்கள்.
காலத்தின் சதி உங்களைப் பிரித்தது
நீங்கள் எங்களுடன் வாழ்ந்த நாட்கள்
என்றுமே எம் நினைவில் அழியாது.
இறைவனின் பேரின்ப வீட்டில்
உம் ஆன்மா அமைதி அடைய
இறைவனை என்றும் வேண்டுகின்றோம்.

பிரிவால் நினைந்துருகும் - அப்பா, அம்மா, சகோதரி

## 01ம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு 08 – 05 – 1970



உதிர்வு 27 – 05 – 2015

### திருமதி. பர்நாந்து ஸ்ரேரிக்கா (அஞ்சலா) (பொன்தீவுகண்டல்)

அம்மா! ஆண்டு ஒன்று ஓடி மறைந்ததம்மா,
பாசமான அம்மா! அம்மா அம்மா! என்று
கணப்பொழுதும் உச்சரிக்கின்றதே எம் நாவு.
இவ்வுலக வாழ்வு போதுமென்று எண்ணி
இரு விழிகள் மூடி எமைவிட்டுப் பிரிந்தீரோ?
உம்பிரிவு கண்டு எம் மனம் அழுகின்றது.
உங்கள் புன்னகைத்த பூமுகம் கண்டு
உங்கள் அன்பிற்காய் ஏங்குகின்றோம்.
மறுபடியும் எங்களிடம் வருவீர்கள் என
எதிர்பார்த்துக் காத்திருக்கின்றோம்.
இறை இயேசு பாதத்தில் இளைப்பாறுதல் அடைந்திட
இணைந்து நாம் செபிக்கின்றோம்.

பிரிவால் நினைந்துருகும், கணவன், பிள்ளைகள்,
(தாய் சகோதரர்கள், சகோதரிகள்)

## 15ம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு 23 – 02 – 1924




உதிர்வு 04 – 01 – 2001

### திரு. தோம்மை சவிரிமுத்து (ஆவணம், நானாட்டான்)

## 30ம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு 05 – 04 – 1950



உதிர்வு 13 – 07 – 1986

### சவிரிமுத்து வெற்றிநாயகம் (ஆவணம், நானாட்டான் )

"உயிர்ப்பும் உயிரும் நானே.
என்னில் நம்பிக்கைகொள்பவன் இறப்பினும் உயிர் வாழ்வான்"

காலங்கள் பல கடந்து சென்றாலும்
காலத்தால் அழிக்க முடியாத உங்கள்
அன்பும் பாசமும் ஈகையும் இரக்கமும்
என்றும் அழியாது!

ஆண்டுகள் பல ஓடிச் சென்றாலும்
உங்கள் அன்பும் அரவணைப்பும்
வழித்தடங்களும் வழிகாட்டலும்
இன்னும் எங்களை வழிநடத்துகின்றன!

இரக்கமும் இறைபற்றும் ஊக்கமும் உதவுதலும்
நீங்கள் எமக்களித்துச் சென்ற சொத்துகள்.
இவை நாமும் உம் வழிதொடர
எமக்கு உந்துசக்தியாகட்டும்.

"சீவியத்தில் நேசித்தோம்
மரணத்திலும் மறவோம்"
இறை ஒளியில் இளைப்பாறுங்கள்!

- பிரிவால் நினைந்துருகும், குடும்பத்தினர்

## 01ம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு 28 – 06 – 1982



உதிர்வு 16 – 06 – 2015

### திருமதி. பிரியசாந்தி ஜெயகுமாரன் (கறுக்காக்குளம், வட்டக்கண்டல்)

ஓராண்டுகள் அல்ல ஓராயிரம் ஆண்டுகள்
ஓடி மறைந்தாலும் ஒளிநிறைந்த திருமுகத்தில் - நாம்
ஒருநொடியேனும் மறந்தோமில்லை
பெருமகளே! பேரொளியே! நீ பெற்றெடுத்த இரு கிளிகளும்
உன் முகத்தைக் காட்டி எம்மை
மன அமைதியிலே ஆழ்த்துகின்றன!
வளர் நிலவாய் இருவரையும் வையத்தில் வாழவைப்போம்.
இறையடியில் எங்களுக்காய் இனிதுறவே மன்றாடும்.
இப்போதும் எப்போதும் உமக்காக
விழிந்திருந்து செபிப்போம்.

பிரிவால் நினைந்துருகும்: கணவன், பிள்ளைகள், அப்பா,
அம்மா, சகோதரர், மாமி, மைத்துனர்கள்.

இப்பத்திரிகை மன்னாரில் உள்ள மன்னா அலுவலகத்தில் வடிவமைக்கப்பட்டு கொழும்பு - நந்தா அச்சகத்தில் அச்சிடப்பட்டு மன்னா நிர்வாகத்தால் வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org